# VÂSAKA THIRATTU:

A

# Tamil Prose Anthology

PREPARED AND EDITED BY

M. S. PURNALINGAM PILLAI, B. A.,
*Assistant, Madras Christian College,*
*Editor of 'Seyyul Kovai' and 'Viveka Vilakam.'*

Madras:
THOMPSON AND CO.

1896.
[*All Rights Reserved*]

To the Memory

OF MY

BELOVED BROTHER-IN-LAW

# T. V. GANAPATHY PILLAI,

*an Earnest Student of Tamil and a Genius in Agriculture*

WHO SHUFFLED OFF HIS MORTAL COIL

SUNDAY, 10 P.M., OCTOBER 11, 1896.

# PREFACE.

In this land of song Prose is scarce, for gifted minds soared above the heights of the Parnassus while those not so favoured wished at least to flutter at its base. This exclusive importance attached to poetry, rather to writing verses, is slowly dying away, and gentlemen learned in the western arts and sciences have begun to devote their time and attention to rendering foreign classics into their vernaculars and offering their countrymen, especially those who have not learned English, the sweets extracted from such classics. The same impulse is perceptible in this volume. It contains, the reader will find it at a glance of the contents, stories in Tamil of English plays and poems and free translations of English essays, and also comprises selections from Tamil prose versions of Tamil classics—almost all written in a good style.

The Table of Contents gives the names of the contributors to whom I am indebted for the production of this work. I thank them heartily for their contributions and acknowledge my obligations to Mr. Suriyanarayana Sastriar, B.A., who has not only given me full permission to take what extracts I please from his works but kindly read the final proofs of this work.

*October 1896.*

M. S. P.

# விஷய சூசிகை.

1. மனோன்மணிகதை—J. P. Vasudeva Pantulu ... ... 1
(The Story of P. Sundram Pillai's *Manônmaniyam*)

2. சாதுமதி சரிதை—K. Kuppusawmy Mudeliar ... ... 11
(The Story of Shakespeare's *King Lear*)

3. மனோகரவல்லிகதை—M. S. Purnalingam Pillai, B.A. ... 17
(The Story of Tennyson's *Princess*)

4. தற்காப்பு நியமம்—V. G. Suriyanarayana Sastriar, B.A. ... 21
(The *Law of Self-Preservation* based on Herbert Spencer's *Principles of Ethics*)

5. வளவனுடு—Vidhvan Jaga Rao Mudeliar ... ... ... 31
(Prose version of a Canto in Beschi's *Thembavani*).

6. மாணிக்கம்விற்ற படலச்சுருக்கம்—Gnanaprakasa Vallalar ... 39
(The Abstract of a Canto in *Thiruvilayadal*)

7. அரசனும் புலவனும்—V. G. Suriyanarayana Sastriar, B. A. 44
(A Scene from his Drama *Rûpâvati*)

8. பிரகலாத வுபதேசம்—Srinivasa Raghava Chariar... ... 49
(Extracted from his *Vishnu Puranam*)

9. சாவித்திரி சரிதை—T. R. Sarasalochana Chettiar ... 56
(Based on the famous episode of Savitri in *Maha Bharatam*)

10. ஸ்ரீராமரும் வாலியும்—Arunachala Kavirayar ... ... 74
(Prose version of part of a Canto in Kamban's *Ramayanam*)

11. பாண்டவர் வெளிப்படுதல்—Shanmuka Kavirayar ... ... 82
(The Story from *Bharatam* of the Pandavas' throwing off their Mask)

12. தந்திரம்—S. Subramania Pillaian, B.A. ... ... ... 92
(Based on *Tact* by Sir John Lubbock)

13. சீவகாருணிய விலக்கியம்—Chidambaram Ramalingam Pillay Avergal ... ... ... ... ... ... 104
(Extracted from his *Preface to Arulpa*)

# வாசகத்திரட்டு.

## 1. மனோன்மணி கதை.

முன்னொருகாலத்திற் கல்விச்செல்வமும் பொருட்செல்வமும் ஒருங்கே யமைந்துள்ள பாண்டிவள நாட்டின்கண், **சீவகவழுதி** யென்னும் ஒரு பாண்டியராசன் மதுரையம்பதியைத் தனது தலைநகராக்கிக்கொண்டு அரசு செலுத்திவந்தான். அவன் தன்குடிகளினிடத்துக் கண்ணியமும் நன்மதிப்பும் உடையவன்; கபடமுஞ் சூதுந் தெரியாதவன். இவன் அரசாட்சியிற் பலவிதமான நன்மைகள் விளைந்தன; ஆதலின் இவனாணையினொழுகும் மன்பதையெல்லாம் களிகூர்ந்து இவனைப்பற்றிக் கொண்டாடுவார்கள். இவ்வாறு செழித்து இன்புறும் நாட்டிற்குக் கேடுகாலங்கிட்டியதோ வென்னவோ வறியேம். வஞ்சகமே ஒருவடிவமெடுத்து வந்தாற்போன்ற **குடிலன்** என்பவன் வழுதியின் மந்திரியாகுமாறு நேரிட்டது. அந்தோ! இஃது அந்நகருளார் துரதிர்ஷ்டமோ அன்றோ! இம்மந்திரி தன்னயமே கருதும் தன்மையுடையவனாதலின் மன்னனுக்கு மிகவும் விசுவாசமுடையவன்போலவும் வாய்மையுடையவன்போலவும் நடித்து அரசனை வசீகரித்துத் தன்கைச்சூத்திரப்பாவையாக்கினான். ஆகவே குடிலன் எண்ணியது திண்ணமும் இட்டது சட்டமும் ஆகிவிட்டன. ஆகையினாலே குடிலன் அரசனைத் தன்மனம்போன வண்ணமெல்லாம் ஆட்டுவதைக்கண்ட சனங்களுக்குக் குடிலன்மீது கோபமும் வெறுப்பும் பிறந்தன. இதையறிந்த மந்திரி யாமிவ்விடமிருப்பே மேல் எமக்கு ஏதேனும் தீங்கு விளைதல் கூடும் என்று தனக்குள்ளே நினைத்துக்கொண்டு வேந்தனைக் கூடன்மாநகரத்தினின்று நீக்கித் தான் முன்னரே கோட்டை கொத்தளமுதலியன குயிற்றியிருந்த நெல்லைநகரத்து இருத்தினான்.

இஃதிங்ஙன மிருப்ப இறைவனது திருவருளே உருவமாப்போந்ததோ என்று யாவரும் கொண்டாடும் தகைமைவாய்ந்து அரசன்றன் குலகுருவாய் விளங்கும் **சுந்தரமுனிவர்** என்னும் ஞானச்செல்

வர் பாண்டியனுக்குத் தோன்றாத்துணையாயிருந்து உதவிபுரிய நினை ந்து சாலிவாடிபுரத்திற்கு அருகே ஓராச்சிரமம் வகுத்துக்கொண்டு ஆண்டெழுந்தருளினர். இது கேள்வியுற்ற வழுதி, முனிவரைத் தன் னவைக்கழைத்து அரண்மனையைக்காட்டி அதன் அமைப்பையும் உறுதியையும் சாசுவதமென மதித்து வியந்துரைக்கக்கேட்ட முனி வர்பெருமான் அவ்வரண்மனையின் நிலையாமையைப்பற்றி குறிப்பா கக்கூறியும் அரசனறிந்திலன். ஆதலின் கருணையங்கடலாகிய முனி வரர் இனியென்செய்வார்? மன்னவன் வங்கிசத்திற்கும் அரண்மனை க்கும் சேமகரமாகச் சிற்சில கிரியாவிசேடம் செய்யக்கருதி அரசன் றன் கோட்டையில் ஓரறை தமது சுவாதீனத்துவிடும்படி கேட்டு அதன் திறவுகோலைப் பெற்றுக்கொண்டு தமது விடுதிக்கேகினர்.

இனி வழுதி வெகுநாள்வரை மகப்பேறில்லாமையால் மனம் புழுங்கி யிறைவனைநோக்கி எண்ணில் தவம்புரிந்து **மனோன்மணி**யெ ன்னும் ஒரு புத்திரியைப்பெற்றான். இங்ஙனம் ஈசனருளாலுதித்த மனோன்மணியென்பாள் அழகிலும் நற்குண நற்செய்கைகளிலும் ஒப் புயர்வற்றவள். மடந்தைப்பருவத்து மாதர்சிரோமணி. இவள் பதி னாறுவயது நிரம்பிய யுவதியாயிருந்தும் அவண்மனம் ஒருவிஷயத்தை யும் நாடாது களங்கமற்றுத் தூய்மையுற்றிருந்தது. இவளுக்கு உயிர் ப்பாங்கியாயிருந்தவள் வாணி. இவ்வாணியென்பாள் ஒழுக்கந்தவ றாத வுள்ளமும் நன்மையையே நாடுங்குணமும் அல்லனவற்றை யகற்றுந்துணிபு முடையவள். இவ்விருபெண்களும் தற்காலத்துப் பெண்களைப்போலாது நன்கு கல்விகற்றிருந்தனர். இவ்விருவரும் திருமகளையுங் கலைமகளையும் போன்று விளங்கினர். இவர்தமுள் வாணியென்பாள் நடராசன் என்ற அழகமைந்த ஆநந்தபுருஷனை யறிய அவர்களிருவர் மனமும் ஒருவழிப்படர்ந்து காதல் நிகழ்ந்தது. அதற்கு மாறாக வாணியின்றந்தையாகிய **சகடரே**ன்பவர் "செல் வஞ் சகடக்காற் போலவரும்" என்பதையறியாது பணப்பேராசை யால் குடிலன்மகன் பலதேவனென்ற துன்மார்க்கனுக்குத் தன் மகளை மணம்புரியவெண்ணிப் பற்பல முயற்சிசெய்ய அதற்கு வாணி யிணங்காளாய்த் தனது தோழி மனோன்மணியினிடம் தனது நிலைமை களைப்பற்றி சொல்லியிரங்குவாள். தன்மகட்குப் பலதேவனைத் தலைவனாய்க்கொள்ள இஷ்டமில்லையென்பதைத் தெரிந்திருந்தும் சக டர் அவனுக்கே விவாகஞ்செய்துகொடுத்தால் தனக்கு அதிகாரமும்

கௌரவமும் செல்வமும் அதிகமாயுண்டாகும் என்று நம்பித் தான் எண்ணினவண்ணமேசெய்ய அரசன் அனுமதிபெற்று விவாக நடத்தத்துணிந்தனன். அதனால் வாணிக்கு அளவற்றசோகம் விளையத் தலைப்பட்டது. இச்சோக நீங்க மனோன்மணி பலவாறு ஆறுதல் கூறுவாள். இப்படியிருந்து வருநாளில் முனிபுங்கவர் கோட்டை காணவந்தநாளில் உவமையு முயர்வுமற்ற சேரதேசத்தரசனாகிய **புருடோத்தம வர்ம**னைப் பூர்வகருமவிளைவினால் மனோன்மணி கனவினில் தரிசித்து மோகங்கொள்ள அவட்குக் காமசுரம் உண்டாயிற்று. அச்சுரம் இன்னதன்மையதென்றறியாது சீவகன் செவிலி முதலாயினோர் வருந்தினர். மறுநாட் காலமே தெய்வகதியாய்த் தம் அறைக்குவந்த முனிவர் மனோன்மணியின்சுரம் காமசுரமே எனத்தெளிந்து மணவினையே அவளது நோயை நீக்கும் மருந்து என்றும் அவட்கு எவ்விதத்திலும் பொருந்தமுடைய தலைமகன் சேரதேசத்துப் புருடோத்தமவர்மனே யென்றும் அப்புருடோத்தமவர்மனது கருத்தினை நன்குணர்ந்து விவாகத்தை யெளிதிலே முடிக்கவல்லவன் நடராஜனேயென்றும் உபதேசித்து தமதாச்சிரமத்திற்குப் போயினர். வாணியினுடைய காதலனாகிய நடராஜன்மீது அவளுடைய தந்தை சகடர் அநேககுற்றங்களை யேற்றியிருந்தனர். ஆகையால் வழுதிக்கு அவன்மேல் முன்னமே வெறுப்புண்டாயிருந்தது. அது காரணமாக முனிவர் மொழியை யுட்கொள்ளாதவனாய்க் குடிலனுடைய துன்மந்திரத்தை விரும்பினன். வெறுவாய் மெல்பவற்குச் சிறிது அவலகப்பட்டாங்கு, அரசன் தன்வாயில் எப்பொழுது வீழ்வான் என்னும் பேராவாப் பேய்பிடித்துத் திரிந்த குடிலன் தன்னயமே கருதுபவனாதலின் இதுவே நமக்குத் தக்கசமயம் என்று நினைத்துச் சேரதேசத்தரசனாகிய புருடோத்தமவர்மனுக்குச் சீவகனது ஓரேபுத்திரியாகிய மனோன்மணியினைப் பாணிக்கிரகணம் செய்வித்தால், இச்சீவகன் காலங்கழிந்தபின்னர் அரசுரிமை புருடோத்தமற்கேபோகும்; அங்ஙனமாகில் சேரன் தன்கௌடில்லியத்திற்குச் சற்றேனுமிடங்கொடான்; அன்றியுந் தன் சுவாதந்தரியத்தையு மிழக்கவேண்டிவரும் என்னும் அச்சமீதேறி நடாத்தத் தன்னினுங்கொடியனுந் தனக்கோரே புத்திரனுமாய **பலதேவற்கு** இம்மனோன்மணியை மணஞ்செய்விப்பமேல், அம்மங்கைக்குரிய திங்கண்மரபினர் நாட்டு அரசாட்சியுந் தன்மகற்கே யுரித்தாமென்னும் பேராசை பிடர்பிடித்

துந்த,புருடோத்தமற்கும் மனோன்மணிக்குமென்று முனிவரர் கூறிய மணத்தினைத் தன்வஞ்சகத்தாற் றடுப்பதற்குத் தன்னகத்தே நிச்சயித்துத் தன் வஞ்சகப்பயிர்நாட்டு மச்சீவகவவலைநோக்கி முதன் முதல் பெண்வீட்டுக்காரராகிய நாம் மணம்பேசச் செல்வது வழக்கன்று, அவ்வாறு வழக்குமுளதேனும், எண்டிசையும் புகழ்படைத்த நம்பாண்டிய குலத்திற்குச் சிறப்பன்று; அன்றியும், இஃது மணவினையாதலின், இருதிறத்தார் மனக்கோளும் ஒத்திருக்கவேண்டும்; ஆதலின், புருடோத்தமன் மனக்கோளெவ்வாறிருக்குமோ? அதனை முன்னருணர்ந்தே மணத்திற்கு யத்தனிக்கவேண்டும். அவ்வாறறிந்து கோடற்கு நமக்கும் அவற்குமுள்ள சில பழைய விவாதங்களை முன்னிட்டு ஒரு தூதுவனை யனுப்புவமேல் அவ்விவாத முடிவோடு கலியாணத்திற்குரிய சகல விடயங்களையுந் தெரிந்துகொள்ளலாம் என்று கூறித் தன் சூதுமுளையை அரசன் மனமணலினுட்டித் துன்மந்திரச்சலம் பெய்தான். அரசனு மிதனை நன்மந்திரமென நம்பித் துன்மார்க்கமே வடிவெடுத்துத் தோன்றியதன்ன பலதேவனையே இக்காரிய முற்ற நிறைவேறுமாறு தூதனுப்பினான்.

இஃதிங்ஙனமிருப்ப, சேரநாட்டின்கண் புருடோத்தமவர்மன் சின்னாளாகத் தனக்குநிகழுங் கனாக்களில் தினந்தோறும் மனோன்மணியின் ரூபலாவண்ணியத்தினைக் கண்டு காமுற்றுத் தன் கனாக்களில் தனக்கெதிர்ப்படும் சௌந்தரியவல்லி இன்னாளெனத் தெளிகிலனாய் மனம்புழுங்கி ஏக்கமுற்றுத் தன்னுள்ளங்கொள்ளைகொள்ளுங் கனாக்களை யெங்ஙனமேனும் விலக்கமுயன்று எந்நாட்டோடேனும் போர்நிகழுமாயின் ஆண்டைத்தோன்றும் பேராரவாரத்திலாவது தன் கனாக்களொழியாவா வென்னும் நோக்கமுற்றுப் போரினையெதிர்பார்த்துக்கொண்டிருந்தான். இத்தருவாயிற் பலதேவன் தன் தந்தைதனக்குக் கற்பித்தவாறு சேரமா நாடடைந்து புருடோத்தமனதவைக்களத்தே இகழ்ச்சிக்குறிப்பாய் சில மொழிகளைப் புகன்றனன். அதுகேட்ட சேரவர்மன், நெருப்பில் நெய்சொரிந்தாங்குக் கோபித்துச் சதுரங்கசேனையுந் திரட்டிக்கொண்டு சந்திரவமிசத்தார் நாட்டின்மீது படையெடுத்தனன். இச்செய்தியைச் செவிசாத்திய சீவகனும் போர்க்குச் சன்னத்தனாய் சிறப்ப விருதிறத்தாரும் நெல்லையம்பதிக்கருகே கைகலந்தனர். இவ்வாறு போர்நிகழுங்கால் பாண்டியவருதினியின் ஒரு வியூகத்தலைவனாயமர்ந்த பலதேவ

னை அவன் கீழிருந்த ஒருசேவகன் தன் வேலாற்றுக்கஅதன் வலியை யாற்றகில்லாது பலதேவன் மூர்ச்சித்து வீழ்ந்தனன். வீழவே சீவகன் சேனை முழுவதும் கோலாகலப்பட்டு அச்சேனையில் ஒரு குழப்பமுண்டாயிற்று. இவ்வாறச் சேவகன்தாக்குவதற்குக் காரண மென்னையோவெனின் :—

பலதேவன் களவுவழிக் காமந்துய்த்து மங்கையர்கற்பினையழிப் பவனுதலின் அவ்வாயன் றன்னைச் சேரதேசத்திற்குத் தூதனுப்பிய வன்றிரவு அரண்மனையினின்றுந் தான் திருடிச்சென்றதொரு பொற்றொடியினை இச்சேவகனது சகோதரிக்கீந்தனன்; அதற்குப் பழி வாங்கவே யிச்சேவகன் ஈண்டிவனைத் தாக்கியது. இதற்குச் சேவகன் தான்றுக்குங்காற் பொற்றொடியினைக் கையிற் கொண்டுவந்ததும் சிற்சில வன்மொழிகளைப்பேசியதுமே தக்க சான்றாகும். தன் வரம்பு கடந்தொழுகிய சேவகனை யக்கணத்திலேயே யருகினின்ற போர்வீரர் கொன்று விட்டனர். பலதேவனும் மூர்ச்சை தெளிந்தனன். ஆயினுஞ்சேனையைக் கலக்கிய குழப்பங்குறைவுறாததனாற் பாண்டியன்றானை சிதறிச் சின்னபின்ன மாயிற்று. அன்றியுஞ் சீவகற்கும பாய நேரிட்டு அக்காலத்துச் சுத்தவீரனு மரசற்கு நண்பனுமாகிய **நாராயணன்** உயிருதவிக்கு வாராதிருப்பனாயின் உயிர்தப்புவதும் அரிதாயிருந்திருக்கும். அற்றை நாள் யுத்தத்திற் சீவகன் சேனை தோல்வியடைந்தது.

இவ்வாறு சீவகனுயிரைத்தப்புவித்த நாராயணன், வாணியின் காதலனும் சுந்தரமுனிவரது சீடனுமாகிய நடராஜனது நண்பன். குடிலனை இத்தகையனென நன்குதெளிந்து கொண்டவன். குடிலனது துன்மந்திரத்தையே யுட்கொண்ட அரசன் இவனை நிந்தித்துத் தள்ளினும் ஒரு வஞ்சகன் கையிலகப்பட்டு க்ஷீண தசையையடைகின்றனனே என்னும் பச்சாத்தாபத்தால் எங்ஙனமேனு மவனைத் தப்புவிக்கவேண்டுமென்னும் பரோபகாரச்சிந்தையோடு மக்கூடலம் பதியினின்றுந் திருநெல்வேலிக் கரசனைத்தொடர்ந்து வந்தவன். இதனையறிந்த குடிலன் இந்நாராயணன் போர்செய்ய வருவானாயின் ஜீவகற் கெங்ஙனமேனு முயிர்ச்சேதம் வாராதொழிப்பன்; அப்படியாயின் தன்னெண்ணமுழுவதுங் கெட்டுப்போய் விடுமென்னும் பயத்தால், யுத்தந்தொடங்கு முன்னரே கோட்டையைக் காப்பாரெ

வருமிலரெனக் கூறி அவனை ஆண்டனுப்பிச் சீவகப்பாவையையுஞ் சுலபமாய் அபாய நேரிடுமிடத்திலமர்த்தினன். கோட்டைக்குக்காவலாய்ச்சென்றும் எங்கேயரசனுக்கபாய நேரிடுகின்றதோ வென்னுஞ் சங்கையுடையனாய்ப்போர்க்களத்திலேயே தன் மனதைச்செலுத்தி, சேனையிற் குழப்பம்பிறந்தது, அரசற்குமபாய நேர்ந்தது என்றவுடனே சில குதிரைப்படைகளைச்சேகரித்துக்கொண்டு சரேலெனச் சென்று அரசனையும் பின்னர் அங்கு எஞ்சிநின்ற சேவகரையுந் தப்புவித்துக் கோட்டைக்குள் அவர்களைச்சுகமே சேர்த்தனன். இவ்வாறு பகைவருக்கு முதுகு காட்டும்படி நேரிட்டகதியினைச் சுத்தவீரனாகிய சீவகவழுதி நினைந்து நினைந்துருகி மனங்கரைந்து வெட்கித்துத் துக்கசாகரத்தின் மூழ்கித் தற்கொலைபுரியத் துணிந்தனன். இத்தருணத்தும் நாராயணன் அரசற்கு அவனிறந்தால் மனோன்மணி யாதரவின்றிப்போவதை யுணர்த்தித் தற்கொலையினின்றும் விலக்கிக்காத்தனன். இவ்வாறு ராஜன் ஒருவாறு தெளிந்திருக்குந்தருவாய் சேரவர்மன்விடுத்த வொருதூதுவனங்குற்று வேந்தனை நோக்கி சீவகவள்ளலே, நீ யிற்றைநாள் யுத்தத்திற்றோல்வியுற்றனை! இனிச்சமர் நிறுத்திச் சமாதானஞ்செய்துகொள்ள விரும்புவையேல், நீயுற்ற தோல்விக்கறிகுறியாக வொருகுடம் பொருளையாற்றிநீரு மொருநிம்பமலர் மாலையுந்தருதி! யாமும் போர்நிறுத்துவம்! இல்லையெனின் நாளைக் காலைத் தும்பைசூடிப் போர்செய்து நின்னரண்முதலியவற்றை நிலமட்டமாக்கிவிடுவோம்! இஃதெஞ்சேரர்கோனாணை!" எனக்கூறிப்போந்தனன். இவ்வாசகங்கேட்டவழுதியர் கோமான் அற்றை நாட்போரின் முதுகினைக்காட்டிப்பற்றலர்தமக்கு வெற்றியையீந்தவெட்கத்திற்காக வுயிரையிழக்கத் துணிந்தவனாதலின, அம்மாற்றத்திற் குடன்படாமன் மறுத்தனன். இங்ஙனந் தூதுவற்குச் செலவளித்துத் தன்னரண் முதலியவற்றைச் சோதிப்பான் வேண்டி, யவற்றினையுற்று நோக்குங்கால், அவை மிகவும் நலிவுற்று ஒருநாண்முற்றுகைக்குந்தகுதியற்றனவாயிருத்தலைக்கண்ணுற்றுக் கண்ணோடிக் குடிலனை நண்ணித் தன் கோட்டை அத்தகைய பங்கமுறுவதற்குக் காரணமென்னென வினாவினன். அதுகேட்ட குடிலன் தன் மனக்கோளுக்கு மாறாகச் சீவகனை யுயிர்தப்புவித்த நாராயணன்மாட்டுத் தனக்குள்ள பழம்பகையை நிறைவேற்ற விதுவே தருணமெனக்கருதி அரசனை நோக்கி கோட்டையைக்காப்பான் நியமிக்கப்பட்ட நாராயணன் தன் கடனு

கிய காவலை நீத்து வரம்பினைக்கடந்து போர்க்களமுற்றதே காரணமெனவும், தன் மைந்தனைக்கொல்லுஞ் சிந்தையைக்கொண்டு வேலாற்றுக்கிய காலாட்சேவகன் நாராயணனாலேவப்பட்டவனெனவும், அவ்வாறவனேவியதற்குக் காரணந் தான்வியூகத்தலைவனாக நியமிக்கப்படாததனாலுண்டாயபொறாமையே எனவும், அவ்வாறச்சேவகன் செய்யுந்தொழிற்குப் பரிசாக நாராயணன் அரண்மனையினின்றும் ஒரு பொற்றொடியினைத்திருடிக் கொடுத்தானெனவும், அதன்கண் அரண்மனை முத்திரை பொறித்திருத்தலே சான்றெனவும் ஒரு பொய்க்கதையினைக்கட்டி அதனை அரசன் நம்பும்படி செய்தான். இவ்வாறு நாராயணன்மீது கொலை, களவு, ஆஞ்ஞோல்லங்கன முதலிய குற்றங்கள் சுமத்தப்பட்டு, அவை காரணமாக அவனைக் கழுவேற்றுமாறு ஆணையும் பிறந்தது.

இச்சமயத்திற் சுந்தரமுனிவர் மிக்க வவசரமாயதோரிரகசியாலோசனைக்காக மன்னனையழைப்பிக்க அரசன் ஆண்டுச்செல்லவேண்டியமையாயிருந்ததனால் நாராயணனைக்கழுவேற்றல் சற்றே நிறுத்தப்பட்டது. முனிவர் அரையனை யழைத்ததற்குக் காரணமென்னையோவெனின் தாம் கருணாநிதியாதலின் குடிலனது வலையிற் சிக்கிக்கேடுற்றழிவதும் நெல்லையம்பதியிற் றானியற்றிய கோட்டைகொத்தளமுதலிய வெல்லாம் நெடுநா ணிலைநிற்குமென விறுமாந்திருந்தமையுங் கண்ணுற்று மனமிரங்கித் தாமுன்னரே அரசனிடந் தமக்கெனக்கேட்டு வாங்கிக்கொண்டதோ ரறையினின்றுந் தமதாச்சிரமவாயில்வரைச் சமைத்த சுரங்கத்தின் வழியே சீவகனையு மனோன்மணியினையுந் தப்புவித்துத் தமதாச்சிரமஞ் சேர்ப்பானுன்னியதேயாம். நெல்லைக்கோட்டை நெடுநாணிலையாதென்பதனை நன்குணர்ந்திருந்தும் அதன்மீது தனக்குள்ளவபிமான மிடையறாதிருந்தமையாற் போருக்கஞ்சிப் புறங்கொடுத்தலினுங் கோட்டையழிவோடு தானுங்கேட்டை யுறுவதே நலமென முனிவராணையை மறுத்தனன். முனிவருங் கறுத்து அவனைநோக்கி "நின் குலத்திற்கொரு சந்ததியாம் மனோன்மணியினையேனு மனுப்புதி, மற்றைய ரெக்கேடு உறினுமுறுக, வெற்றுரை யொன்றுங் கழறேல், மன்னவ! அம்மனோன்மணியினைக் காப்பதென்கடமை!' எனக்கூற வரையனு மியைந்தனன். முனிவரு மிரவில் வருவமெனக்கூறி விடைபெற்றேகினர். இரவெனு மிராகு தன்னிருளெனும் படத்தைவிரிப்பச் சீவகன்றன் மாதவத்

தாற் பெற்றமங்கை மனோன்மணியினைப் பிரியவேண்டுமேயென்னு மாசங்கையும் அவ்வாறுபிரியாவிடின் அவட்குப் பெருங்கேடுறுமே யென்னு மச்சமுந் தன்மனத்தை யங்குமிங்குமலைக்க மனந்தடுமாறினன். இங்ஙனந் தடுமாறுதற்கண் முனிவரார்கூற்றினு மையஞ்சனித்துக் குடிலனை யழைப்பித்துத் தனக்கு முனிவர் கூறிய வதிரகசிய விடங்களையெல்லாம் வெளிப்படுத்தி அவனது கெடுமதியை யுசாவினன். இச்செய்தியைக் கேள்வியுற்ற குடிலன் தன் மனக்கோளெலாம் நிறைவேறுதற்குத் தக்கசமய மிதுவேயென வகமகிழ்ந்து வேந்தை நோக்கி மனோன்மணியைத் தப்புவிப்பதற்கு அவளை யிடம்பெயர்ப்பது ஆவசியகமாயும் இக்காலத்து நமது நிலைமைக்கு மிக்க வுத்தமமாயு மிருப்பினும், கன்னியாகிய வம்மனோன்மணியினைத் தனியே மணமாகுமுன்ன ரெங்கேனு மனுப்புதல் பழிப்புரைக்கிடமாகுமே யன்றி தங்கள் மனதிற்குச் சற்றேனுஞ் சமாதானம் விளைவதற்கிடமில்லை எனக்கூறிச் சீவகற்கு முன்னிருந்த பயத்தோடு மனக்கலக்கமும் விளைவித்தான். அரசனும் மனம்பதைத்துத் தானகவே யன்றிரவு மனோன்மணியைப் பலதேவற்கு விவாகஞ் செய்வித்து அத்தம்பதிகளை முனிவர்தம்பா லனுப்புவதாக நிச்சயித்தனன். குடிலனுந் தானெடுங்காலமாக் கொண்டிருந்த வெண்ணத்தினை யிவ்வண்ணந் திண்ணமாக்கிக்கொண்டோமெனக் களியாட்டயர்ந்தனன்.

ஆயினுங் குடிலன் தனக்குச் சற்றேனுந் தெரியாது முனிவர் வகுத்த கள்ளச்சுருங்கையை யெங்ஙனமேனுங் கண்டுபிடிக்கவேண்டுமெனவவாவி இச்சுருங்கை முனிவரர் தமக்கென நெல்லைக்கு வந்தவன்றைக்கே வாங்கிக்கொண்டவறைக்குச் சம்பந்தப்பட்டிருக்க வேண்டுமெனத் தீர்மானித்து அவ்வறையிற் சென்று நோக்குங்கால் முனிவருன்னிய சுருங்கை யிவற்குப் புலப்பட்டது. குடிலனும் அவ்வழியே சென்று பின்னர் வெளியேறி நோக்குங்கால் அஃது சேரன்பாசறைக்குச் சமீபத்திற்றோன்றிற்று. இதனைக்கண்டலும் குடிலன் “ இற்றை நாட்போரில் நம்மகற்கு நேரிட்டாங்கு நாளைக் கொடும்போரில் நமக்கும் வெளிப்பகையாலேனு முட்பகையாலேனுங் கேடு விளையக்கூடும், மனோன்மணியின் விவாகமெங்ஙனமேனு மின்றிரவு நடப்பது நிச்சயம், ஆயினும் உடனே அரசாட்சிபெறுதலவ்

வளவு நிச்சய மில்லையாதலின் நாம் மிக்க வருத்தப்பட்டுத் தேடிப் பிடித்த கற்படையைச் சேரனுக்குக்காட்டி அவ்வழியே யவனை யழைத்துச்சென்று கோட்டை முதலியவற்றையும் சீவகனையும் அவன்கையிற் சுலபமாகக் காட்டிக்கொடுத்தால், முன்னர் ஒருகுடம் தாமிரவர்ணி நீருக்கும் ஒரு வேப்பமலர்மாலைக்கும் போரை நிறுத்துவதாக வாக்களித்தவர்மன் ஒரு வேளை தன்னையே பாண்டி நாட்டு மன்னனாக முடிசூட்டவுங்கூடும் என நினைத்து, தனது ஊழ்வினையின் பயனால் பாசறை நோக்கி மெல்ல மெல்லச் சென்றனன். நடுவழியிலேயே, தினந்தொறுங் கனக்களில் மனோன்மணியினழகினைக் கண்டு இன்னுளெனத் தெரியாமையான் அத்தகைய கனக்களை ஒழிப்பான் வேண்டிக் காமநோயால் பித்தனைப்போன்று உலாவிவருஞ் சேரனைக்கண்ணுற்று, தனக்கிதுவும் அதிர்ஷ்டவசத்தா னிகழ்ந்ததெனவே நினைத்துத் தனது துரோகசிந்தனையை வெளிப்படுத்தினன். இதனைக்கேட்ட சுத்தவீரனாகிய சேரன் தன் சேவகரையழைப்பித்துக் குடிலனுக்குக் காலிலுங் கையிலும் விலங்கிட்டுக் குடிலனை நோக்கி "வீரமே யுயிராக்கொண்டுள தீரராஞ் சேரமன்னவர்கள் வெற்றியை விலைகொளார். சுத்தவீரமென்பது உன்னைப்போலும் இராஜதுரோகிகளைக் காட்டிக்கொடுத்து பகையரசனையு மிரக்ஷித்துப் பின்னர் வேண்டுமாயின் யுத்தஞ்செய்து வெற்றிபெற்றுத் தமது வீரத்தை நிலைநிறுத்துவதேயாம்" எனக்கூறி அச்சுருங்கையின்வழியே சீவகனது அவைக்களத்திற்கு வழிகாட்டிச் செல்லும்படி கட்டளையிட்டனன். அசனி கட்செவியுற்ற வரவினைப்போலுந் திகைத்துநின்ற குடிலனைநோக்கிச் சேரன் சித்திரவதை செய்வதாகக் கூறக் குடிலன் திடுக்கிட்டு, பாண்டியன் கற்படைக்கு வழிகாட்டிச் சென்றனன்.

இஃதிங்ஙனமிருப்ப, சீவகன் மனோன்மணியைப் பலதேவற்கு மணஞ்செய்வித்து, முனிவராச்சிரம மனுப்புவதே தகுதியெனத் தீர்மானித்து அச்செய்தியை மனோன்மணிக்குக்கூற அஃது அவள் செவிக்கு உருக்கினைக் காய்ச்சிவிட்டாங்கிருந்ததேனுந் தன்றந்தைக்கு அக்காலத்து நேர்ந்த வாபத்தினைநோக்கி யம்மணவினைக்கொத்துக் கொண்டனள். ஆயினுந் தன்கதி யெப்படியாயினுமாகுக, தன்னைச் சேர்ந்தவர்க்கேனுஞ் சுகம்விளையவேண்டுமெனும் பரோபகாரசிந்

தையால், நாராயணனைக் கழுவேற்றுதிருக்கவேண்டுமென்றும், வாணியின் கருத்திற்கேற்ப அவளை நடராஜனுக்கே விவாகஞ் செய்யவேண்டுமென்றுஞ் சீவகனைவேண்ட அவ்வாறே யவன் வாக்களித்து மனங்களித்துக் கலியாணத்திற்குவேண்டிய பிரயத்தினஞ் செய்தனன். நடுநிசியிற் சுந்தரமுனிவர் நடராஜனோடு அரண்மனைக்கு வந்து, சீவகன் தம் வார்த்தையி னம்பிக்கையின்றிக் குடிலனோடியோசனைசெய்ததையு மவன்கொடுத்த துர்புத்தியையுங்கேட்டு வியந்து சீவகனிஷ்டப்படியே சகலவிஷயங்களையுஞ்செய்ய நிச்சயித்தனர். சீவகனது கற்படைக் கருகிலிருக்கு மோரறையைக் கலியாணத்தின்பொருட்டு நன்கலங்கரித்து, முனிவருந் தமது சீடர்களும், சீவகனுங் குடிலனொழிய வேனைய மந்திரிமுதலாயினோருஞ் சபைகூடிக் குடிலனது வரவைச் சற்றுநேர மெதிர்பார்த்திருந்து மவன் வாராமையான் மணவினையைத் தொடங்கி பலதேவற்கு மாலைசூட்டுமாறு மனோன்மணியினை வரவழைத்தனர். அப்போது குடிலன் வழிகாட்டப் பின்னே தொடர்ந்து கற்படைவழியேவந்த புருடோத்தமன் முனிவரதறையைச்சேர்ந்து அடுத்தவறையினிகழ்ந்த சந்தடியாதென நோக்கவே, மனோன்மணி தனதுகையிற் பூமாலையோடுந் தனதுதிரையை நீக்கிக்கொண்டு வெளிவந்து இன்னது செய்வதெனத் தோன்றாது பாவைபோன்றுநின்றனள். தன் கனாக்களில் தினந்தோறுந் தோன்றித் தன்னைக் காமநோயால் வருத்திய தலைவியைத் தன் கண்ணாரக்காண்டலும், யாவர்க்குந் தெரியாது வெகுவேகமாய்ச் சபையுட்புகுந்து தன் காதலியின் கண்ணுக்கெதிரே தோன்றினன். மனோன்மணியுந் தன்னுள்ளத்திருந்த தலைவனைக்காண்டலும் அகமகிழ்ந் தவசமுற்று, கையிலிருந்த பூமாலையைப் புருடோத்தமன் மார்பிலணிந்து, மூர்ச்சாக்கிராந்தையாயவன்றோளில் வீழ்ந்தனள். இவ்வாறு அன்னியனொருவன் சபையிற்புகுந்ததும் அவனைக்காண்டலு மனோன்மணி அவனையணைந்ததுஞ் சீவகனாதியர்கண்டு திடுக்கிட்டு ஏதொரு சூதென நினைத்துப் போர்செய்யத் தொடங்கினர். ஆயினும் முனிவர் தடுத்துச் சமாதானம் பிறப்பித்தனர். புருடோத்தமனுங் குடிலனைச் சீவகன்முன்னர் நிறுத்தி யவன் றன்னிடத்திற் கூறிய வியாபாதத்தினையும் அதற்குத்தான் இணங்காது அவற்குத் தலையிட்டுச் சீவகனிட மொப்புவிக்கக் கொணர்ந்தமையும் வெளிப்படுத்தினன். சுந்தரமுனிவரது ஆணையை மறுக்காது சீவகனுந்

தன்மகளையும் மருகனையும் வாழ்த்தி யெமதாலவாய்ப்பெருமானை யானந்தக்கண்ணீரொடு துதித்தனன்! புருடோத்தமனுந் தன்னுயிர்க் காதலியோடுந் தன்பாசறைக்கு மீண்டு இறைவனருள்பெற்றுச் சுகமுற்று வாழ்ந்திருந்தனன்.

---

## சாதுமதி சரிதை.

இப்பூதலப் பூவைக்குத் திலகம்போன்று விளங்காநின்ற **விருந்தைமாநாடு** என்னும் திவ்விய தேசத்தை மனுநீதி தவறாமலும் செங்கோல் வழுவாமலும் மன்னுயிரைத் தன்னுயிர்போற் பாதுகாத்து அரசுபுரிந்துவந்த வேந்தனொருவனிருந்தான். **குணலவர்மன்** என்னும் பெயர்பூண்ட இவ்வரசன் தன் மனைவியுடன் இல்லறம் வழாது நடாத்தி, பூர்வசன்மாந்தரத்திற் செய்த கன்மவசத்தாற் புத்திர பாக்கியம் பெறாது மனவருத்த முறுங்காலத்துக் கண்மணிகள் போன்ற புத்திரிகள் மூவர் தோன்றினர்.

இவர்கள் மூவரும் தகுந்த காலத்தில், நாமகரணம் கன்னவேதனம் முதலிய சடங்குகள் நிறைவேற்றப்பட்டு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வருநாளில் இவர்கள் தந்தை மூத்தவளாகிய **விநுபாக்ஷியை ஆலவனிய** மென்னும் தேசாதிபதிக்கும், இளையவளாகிய **கமலாக்ஷியைக் கநுஜலய** தேசத்ததிபதிக்கும் பாணிக்கிரகணஞ் செய்வித்து, இவ்விவாக மகோற்சவங்களை வெகு ஆடம்பரத்தோடு நிறைவேற்றினன். மூன்றும் புத்திரியாகிய **சாதுமதி** யென்பவள் மங்கைப்பருவத்தை யடையாமலிருந்தபடியால் இவளுக்குமாத்திரம் விவாகம் செய்விக்கவில்லை. ஆயினும் **பிருகந்த**தேசத்துச் சிற்றரசனும், **கேனள**தேசாதிபதியும் ஆகிய இவ்விருவரும் இச்சிறுமியை வரிக்க எண்ணங்கொண்டவர்களா யிருந்தார்கள்.

குணலவர்மன் மூப்புமேலீட்டினால் தளர்வுற்று, தேசாதிபத்தியஞ்செய்ய எண்ணமற்றவனாய்த் தன் மூன்று புத்திரிகளையு மழைத்து அவர்களில் ஒவ்வொருவருக்குந் தன்மேலிருக்கும் ஆதரத்திற்கேற்பத் தன்னாட்டைப் பாகித்துக் கொடுத்துத் தனக்கு அரசனென்னும் பட்டமாத்திர மிருந்தாற் போதுமென்ற எண்ணங் கொண்டான்.

ஒருநாள் தன் ஜேஷ்டபுத்திரியை அழைத்துக்கேட்க, அவள், "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்பதற்கேற்பத் தான் தன் தந்தையார் வாய்மொழியைத் தூய்மொழியாக்கொண்டு நடந்துவருபவளென்றும், உலகத்தில் ஆசைவைக்கத் தகுந்தபொருள் வேறில்லை யென்றும் இன்னும் இத்தகைய உபசார வார்த்தைகள் பலவற்றை முகத்துதியாக் கூறவே, வயோதிகனான **தூலவர்மன்**, தன் ஜேஷ்ட புத்திரியின் வாக்கினின்றும் இம்மதுரமான வார்த்தைகளைக்கேட்டு, இவையெல்லாம் உண்மையென நம்பிக்களிக்கூத்தாடித் தன்னிராச்சியத்தின் மூன்றிலொருபங்கை இப்புத்திரிக்குத் தந்து இவளுக்கும் இவள் புருஷனாகிய ஆலவனீய தேசத்தரசனுக்கும் பட்டஞ்சூட்டுவிக்கவே இவர்களிருவரும் மனமொத்துத் தங்கள் பாகத்திற்கு வந்த தேசத்தைப்பாதுகாத்து அரசாண்டு வந்தார்கள்.

பிறகு அவளுடைய தங்கையை வரவழைத்து இதைக்குறித்தே வினவ, **கமலாக்ஷி**யும் தான் தமக்கையினும் பதின் மடங்கு நேசித்து வருபவளென்றும் மற்ற வைபவங்களைப்பற்றிய ஆசைகளெல்லாம் தான் தன்தந்தையின்பால் வைத்திருக்கும் ஆசையினும் மேம்பட்டன வல்லவென்றுஞ் சொல்லவே தந்தை தன்னிவ்விரண்டு புத்திரிகளின் வாஞ்சையையும் குணத்தையும் பார்த்து மகிழ்ந்து தன் தேசத்தின் முன்போலவே மூன்றிலொருபாகத்தை இப்பெண் மாணிக்கத்திற்குக் கொடுத்தனன்.

இனி மற்றைப்பாகத்தைத் தனதன்புள்ள மூன்றும்புத்திரியாகிய சாதுமதியை அழைப்பித்து, அவளுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு அவளுக்குக் கொடுக்கவெண்ணியிருந்து, வலம்புரி மணியிற்சிறந்த அப்பெண்மணியையழைத்து வினவினவளவில், இவள் தன் தமக்கைமார்களின் கபடத்திற்கும், முகத்துதியானவார்த்தைகட்கும் மனம் பொருளாகித் தன்தந்தையைநோக்கி ஒருமாது தன்பிதாவை எவ்வளவுநேசிக்கக்கூடுமோ அவ்வளவு தானும் நேசிப்பவளென்றும் அதற்கு இதுகாறும் யாதொரு ஐயமுமில்லையென்றும், இனிமேலும் யாதொரு தடையுமிராதென்றும், மனப்பூர்வமாய்ச் சொல்லினள். இம்மாதராள் இப்படிப் புகலலும், இஃது அவன் செவியில் நாராசம் ஊடுருவிச்சென்றாற்போலப் பதைபதைத்துத் தன்குழந்தையை உற்றுநோக்கி, "என் செல்வக்குழந்தாய்! நீ தீர்க்

காலோசனைசெய்து அப்புறம் உன் அபிப்பிராயத்தை வெளியிடவேண்டும்" என அவன் கூறுதலும், சகலகுணங்களும் நிறைந்துள்ள இப்பெண்மணி தன்தந்தையைப்பார்த்து, "எனது பிரியமுள்ள தந்தையே! உன்னை நேசிக்கமாட்டேனென்று சொல்லவில்லையே! தந்தையினிடம் பாராட்டவேண்டிய அன்பு எவ்வளவோ அவ்வளவிற்குத் தடையில்லை யென்றுதானே சொன்னேன்! மற்றைப்படி நீவிர் எனது தமக்கைகள் முகத்துதியாகச் சொல்லியவற்றையெல்லாம் நம்பினீர்போலும்! இவர்களிருவரும் உம்மையே நேசித்துக்கொண்டிருப்பராயின் விவாகம் செய்துகொள்ளுவானேன்! அவ்வாறு செய்துகொண்டதற்கு யாதுகாரணமோ தெரியவில்லை! இவர்களுடைய முகத்துதிக்கு இடங்கொடுக்கவேண்டுவது அநாவசியம்" என்றெடுத்தோதினள். இவளிம்மாற்ற முரைத்தலும், சீற்றங்கொண்ட குணலவர்மன் இவளை விவாகம்செய்துகொள்ள விரும்பியவர்களிலொருவனாகிய **பிருகந்த** தேசத்துச் சிற்றரசனை வரவழைத்து விருத்தாந்தங்களைச்சொல்லி, "ஸ்திரீதனம் யாதும் கொடேன், வேண்டுமாயின் இவளைப் பாணிக்கிரகணம் மாத்திரம் செய்துகொள்" என்று சொல்லவே இச்சிற்றரசன் அவளுடைய குணங்களையெல்லாம் கவனியாது, இவளுக்கு வரவிருந்த பூஸ்திதிமாத்திரம் வருவதிற்கில்லையேயென்கிற வருத்தத்தினால், தான் அவளை மணம்புரிவதற்கிஷ்டமில்லையெனச் சொல்லிவிட்டு அகன்றான். பிறகு அரசன் **கேளள** தேசாதிபதியைத் தன்சபைக்கு வரவழைத்து வினவலும், இம்மாதராள் குணத்தைச் சிறிதேனும் சீர்தூக்கிப்பாராது நடந்ததற்காகப் பிருகந்த தேசத்துச் சிற்றரசனைக் கடிந்துபேசித் தனக்குப் பூஸ்திதி முதலியன அபீஷ்டமில்லையென்றும், மகாலட்சுமியைப்போன்றவள் தனக்குச் சம்பவிப்பதுவே எல்லாச்சம்பத்தினு மேலானதென்றுஞ் சொல்லிச் சாதுமதியைக் கைப்பிடித்துத் தன்னுடன் கொண்டுபோயினன். சாதுமதி தன் தகப்பனாகிய அரசனைநோக்கிப்போம்பொழுதும் விடைபெற்றுக்கொண்டு, "எனது அன்புள்ள தந்தையே! உன்பேரில் வைக்கவேண்டிய ஆசையளவிற்கு என்றும் தளர்வு நேரிடாது" எனச்சொல்லிப் போய்விட்டனள்.

அரசனே மீதமாயிருந்த பாகத்தை மற்றிரண்டு புத்திரிகளுக்கும் சரிபாகமாகப் பாகித்துக்கொடுத்துத் தனக்கு அரசனென்னும் பெயரும், நூறு யுத்த வீரர்களும் தன்னுடனிருத்தலும் போது

மென்று சொல்லித் தனது எஞ்சியவாழ்நாளை இவ்விரண்டு புத்திரிகளுடனிருந்து கழிக்கத் தீர்மானித்தான். தன்னிவ்விரண்டு புத்திரிகளின் குணத்தை, இவ்வரசனுக் குயிர்த்தோழனுயிருந்த **காணவ** தேசாதிபதி எடுத்துரைத்தவளவிற் கோபம்பிறந்து, இவனை நாட்டினின்றுந் துரத்திவிடுமாறு தண்டனை செய்தான்.

ஒருமாதம் தன் ஜேஷ்டபுத்திரியினிடம் இருக்கவெண்ணினுன். அவள் சொன்னதொன்றும் நடத்திவருவதொன்றுமாயின. சின்னுளில் இவனுக்கு அதிகவருத்தமுண்டாயிற்று. ஆயினும் இஃது தன்னேற்பாடாகையினுற் பொறுத்துக்கொண்டிருக்கவேண்டியதாயிருந்தது. இந்நிலைமையைக் கேட்டவளவிற் பரிதாபமுற்றுக் காணவ தேசாதிபதி தான்வேலைக்காரனைப்போல மாறுவேடங்கொண்டு **சகாய**னென்னும் பெயர்பூண்டு இவ்வமயத்தில் இவனிடம்வந்து ஊழியஞ் செய்வலெனச் சொல்ல, இவனது நேர்மையான நடையைக் கண்டு ஆனந்தித்து இவனைத் தன்னிடம் வைத்துக்கொண்டான். இவனும் தன்னெசமானனுக்கு உற்சாகம் பிறக்குமாறு நடந்துகொண்டுவந்தான். அரசன் ஜேஷ்டபுத்திரியாகிய விரூபாக்ஷி தன்றந்தையை அவமதித்துவந்ததுமன்றி, அவளுடைய வேலைக்காரர்கள் அவமதிப்பதற்கும் அவளே காரணமாயினுள்! இதுகண்ட சகாயன் மனம்பொருதவனுய், ஒருநாள் அப்படி நடந்த உக்கிராணக்காரனுடைய கால்விரல்களைத் தரித்துவிட்டான். இவ்விஷயம் அரசனுக்கு இன்புண்டாக்கியதன்றியும், இதுமுதற் றன் ஊழியக்காரனுகிய சகாயனிடம் அதிக அன்பு பாராட்டிவந்தான். இவனல்லாமலும் சமஸ்தானத்து ஆசியக்காரனும் அரசனுக்கு இத்தருணத்திற் பொழுதுபோக்குவதற்கு உதவிசெய்பவனுயிருந்தான். இவன் அரசன் புதல்விக்குமுன்பாகவே அவளுடைய குணங்களைப்பற்றிக் குறிப்பாகவும், அவளுக்குப் படும்படியாகவும், கேட்போர்க்கு விகடமாகவும் சொல்லவே இவனைத் தண்டனைக்குள்ளாக்குவதாகச்சொல்லி இரண்டொருதரம் வெருட்டினுள். இவற்றிற்கெல்லாம் பயப்படுபவனே அவன்? இவள் தன்தகப்பனுரை நாளுக்குநாள் மரியாதைத்தாழ்வாய் நடத்திவந்ததன்றியும், ஒருநாள் தன் தந்தையைநோக்கி, "ஐயா, உம்முடைய நடவடிக்கை எங்களுக்கு அதிக அசௌக்கியமாயிருக்கின்றது. நீர் வைத்திருக்கும் நூறு குதிரைவீரர்கள் யாதொரு காரி

யத்திற்கும் பிரயோசனமில்லாமலும், அதிக இம்சைசெய்துகொண்டு மிருக்கின்றார்கள். ஆகையால் அவர்களையெல்லா மொழித்துவிட்டு வேண்டியமட்டில் இரண்டொரு கிழங்களை வைத்துக்கொண்டால் உமக்குச் சௌக்கியமாயிருக்கும்" எனச்சொன்னமாத்திரத்தின் மனம்பதைபதைத்து "நம்மிடமிருந்து எல்லாம் பெற்றுக்கொண்டு இப்படிச்சொல்ல வாயெழுந்ததே! வெகு நேர்த்தியாயிருக்கின்றது! இவளினு மிக்க கொடும்பாவிகள் இவ்வுலகில் இருக்கின்றனரோ? பாம்பிற்குப் பால்கொடுத்து வளர்த்தாற்போலாயிற்றே!" என்று புலம்பி யுருகி ஏக்கங்கொண்டு நின்றான். இவள் புருஷனாகிய ஆலவனீய தேசத்ததிபதிமாத்திரம் கொஞ்சமிரக்கங்கொண்டு, இப் படியெல்லாம் நடத்தியது தனக்குத்தெரியாதென்று சொல்லி, மன் னித்துக்கொள்ளும்படி வேண்டியும், ஏக்கமும் சீற்றமும் கொண்ட குணலவர்மன் சற்றுமிதற்குச் செவிகொடுக்க முடியாதவனாய்த் தன் குதிரைவீரர்களை அழைத்து "என் கனிஷ்டபுத்திரியாகிய கமலாக்ஷி யினிடம் போகவேண்டுமாகையால், நீங்கள் சித்தமாயிருங்கள்" என் றுசொல்லித் தன் மூத்தமகளாகிய குரூரமான விரூபாக்ஷியை வாய்க்குவந்தவாறெல்லாம் சபித்துவிட்டுப் பிறகு தான் போவதற்குச் சித்தஞ்செய்தான். இதன்பொருட்டு ஒருகடிதம் எழுதிக் கமலாக்ஷிக்குச் சகாயன் மூலமாய் விடுத்தான். விரூபாக்ஷி வேறொருதூதனை அழைத்துத் தன்தந்தையின் குணமெல்லாம் நாளுக்குநாள் கெட் டுப்போய்விட்டனவென்றும், அவனைவைத்து நிர்வாகிக்கிறது அரு மையென்றும், வீண்செலவிற்குக் காரணனாயிருக்கிறானென்றும், இன்னும் பல அவதூறுகளையுஞ்சொல்லி ஒருகடிதம் எழுதி உடனே தன்னருமைத் தங்கையாகிய கமலாக்ஷிக்கு அனுப்புவித்தாள். இவர் களிருவர் தூதர்களும் வழியிற் சந்திக்கவே, சகாயன் மற்றவனைப் பார்த்து, அவன் விரூபாக்ஷியினிடமிருந்து தான் போகிறவிடத்திற் கேபோகிறானென்றும், அவன் அரசனை அகௌரவமாக நடத்தின தற்குத் தான் அவமானப்படுத்திவைத்த பயலெனவுந் தெரிந்து, அவனுடன் சீற்றங்கொண்டு சண்டையிட்டு அவனைத் துஷ்டத்தன த்திற்காகத் துரத்தினான். இவர்களிருவரும்போய்ச் சேர்ந்து கடித ங்களைச் சேர்ப்பித்ததும், விரூபாக்ஷியினிடமிருந்துவந்த தூதன் வழியில் நடந்த சங்கதிகளைப்பற்றி முறையிட்டுக்கொள்ளவே மற்ற வனைத் தொழுகட்டையிற் போடுமாறுத்தரவு செய்தனள்.

அரசன் தன் குதிரைவீரர் நூற்றுவரோடும் புறப்பட்டுக் கமலாக்ஷியின் அரண்மனை சேர்ந்து, தன்னருமைத் தோழனும் ஊழியனுமாகிய சகாயனிருந்தஸ்திதியைப் பார்த்துப் பரிதபித்துத் தன் பெண்ணைப் பார்க்கவேண்டித் தான் அவளுக்குச் சொல்லியனுப்பியும் அவள் தனக்குத்தலைநோவென்றும் வயிற்றுவலியென்றும் சாக்குச்சொல்லிப் பார்ப்பதற்கு அசந்தர்ப்பமாயிருக்கிறதென்று மறுமொழி சொல்லி யனுப்பிவிட்டாள். மறுபடியும் தன்னாயகன் வேண்டுகோளின்மேல் தானும் தன் தமக்கையும் வந்து பார்க்கக் குணலவர்மன் விருபாக்ஷியைப்பார்த்ததும் ஆலகாலவிஷம்போற் பொங்கி, "ஏ! பரம சண்டாளீ! இங்கும் வந்தனையோ இவளைக் கெடுக்க? பாபி! என் முகத்தைப் பாரேல்!" என்றான். கமலாக்ஷி தன் தமக்கையை யிவ்வாறு வைததற்காகக் கோபித்துக்கொண்டு தந்தையைப்பார்த்து "என் தமக்கையுடன்தான் நீவிர் இருக்கவேண்டும், உம் பரிவாரங்களை யெல்லாமொழித்துவிடும்" என்றும் புத்தி சொல்லுவதுபோற் சொல்லி யனுப்பிவிட்டாள். பரிதாபமும் பார்க்காத இப்பாவிகளைக்கண்டு குணலவர்மன் கோபங்கொண்டு சாபந்தந்து, **கௌளன்** தேசாதிபதியினிடமாயினும்போய்ச் சீவிக்கலாமென்ற தீர்மானத்தோடு திரும்பினான். இவ்விருபுத்திரிகளின் நடக்கைகளினால் இவனுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது.

அரசனாற் சிறையினின்றும் விடுபட்ட சகாயனென்னும் பெயர்கொண்ட காணவதேசாதிபதி, இவனைக்காணவதேசங் கொண்டுபோய்த் தன் சிநேகிதரிடம் விட்டுப் பாதுகாத்திருக்கும்படி சொல்லிவிட்டுத் தான் கௌளதேசம்போய்க் குணலவர்மனது மூன்றாம்புத்திரியாகிய சாதுமதியென்னும் மாதராளைக்கண்டு நடந்த விருத்தாந்தங்களையெல்லாஞ் சொல்லவே அவள் பரிதபித்துத் தன் கணவனிடஞ் சென்று கதையைச்சொல்லித் தன்னுடன் பெரிய சேனையைக் கொண்டு விருந்தைமாநாடு சேர்ந்து தன்தமக்கைகளை வென்று அவர்கள் செருக்கையடக்கித் தேசத்தைத் தன்கைவசமாக்கித் தன்தகப்பனைப் பாதுகாத்துவந்தாள். தன் தகப்பன் நற்குணந் திரும்பியவுடன் தான் நிந்தித்துத்தள்ளிய தன் பெண்ணைப்பார்த்து ஆசைமேலீட்டினாற் கண்ணீர் ததும்பி வெட்கத்தினாற் றலைகுனிந்து சாதுமதியென்னுங் கண்மணிதன்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டான். அதற்கவள் அது தகாதவார்த்தையெனத்தடுத்து, அன்பு

பாராட்டி நடத்திவந்தாள். கொடூரமான தமக்கைகளிருவரும் வைவச்சுத நகரஞ் சேர்ந்தார்கள்! குணலவர்மன் மூப்புமேலீட்டினு லும் இது காறும்பட்ட அவஸ்தையினுலு மிறந்தான். சாதுமதியோ தேவர் திருவடியைப் பணிந்து தனது நாயகனுடன் கூடி இன்புற்று இனிது அரசு புரிந்து வந்தாள்.

---

## மனோகரவல்லி கதை.

தென்தேசமாண்டுவந்த **குணவீர**னென்னும் வேந்தனுக்கு **மனோ கரவல்லி** என்ற ஒரு அருமைப்புதல்வி யுதித்தனள். அவள் தாலா ட்டுப்பருவத்திலேயே தன் அன்னையை இழக்கப்பெற்ற நிமித்தம், அவள் பிதா அவளை நாளொரு மேனியாய் வளர்த்துத் தாயிழந்த தனிநிலை மனத்திற் சிறிதும் புகாவண்ணம் அவள் அவாக்கொண்டு கேட்கும் அனைத்தையும் அட்டியன்றி அவட்கு சேகரித்துக்கொடு த்து அவள் மனோபீஷ்டப்படி நடந்துவந்தான். அவட்கு எட்டாம் பிராயம் எட்டியபொழுது, வடசீமை வள்ளலாகிய **வீரசூரன்** அவளைத் தன் புதல்வனுக்கு வதுவைசெய்யக்கருதிக் குணவீரனிடங்கேட்க, அவன் கோரிய மணம் எவ்வாற்றானும் மணமேயாகுமென யூகித்துத் தெளிந்து அங்ஙனமே ஆகுகவெனச் சம்மதமளித்தனன். இருவ ரும் தீர்மானித்தபடி நிச்சயதாம்பூலம் கைம்மாறி வழக்க அனுசர ணைப்படி ஒருசிறுவனை பிரதிமணாளனாய் ஏற்படுத்தி மணமுடித் தனர். பின்னர் மணாளன் மனமகிழ்ந்து ரூபலாவண்ணியமுள்ள மனோகரவல்லியுடன் இல்லறசுக மனுபவிக்கலாமென்று மனக்கோட் டை கட்டினன். அவன் மணமுடிக்கும் பக்குவமடைந்தபொழுது அவன் பிதா அவ்விராஜகன்னிகைக்கு வஸ்திர ஆபரணாதிகள் பலவற் றையும் தூதுவர்மூலமாய் அனுப்ப, தென்னாட்டுவேந்தன் மனமகிழ்ச் சியோடும் தகுந்த உபசாரவந்தனைகளோடும் அவற்றைப்பெற்று, அவ ற்றிற்குப் பரிசாய் நேர்த்தியான துப்பட்டி ஒன்றைக்கொடுத்து .அதன் பின்னர் "நிபந்தனைசெய்தது நிச்சயம், நிபந்தனைக்குக் கட்டுப்பட எனக்கு யாதோர் ஆட்சேபனையுமில்லை, ஆனால் என் அருமைப்புத ல்வி மனமுரண்டுகொண்டவளாயிருக்கின்றாள், கன்னிகையாதலால் கன்னியர் கொள்ளும் வீண் எண்ணங்கள் அவளிடம் குடிகொண்

டிருக்கின்றன, தனியாயிருப்பேனென்றும் விவாக நியதிக்குடம்படே னென்றும் பிடிவாதமாய்ச் சொல்லுகிறுள். என்செய்வேன்!" என்று மறுமொழி அளித்தனர். தூதுவர்களும் விடைபெற்றுத் தூதின்சார மடங்கிய நிருபத்தைத் தம் கோமானிடம் கொடுத்தனர். துஷ்டர் களைநீக்கி இஷ்டர்களைப் பரிபாலிக்கும் அக்கோமான் கோபாவே சங்கொண்டு எழுந்து நிருபத்தையும் துப்பட்டியையும் துண்டுதுண் டாய்க் கிழித்துத் தரைமீதெறிந்து நூறுயிர யுத்தவீரரையாவது அனு ப்பி அவளை இவண் கொண்டுவரச்செய்வேனெனச் சபதங்கூறி யுத்தசேனாதிபரை நோக்கி அபிப்பிராயம் கேட்டனன்.

இது நிற்க. மனோராச்சியங்கொண்ட மன்மகள் மங்கைப்பருவ மடையுமுன்னரே **சூயை அசூயை** யென்னும் நூலிழந்த மங்கை யர் இருவர் அவட்குத் தோழிகளாகித் தினந்தோறும் உண்ணும் வேளையிலும் உடுக்கும்போதிலும் அணியுமமையத்திலும் உலாவுங் காலத்திலும் உவக்குஞ்சமயத்திலும் உலையும்நேரத்திலும் பிரியாது உடனிருந்து தங்கள் கொள்கைகளை மெள்ள மெள்ளச் சிறிது சிறி தாய் அச்சிறுமியர் சிரோமணிமனத்திற். புகட்டினார்கள். அவற் றைச் செவியுற்ற கோமகள் தந்தைசெய்த மணவுறுதி அவளநுமதி யின்றி நடந்தமையின் அவமெனத் தடுத்து, ஆடவர்களைப்போன்று அழகிய மங்கையரும் கல்விகற்று நலமுற நற்கல்லூரி ஒன்று ஸ்தா பிப்பது அத்தியாவசியமென்ற போதனையை யுட்கொண்டு அதற்கு ஏற்ற இடமும் நிறைசெல்வமும் தந்தருளத் தந்தையிடம் மன்றாடிக் கேட்டனள். முதுமை நிறைந்த தாதை மகளுரைகேட்டு மனக் கவலையுற்றும் அன்பின் மிகுதியால் ரதியெனவிளங்கும் மதிமுக மங்கை யுரையை மறுக்க மனமுருகி வேண்டியவண்ணம் விடை யளித்தனன். எண்ணிய எண்ணம் சித்திபெறவே மனோகரவல்லி தோழிகளிடஞ்சென்று தந்தை தயைகூர்ந்ததைச் சொற்றனள். கேட்டவளவிலே அவர்கள் களிகூர்ந்து, அந்நாட்டின் வடவெல்லை யில் ஒரு கல்விச்சாலை ஏற்படுத்தி, அதில் உலகிலுள்ள பெண்க ளெவர்க்கும் வித்தை கற்பிக்கப்படுமென்றும் ஆடவர் ஆண்டுச்செல் லுழித் தம்மாருயிர் இழப்பரென்றும் பிரகடனஞ் செய்தனர். கல் விப்பயிற்சி செய்யவிரும்பிய பலபெண்களும் இச்சாலையையடை ந்து கனகணிதம், புவனகோளம், புவன்கோசம், இதிகாசம் முதலான எண்ணற்ற சாத்திரங்களை முறையே பயின்றனர். இவ்வாறு செழி

த்தோங்குநாளில் மன்மதன்போன்ற மணாளன் அவன் தந்தையின் சினத்தை ஆற்றி **க்ஷமை வேதுளி** என்ற தோழர் இருவருடன் குணவீரனிடஞ்சென்று மணவுறுதியை நிறைவேற்றும்படி கேட்க அவ்விருத்தாப்பியர் நடந்தவாறெல்லாம் விளங்க விளம்பி "வேண்டுமாயின் நீவிரே கல்லூரிசென்று கன்னிகை மனத்தைக் கவர்விரேல் ஆக்ஷேபனையில்லை" என்றனர். இம்மொழி பகரவே இறைமகனுந் தோழரும்விரைந்து கன்னியரின் கல்விமாடம் கிட்டிப் பெண்வேடம் பூண்டு, கலாபாலனந் தேடிவந்த கன்னியருள் இவர் மூவரும் கலந்து, சூயையெனும் கலைபயிற்று மாதின் மாணவராய் அமர்ந்து, சாத்திரங் கற்றுவந்தனர். சூயையின் சகோதரன் க்ஷமையானபடியால் அவன் எத்தனைதான் வேடம்பூண்டிருப்பினும் அவன்மீது அவட்கு ஐயந் தோன்றிற்று. அங்ஙனந்தோன்றிய உண்மையை அவள் அப்பொழுது பிரதானியிடம் தெரிவியாதிருக்கும்படி மூவரும் அவளை வணங்கிக் கூடியசீக்கிரத்தில் வெளியாய்விடுகிறோமென்று அவட்கு வாக்குறுதி செய்தனர். இவ்வுரை அசூயை புத்திரியாகிய **மதுரவசனி** காதிற்பட்டது. அவ்விஷயம் சூயைக்குத் தெரியவும் அவள் பயந்தனள், சிறிது பின்னர் முகமலர்ந்தனள், ஏனெனில் தாயைப்போல பிள்ளை என்பது உலகவழக்காயினும் மதுரவசனியின் குணாதிசயங்களை உற்றுப்பார்க்கவே 'இப்பியிற்பிறந்த முத்திப்பிக்கென்செயும்' என்ற நியாயம் தோன்றியது. ஆயினும், ஆடவனைப்பற்றி அசூயைக்குச் சிறிது சந்தேகமிருப்பதாகத் தான் உணர்ந்தமையால் இனி இவணிருத்தல் இனியவ்வுயிர்க்கு இடையூறெனவுணர்ந்து சூயை ஈண்டே தன் சிசுவை விட்டுவிட்டுக் காணாமல் மறைந்தனள்.

மறுநாள் மாலையில் இறைமகளாகிய பிரதானியும் தோழியரும் மாணவரும் கற்பாளவிஷயமறியக் கலினமாவேறி மலைசென்று அலுத்துப்போகவே அவர்கள் அவ்விடந்தங்கிப் போசனாதிகளை முடித்த பின்னர் உற்சாகமாய்த் தெரிந்தபாடல்களைப்பாடி ஆனந்தித்தனர். இறைமகன் பாடிமுடித்தபின் அவன் தோழரிருவரில் ஒருவனாகிய வெகுளியென்பவன் பெண்குரலிற் பாடமறந்தனன். ஆகவே இவன் முதலானோர் அன்னியரென விளங்கிற்று. உடனே மங்கையர் எல்லோரும் வெருண்டு பரியேரிப் பறந்தனர். சினமுற்ற இறைமகள் புரவி வாரர்வதியின்மேற் செல்லும்போது குளம்புவழுவிப் புரவியும் இறைமகளும் ஒருங்கே நதியினில் வீழ்ந்தனர். மங்கையர் கரையில்

கைகொட்டிக் கோவென்றலற உடனே இறைமகன் துணிந்து நதியுட் பாய்ந்து கோமகளைக் கரைசேர்த்தனன். அவள் மூர்ச்சைதெளிந்ததும் மறுபடி பரியேறிப் பாடசாலை நோக்கி விரைந்தனள். பிடிபட்ட மூவரும் தலைகுனிந்து மனமெலிந்து உடல்சிறுத்து முகங்கறுத்துப் பின்னேகினர். யாவரும் பாடசாலை வந்துறவே, சிங்காசனத்தின்மீது வீற்றிருந்த இறைமகள் இருசாரிலும் தோழியர் நனைந்த சிகையை வகுத்து உலர்த்த, அவள்பின்னே காற்றிலும் வெயிலிலும் அடியுண்டு கற்போன்ற காத்திரங்கொண்ட உழத்தியர் நிற்க, பிடிபட்ட அன்னியர் மூவரையும் கொண்டுவந்து அப்பிரதானிமுன் விட்டனர். அவர்களில் இறைமகன் திடம்விடாது மணநிபந்தனையை எடுத்துக்கூறுந்தருணத்தில், வடதேசமன்னன் தன் மைந்தன் பெண்கல்லூரியிற் புகுந்த விவரமறிந்து உயிர்மோசம் நேரிடாதிருக்கும்படி தன் சேனையுடன் தென்தேசம்வந்து விருத்தாப்பிய வரசனைப்பிடித்து அதன்பின் பெண்கலாசாலையையும் முற்றுகைசெய்தனன். யாதுவரினும் சற்றுங் கலங்காத இறைமகள் மாணவர் குழப்பத்தை அமர்த்தி இறைமகனை உடனே கலாசாலைவிட்டு அப்புறப்படுத்தும்படி மேற்கூறிய உழத்தியர் எண்மருக்கும் கட்டளையிட்டனள். கட்டளை நிறைவேற்றுகையில் இறைமகளது வீரசகோதரர் மூவரும் தானையுடன் கலாசாலை வந்துசேர அங்கே இருதிறத்தாரும் சந்தித்தனர். இறைமகன் உடனே பகைவர் பாசறைசென்று இறைமகள் சகோதரனைக் கண்டு பேசி நேர்ந்தசண்டையை இருதிறத்தாரும் ஐம்பது யுத்தவீரரையனுப்பி அவர்களில் எவர் வெற்றிபெறுவரோ அங்ஙனமே தீர்த்தல் தகுதியென்று ஏற்பாடு செய்துமுடித்தனன். அச்சண்டையில் இறைமகனும் அவன் தோழர் இருவரும் பலமான பல காயம்பட்டுக் கீழேவிழ, சூயையின் சிசுவைக் கையிலேந்திய கோமகள் களஞ்சென்று மாண்டார்போற் கிடந்த மக்களைக் கடைக்கண்ணுற் பார்த்தனள்.

வடநாட்டிறைமகன் மூர்ச்சையற்றுக்கிடந்த நிலையை அவள் கண்ணுறவே, உயுத்தம்வரினும் ஊக்கங் கைவிடாத இராஜகன்னி மனமிரங்கினள், மன்மதவிகாரம் கொண்டனள், இராச குமாரனுக்குத் தானே பணிவிடைசெய்து புண்ணிற்கு மருந்திட்டுச் சொஸ்தப்படுத்துவேனென்றனள், பின்னும் சிதையுண்டு கிடந்த இறைமகனிஷ்டனையும் மற்றோனையும் கலாசாலையுட் கொண்டுபோய்

அவற்குச் சிகிச்சைசெய்யக் கட்டளையிட்டனள். இன்னணம் ஊழியஞ்செய்ததினால் எல்லோரும் குணப்பட்டார்கள். ஆனால் இறைமகன்மட்டும் வெகுநேரம் பிரஞ்ஞையில்லாமலிருந்தான். அக்காலமெலாம் கோமகள் தலைமாட்டிலிருந்து இனியகுரலால் இங்கிதமான இசைகளைப்பாடி இறைமகனைச் சுகப்படுத்தினாள். பிரஞ்ஞை உண்டாகவே.

காண்டகு மகட்கு நிகரர மகளிர்
தம்மிலுங் கண்டிலேன் கதிர்கொள்
பூண்டயங் கிளையா ளிவள்வனப் பினுக்குப்
பொருந்துறு மிளைஞன்யா னேயோ?

எனப் பலவாறு உன்னி உருகி யேங்கினன், மனோகரவல்லியோ முன்னரே மன்மதனுக் கடிமையாயினள். ஆகவே எடுத்த கோரிக்கை வீண்பாடாய் முடிந்தது. பெண்ணிலக்கணம் பேதைமையெனப் பெரியோரியம்பியமொழி முதுமொழியாயது.

காண்டகு மாநுடர் கழக மாடலும்
பூண்டகு மாதர்நற் புருடரைக் கூடலும்
மழவிளங் குழவிகள் மாட்சியிற் பெறுதலும்
ஆண்டவன் கருதிய மாண்டகு செயலே
அலமே யாகு மவற்றிற் றவிர்தலே.

## தற்காப்பு நியமம்.

தற்காப்பு நியமமென்பது ஒருபிராணி தன்னைத்தானே பற்பலவபாயங்களினின்றுந் துன்பங்களினின்றுந் தப்புவித்துக் காத்துக்கோடன் முறையாம். இங்ஙனங்கூறிய தற்காப்பினை யிவ்வுலகின்கணுள்ள வொவ்வொரு சீவராசியினிடத்துங் காணலாம். காட்டிலுள்ள புலிகள் உயிர்த்திருப்பதும், தீக்கோழிகள் வேட்டைக்காரர்களினின்றுந் தப்பித்திரிவதும் யாங்ஙனம்? ஆழ்ந்து நினைமின்! சிறுபான்மை தத்தமது அறிவினானும் பெரும்பான்மை யியற்கையினானுமா மென்பது வெளிப்படும். "ஆம், அவை தத்தம் அறிவினாற் கரந்துறைவதை யறிவேம், மற்று இயற்கையினாற் பிழைத்துத் திரியுமென்றீரே யஃதென்னை" யென்பிரேல்:—புலிகள்தம் முடலின் மஞ்சள்வரிகளுங் கருநிறக்கீற்றுக்களு மிருப்பதனாற் போந்த பயன்றானென்னை?

அவை யோங்கிவளர்ந்த கோரைப்புற்கிடையினும் மூங்கிற்புதர்க்கிடையினும் நிற்குமாயின், நம் கண்ணிற்கு அப்புலிகளி னிருப்பிடம் எளிதிற் புலப்படாது. ஏனெனிற் கோரைப்புன் மூங்கிற் புதர் ஆகிய விவற்றின் நிறமும் புலியினிறமும் ஏறக்குறையப் பார்வையினுக் கொன்றாயிருத்தல் பற்றியென்க. இவ்வாறொன்றாயிருத்தலின் மான்கள் புலிகளிருத்தலை யறியாது உலாவுகையிற் புலிகள் அம்மான்களின்மேற் பாய்ந்து இரையெடுத்துக்கொண்டும் வேடரினின்றுந் தப்பிக்கொண்டுந் திரிகின்றன. இனித் தீக்கோழிகள் மணல் வனங்களிற் சற்றுத் தூரத்து நிற்குமாயின் அவை ஆண்டு நிற்றல் நடந்தாலன்றிக் கட்குப் புலப்படாது. ஆதலின் அவை வேடர்களது கணைக்கிலக்காகாது பிழைத்து வாழுகின்றன. இவ்வண்ணம் புலிகளுந் தீக்கோழிகளும் பிழைத்துத் திரிவதற்கு முக்கியவேதுவான அவ்வவற்றின் நிறப்பேறு தத்தஞ்செயலினாலோ அன்றி யியற்கையினாலோ? கூறுமின்! இயற்கையினாலென்பதற் கோராட்சேபனையுமின்றாம். இவ்வுலகின்கண் எப்பொழுதும் பயனுள்ளனதாம் இயற்கையாகவே நிலைத்துநிற்கும். இங்ஙனம் பயனுள்ளன நிலைநிற்றலைத்தான் * **இயற்கைப்பிரிநிலை** யென்றும், † **தகுந்தவை தங்கிநிற்ற** லென்றும் ‡ மேன்மொழி யுயிர்நூலோர் கூறுப. இஃது § சுபாவ நியமங்களுளெல்லாம் முதன்மையதாய் விளங்கலுமுணர்க.

இதுகாறும் மனிதற்குக் கீழ்ப்பட்ட பிராணி சம்பந்தமாகவே கூறிப்போந்தாம். இனி மனித சம்பந்தமாகவே கூறுதூஉம். கடவுளாற் சிருட்டிக்கப்பட்ட பொருள்களெல்லாவற்றினும் ஒருவித வொழுங்குளது. அவ்வொழுங்கினைத்தான் தற்காலத்திலுள்ள சான்றோர் ¶ இயற்கையொழுங்கென் றுரைக்குப. இவ்வியற்கை யொழுங்கிற் காணப்படும் பிராணிகள் யாவற்றினும் மனிதனே மேதக்கானாயினும், மற்றைப் பிராணிகளைப் போன்றே யிவனும் || வாழ்க்கை நியமங்கட்குட்பட்டிருத்தல் வேண்டுதலின் இவற்குந் தற்காப்பு இன்றியமையாத தாகின்றது. அங்ஙன மின்றேல், தனக்கும் பிறர்க்கு மின்பம் பயப்பனவாகிய ஏனைய கடமைகளைச்செய்தல் அசாத்தியமாய் விடுமென்க. "சுயநயவிரக்தியுள்ளவனன்றே முத்தியெய்துவான்; அங்ஙனமிருப்ப நீவிர் தற்காப்பு மனிதற்கு இன்றியமையாத

* Natural Selection. † Survival of the Fittest. ‡ Western Biologists. § Laws of Nature. ¶ The order of Nature. || Laws of Life.

தென்று கழறுவ தென்னையோ ?" என்று சங்கிப்பிரேல் :—கூறுதா உம். நம் முடலுயிர்களைப் பற்றிச் சாக்கிரதையா யிருக்குமாறும் ஒரு பயனுமின்றி நம்முடலை வருத்தாமலும் நம்முயிரினைப்பலியிடா மலு மிருக்குமாறும் * ஒழுக்க நூல் விதிக்கின்றது. இதனை யுதா ரண முகத்தான் விளக்குதூஉம் :—தெய்வபக்தி யுடையா னொரு வன் ஒருபயனுமின்றிக் கடவுள் முத்தி தந்தருளுவா ரென்னுங் கருத் தினனாய் நகங்கள் வளர்ந்து தொளைத்துக்கொண்டு புறங்கைக்கு வருமட்டும் அகங்கையினை விரல்களோடு சேர்த்து மூடிக் கரங்களை வானத்தை நோக்க நீட்டிக்கொண் டிருப்பானாயின், பயன்கருதிக் கடவுளான் மனிதற்குக் கொடுக்கப்பட்டஅங்கங்களிற் கையென்ற மகாற்புதமான ஒன்றினை நாசப்படுத்துகின்றானாதலின் அவன் பாபி யே யாவானென்று மொழிவதற் கையமின்றென்க. இத்தற்காப்புக் கடமையினுஞ் சாலச் சிறந்த கடமைகளுமுளவாம். இஃது அவற் றொடு முரணுங்கால் அக்கடமைகளையே செய்தல் வேண்டுமென் பது ஒழுக்கநூல் விதியாம். தனது குடும்ப சம்ரட்சணைக்காகத் தலைவன் தன்னுடைய சத்திக்கு அதீதமாயுமுழைத்து வருந்துதல் வேண்டும். நாடுகாப்பின்பொருட்டுப் போர்வீரர் யுத்தத்தில் உயிர் துறக்கவும் வேண்டும். இவ்வமயங்களில் அவர் தற்காப்பினைக் கருதி நடப்பராயின், அவர் குற்றவாளியரே யாவார் என்பதும் ஐயுறற்பா லதோ ? ஆகவே யொருபயனு மின்றித் தன்னுட லுயிர்களை யொரு வன் வருத்துகிற்பானாயின், அவன் ஆன்மத்துரோகியென் றழைக் கப்படுவானே யன்றி யொருநாளுந் தான் கருதியவண்ணம் முத்தி யெய்தான். தற்கொலைபுரிவது மாபாவம் என்ற நந்தமக்கு இது மாத்திரம் பாவச் செயலாகாததேனோ ? சாற்றுமின் !

மனிதரின் பொதுநன்மை நாடுதல் இலக்கா மாதலின், ஒவ் வொருவனது நன்மையினை நாடுதலுந் † தக்க இலக்காம் ; ஆகவே யொவ்வொருவனுந் தன்றன் நன்மையினை நாடிக்கோடலும் நேரிய இலக்காம். பிறனுற்ற நலமானது மனிதரின் பொதுநலத்தில் எவ் வளவின தாகுமோ அவ்வளவினதேயாம் ஒருவன் றானுற்ற நன்மை யும் ; தன்னின்பம் நாடப்படாதாயின், பிறனதின்பந்தான் நாடப் படுதலேனோ? தன்னின்பம் பிறரால் நாடப்பட்டுழித் தான் பிறன

* Ethics. † Fit aim.

தின்பம் நாடுதலினூற் பொது நன்மை யதிகப்படுமாயின், யாவுஞ் செவ்வனே செல்லும். அங்ஙனமின்றி யொவ்வொருவனும் தன்றன் நன்மையினைப் பிறனொருவன் நாடுவான் என்பது நினைந்தே தன்றன் நன்மைநாடும் அப்பிறனுக்கே இவ் வொவ்வொருவனும் நன்மை நாடுவா னுதலானும், நம்மின்பங்களிற் பெரும்பாலன நமது சரீர சௌக்கியத்திற்கு ஆவசியகமான செயல்களோடு ஒற்றுமைப் பட்டிருக்கின்றன வாதலானும், இச்சரீர சம்பந்தமான வின்பங்களை யொப்பாமை மிகத் தாழ்ந்ததரமான வாழ்க்கையினையும், பலவீனத்தினையும், செய்யவேண்டிய கடமைகளைச் செய்வதற் கேலாமையினையும் விளைவிக்கின்றதாதலானும் ஒவ்வொருவனும் பிறரின்பத்தையே நாடுதல் அசம்பாவித மாமென்க.

தற்காப்பின் பகுதிகள் பலவிதப்படும். அஃதெப்படியெனில்:— ஈண்டுத் **தான்** என்றது இவ்வுலக வின்பத்திற்கு முக்கிய சாதனங்களாய சரீரத்தினையும், மனத்தினையும், குணத்தினையும் குறிப்பதனோடு நின்றுவிடாமல், பேரின்ப சாதனமாகிய சீவான்மாவினையுங் குறித்து நிற்றலின், தற்காப்புப் பலவகைப்படுகின்றது. அவைதாம் சரீராபிவிர்த்தி, மனோபிவிர்த்தி, குணாபிவிர்த்தி, மோட்ச சாதனப்பேறு என்னுந் தலைச்சாத்திட்டுப் பின்னர் விரித்துக் கூறப்படும். இதுநிற்க, சில மேற்புல விஞ்ஞானிகள் தற்காப்பென்னுந் தொடரின்கணுள்ள 'தான்' என்பது மெய்ம் மனங்களையே குறிக்குமெனக் கூறுபவாயினுந், தென்புலக் கலைஞர்கள் 'தன்னையறிதல்' 'தன்னைத்தான் காண்டல்' என்பனவற்றுள், தான் என்பது சீவான்மாவினை யுணர்த்துகிற்பதுபோலத் தற்காப்பின்கணுள்ள தானென்பதுஞ் சீவான்மாவினைக் குறிக்குமெனக் கூறுதல்பற்றி யாமும் அவ்வாறே கூறுகின்றாம்.

இனி மேற்றொகுத்துச் சுட்டியவற்றை வகுத்துக் காட்டுவான் றொடங்கி நிறுத்தமுறையானே முதற்கட் சரீராபிவிர்த்தியினைப் பற்றிப் பேசுகின்றாம். நன்றா யுழைத்து வேலைசெய்பவனே சரீராபிவிர்த்தியடைந்து தேகசௌக்கிய முறுவான். அங்ஙனமல்லாதவன் சரீராபிவிர்த்தி யடையாது வாணாள்முழுவதும் பிணியினால் வருந்தி வீணாளாய்க் கழிப்பான். இக்கருத்தினை யுட்கொண்டன்றே "போதுமானமட்டுஞ் சுறுசுறுப்பாயிருப்பவனே * பிராணதாரணப்

* Struggle for existence.

பிரயத்தினத்தி லொழிந்துவிடாது தங்கி நிற்பான்" என்று * உயிர் நூல் முறையிடுகின்றது. ஆயினும் அவ்வாறு சுறுசுறுப்போடு வேலை செய்பவனுக்கு வேலைக்கிடையிற் சிறிது ஓய்வும், இரவிலுறக்கமும், சின்னாட் பின்னர் ஒருநாளொழிவும், பன்னாட் பின்னர்ச் சின்னாள் விடுமுறையு மிருத்தல்வேண்டும்; அன்றேல் தேகம் வலியிழந்து கட்டழிந்து போய்விடும். போகவே நோய்க்காளாகி நெடுநாள் வாழுதலின்றிச் சீக்கிரத்தி லிறந்துபோவான். அங்ஙனமிவன் செய்யும் வேலையும் பிரியகரமாகவே யிருத்தல்வேண்டும். அது பிறரது கட்டாயமின்றிச் சுயேச்சையாற் செய்தலும்வேண்டும். இல்லையேல் மனவருத்தத்திற் கிடனாகி அஃதவனைத் துன்புறுத்து மென்க.

வேலைசெய்ய வேண்டாதவன் உடல் விருத்திவிளையாட்டுக்களாகிய † உதைபந்தாட்டம், ‡ சல்லடைப்பந்தாட்டம், § மரச்சட்டப் பந்தாட்டம் முதலியனவாதல் ஆடல்வேண்டும். ஒருவன் றனவுந் தன்குடும்பத்தினவுமான சுகசீவனங்கட்கு ஆவசியகமும் உபயோகமுமுள்ள எல்லாவிதப் பயிற்சியும் அறிவும் திரவிய சம்பாதனமு மடைந்திருத்தல் வேண்டும். அவ்விதப் பயிற்சிகளுண் முதன்மையானது $ கைச்சாதுரியப்பேறு. இவ்வுலகின்கட் காணப்படும் பற்பல சுகமூலங்களையும் உபயோகித்தற் கேற்றவர்களாய்ச் செய்யுந் தன்மைய திறத்தினை யொவ்வொருவனும் முதிருமாறு செய்தலும் வேண்டும்; அன்றேற் சுகாநுபவம் அசாத்தியமாய் விடுமென்க. "எந்த விஷயங்களிலும் ¶ ஏகரீதியானது வேண்டற்பால தன்று, மேலு மஃது வாழ்க்கையினுக்குக் கேடு விளைப்பதாகவும் காணப்படுகின்றது" என்று || உடனூலோர் கூறுப. இவ்வெல்லாவற்றினும் மிகச் சிறந்ததும், தற்காலத்தில் விசேடமாய்க் கவனிக்கப்படாததுமாயிருப்பது மிதமான உண்டிகோடலாம். போதியவுணவு கோடலானது சரீர சுகத்திற்கு மூலமந்திரமாமென்பதை யுணர்ந்திருந்தும், பலர் சிவபிரானது மூத்த பிள்ளையார்க்கும் தமயனாராய்த் தின்னத் தலைப்பட்டு அசீரணமாகிய பலவித நோயினாலும் வருந்துகின்றனர். ஆதலின் இதுவிடயத்தில் நாம் மிகக்கவலையெடுத்துக் கொள்ளல் வேண்டும். கள்ளருந்திக் கழிபெருங் களியாட்டயர்வதும் உடற்கேடு விளைத்தலின் வேண்டப்படாததாம். உண்டாட்டினுங் களியா

* Biology. † Foot-ball. ‡ Tennis. § Cricket. $ Manual dexterity. ¶ Monotony. || Physiologists.

ட்டிலும் வீணே கைப்பொருளினைச் செலவிட்டுக் கடன்பட் டுழல்வதும் கேவலமறியாமையாதலின் அதனின்றும் ஒவ்வொருவனுந் தவிர்தல்வேண்டும். இவ்விடயங்களிலெல்லாம் இயற்கை யொழுங்கிற்கு விரோதப்படாமல் நடத்தல் வேண்டும் என்பது ஒரு பெரிய நிட்சேபம் போலும்! இதுகாறுஞ் சரீராபிவிர்த்தியினைக் குறித்து எஞ்சிற்றறிவினுக் கெட்டியவாறு கூறிப்போந்தாம். இனி மனோபிவிர்த்தியினைப்பற்றி யுபந்நியசிக்கப் புகுவாம்.

மனோபிவிர்த்தியினுக்குப் பிரதான சாதனங்களாயுள்ளனமுறைப்பட்ட * சாத்திரக்கல்வியும், இலக்கியப் பயிற்சியும், † நற்கலைத்தேர்ச்சியுமேயாம். இவையிற்றினை முறைவழுவாது விரித்துரைக்குதூஉம். உலகத்தின்கணுள்ள பொருள்களின் றத்துவங்களை யுணர்தற்கேற்ற மனப்பயிற்சி முக்கியமாம்; ஆதலின் சுபாவவிடயஞானம் ஒவ்வொருவனுக்கும் அத்தியாவசியகமாமாகவே சுபாவவிடயங்களுள் ஒருபகுதியினை, மற்றைப் பகுதிகளின் ஞானஞ் சிறிதேனுமின்றி யறிதல் கூடாமையாம். அஃதாவது சுபாவவிடயங்களுள் ஒரு பகுதியினை யறிய விரும்புகின்றவன் அப்பகுதியின் பூரணஞானத்தினையும் பெறவேண்டுவானாயின் அவற்கு மேற்குறித்த சுபாவவிடயங்களுள் ஏனைய பகுதிகளின் ஏகதேசப்படு முணர்ச்சியாத விருத்தல்வேண்டும். இத்தகைய மனப்பயிற்சி யசாத்தியமெனத் தோற்றுவதாயினும், ஒழுங்குபெறக் கல்வி கற்பிக்கப்படுமாயின் ஒவ்வொருநூலின் றத்துவார்த்தங்களும் தெளிவாய்ப் பரவப்பட்டு உறுதியாய் மனத்தின்கட் பற்றிக்கொள்ளப்படும். ஈண்டுக்குறித்த நூல் என்பது உயிர்நூல், ‡ உளநூல், § மனிதநூல், ஒழுக்கநூல், $ செல்வநூல், ¶ பௌமியநூல் முதலியவற்றின் பொதுப்பெயர். இந்நூலறிவுள் ‖ மனிதசமூகநூலறிவும் அடங்கும். இதுதான் சாத்திரக்கல்வியென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது.

இனி யிலக்கியவுணர்ச்சியினைக்குறித்துக் கூறுகின்றாம். இவ்விலக்கியவுணர்ச்சியானது, கற்பனைச்செல்வமும், சொல்வன்மையும், மனவுறுதியும், பிறர்மனங்கவரு மாற்றலுமாகிய இன்னோரன்ன பயன்களையெல்லாம் விளைக்கின்றது. இஃதின்றேற் சம்பாஷணை

* Scientific culture. † Fine arts. ‡ Psychology. § Anthropology. $ Political Economy. ¶ Geology. ‖ Sociology.

பயனின்றாய் விடுதல்காண்க. நற்கலைஞானமும் வேண்டற்பால தென்று முன்னர்க் கூறினும், நற்கலைகளாவன யாவை? அவைதாம் கானம், கவிதை, நாடகம், சிற்பம், * மதுரபாஷணம் என்பன முதலியனவாம். கானம் மனிதனது கடினசுபாவத்தை மிருதுவாக்கும். கவிதை யுற்கரிஷமான மனோதர்மங்களையும், நாடகம் மனிதனது அந்தஸ்ஸுபாவத்தையும், சிற்பம் கூரிய அறிவினையும் ரசிக சக்தியினையும், மதுரபாஷணம் வசீகரவன்மையினையும் மெய்க்கீர்த்தியினையுங்கொடுக்கும். இயற்கைப்பொருள் வனப்பின் காட்சியினாற் போதரும் ஆநந்தம் அளந்துரைக்கற் பெற்றிய தன்றாதலின் ஒருவற்கு † இயற்கைவனப்புணூற் பயிற்சியு மிருத்தல்வேண்டும். கதைகள் படித்தலும், நாடகம் பார்த்தலும், சதுரங்கமுதலியன விளையாடலும் ‡ இன்ப வூற்றாதல் பற்றி விரும்புதற் பாலனவாம்.

இனிச் சரீராபிவிர்த்திக்கும் மனோபிவிர்த்திக்கும் பொதுவாகிய **இல்வாழ்க்கையினைக்** குறித்து எமக்குத் தோன்றியவற்றையெடுத்து இயம்புகின்றாம்.

நித்திய பிரமசாரித்துவத்தினா லுண்டாகுஞ் சரீரக்கேடுகளைக் காட்டினும், நித்திய கன்னித்தன்மையாகிய அபரிபூரண வாழ்க்கையினின்றும் போதருஞ் சரீரக்கேடுகள் மிகவு மதிகமாம் என்பது பெரும்பாலார் கொள்கை. இதனோடு சிறுபான்மையோர் கொள்கை முரணினும், மனோதத்துவ விடயத்தில் அங்ஙனம் ஆடவரும் மாதரும் பிரிந்து வாழ்தலினின்று முண்டாங் கேடுகள் மகா நாசகரமானவேயா மென்பதனோடு எத்தகையோர் கொள்கையு முரணாதென்க. இதுபற்றி யறிவு முதிர்ச்சியினானும் § மனோவிகாரத்தினானு முண்டாகும் நற்பயன்களை யநுபவியாமையாகிய துர்ப்பாக்கியத்தினுக்கு அவர் ஆளாதல் ஒருதலையேயாம். ஸ்திரீபுமான்களாய் வாழுதல் ஊக்கத்தை யுயர்த்தித் தொழில்புரியுமாறு தூண்டி அவ்விருவர்க்கும் மனக்களிப்பினைத் தருகின்றது. இதுபற்றி யன்றே,

"மாசிலா வையகத் திவ்வுயிர் வாழ்க்கை
யாம்பெருங் கடலுட் போமரக் கலனா
மாடவர் நெஞ்ச மறந்துறை யகன்று
நீடிசை சுழற்று நிலையிலாக் காற்று

* Eloquence. † Æsthetics. ‡ Fountain of happiness. § Emotions.

நின்னைய மற்ற வெண்ண மியக்கச்
சென்றுழிச் சென்று நன்றறி வின்றி
யலையா வண்ண மறத்துறைக் குடாவி
னிலைபெற நிறுத்துநங் கூரமாய்ப் பின்னுஞ்
செய்வினை முயற்சியிற் பொய்வகைப் புன்னெறிக்
கெற்றுண் டகன்று பற்றொன் றின்றி
யாசையாந் திசைதொறு மலைந்து திரிந்து
கெடாவணங் கடாவிக் கெழுமிய வன்புசே
ரறப்பிடி கடைப்பிடி யாகக் காட்டிச்
சிறப்புயர் சுகத்துறை சேர்க்குசுக் கானாய்
நின்றது மங்கையர் நிலைமை" யன்றியும்
"மெள்ள மெள்ளத்த னுள்ளம் விரித்துப்
பொறையுஞ் சாந்தியும் படிப்படி புகட்டிச்
சிறிது சிறிதுதன் சித்தந் தெளித்துப்
பக்குவஞ் செய்யுநற் பள்ளிச்சாலை
யில்லறமென்பது" சொல்லவும் வேண்டுமோ ?

என்று தற்காலத்திலுள்ள * பெரியோர் கூறியதூஉமெண்க.

இவ் வில்வாழ்க்கை நலத்தினால், எப்பொழுதும் விளையாட்டிலேயே கருத்துப் பதிந்து ஆலோசனையென்பது சிறிது மில்லாது கருவமே யுருவமாயிருந்த எத்தனை மாதரார் பத்தியு நேசமுமுள்ள தலைவியரு மன்புள்ளதாயரு மாகின்றனர் ! இரக்கமற்றுக் கோபமென்பதே குடிகொண்டிருந்த எத்துணையாடவர் தாம் உயிர்த்துணை யுற்ற பின்றை அமைதியுஞ் சாந்தமுமுள்ளதலைவரும் கவலையுள்ள தந்தையருமாகின்றனர் ! காண்மின் ! மேலு மிவ்வில்வாழ்க்கையினாற் றலைவிதலைவரது ஆராய்ச்சிவன்மை சாலவும் பலப்படுகின்றது.

இதுகாறுங் கூறிப் போந்தனவெல்லாம் நாசகாரணமாய நேசமில்லா † வாணிபவதுவை யானவிடத்தி னல்லாது நேசம்பற்றிச் செய்த வதுவை யானவிடத்தே யாமெனக. ஆதலின் ஸ்திரீபுமான்களிருவரும் தமக்குட் பரஸ்பரம் அன்பில்லையாயின் விவாகஞ் செய்துகோடல் ஒருநாளுங்கூடாது. அன்றியு மொரு குடும்பத்தினைக் காப்பாற்று மாற்றலில்லாதவர் மணமாடக் கருதுதல் பெருங் குற்றமாம். அவ்வாறு காப்பாற்றும் வலியிலார் மணப்பாராயின் அவர்

* P. Sundram Pillay, M. A., Author of *Manonmaniyam*. † Marriage as a Trade.

செயல் காசுகொடுத்துத் தேள்கொட்டிக் கோடல்போலும். இதன் பின்னுந் தாம் துன்புறுவதேயன்றி ஒன்று மறியாத் தமது மனைவி மக்களையும் அவர் வறுமைக்கடலி லாழ்த்தித் துன்புறுத்துதலையுங் காண்க. இன்னும் இவ்வளவோடு நின்று விடாமல் அவர் தமதுமக்களை அசௌக்கியப் படுத்துவதினாற் குரூபிகளாக்கித் தற்காப்பினுக்கும் அநருகராக்குதலின் மாபாதகரோ அல்லரோ ? அந்தோ ! இவரதறியாமைக் கென்செய்வது ? தமிழ்வல்லீர் ! மௌனஞ் சாதியாதீர் ! வாய்திறந்து கூறுமின் ! பெற்றோர்க்குச் சிறுபிராயத்திற் பிறக்கும் பிள்ளைகள் கேடெய்திச் சீக்கிரத்தில் அழிவுறுமாதலின், அப்பருவத்து மணமாடுவது அசங்கதமாம்.

மனிதன் சனசமூகத்தி லிருப்பவ னாதலின் குணாபிவிர்த்தியு மாவசியக மாகின்றது. சிலர் சரீராபிவிர்த்தி மனோபிவிர்த்தி யாகிய விவற்றினும் இக்குணாபிவிர்த்தி மிகவும் முக்கியமானதென்று கூறுபவாயினும், குணாபிவிர்த்தி அவற்றிற்குப் பிற்பட்டதாகவே கொள்ளற்பாற்றென்பது எம்மனோர் கொள்கையாம். குணாபிவிர்த்தியினா னுண்டாம் பெரும்பயன் எந்நாளு மழியாத புகழ்ப்பேறும். புகழ்கருதிச் சற்குண முடையவனா யிருத்தலினும், சற்குணமுடையனாதலே கடமையென்ற எண்ணத்தோடு சற்குணமுடையவனாயிருத்தல் மேன்மையானது. சற்குணச் செல்வத்தினுக்குக் காவலாயிருப்பன கற்பெனப்படும் பதிவிரதா தர்மமும் ஏகபத்நீ விரதமுமேயாம். இவ்விரதங்களை யநுசரியாதவர் தேகசௌக்கியமும் புகழும்பெறுதல் "ஒப்பிலா மலடிபெற்ற மகனொரு முயற்கொம்பேறித், தப்பிலாகாயப் பூவைப் பறிப்பது" போலு மன்றே! வாய்மையும், ஈகையும், அன்பும், பரோபகாரமுமாகிய இவை முதலியனதாம் சற்குணங்கள் எனப்படும். பிறர்க்குத் துன்பஞ்செய்யாது தான்சுகாநுபவமுடைய னாதலும், தான் துன்பமடையாது பிறர்க்கு இன்பம் தரத்தக்கனவற்றைச் செய்தலுமே, நந்தற்காப்பு நியமத்தோடுமாறுபடாத சற்குணங்களாம். இவற்றையுடையவனே நல்லொழுக்கமுடையானென்றும் நீதிமான் என்றும் புண்ணியவானென்றுஞ் சுகபுருடனென்றுஞ் சிறப்பித்துச் சொல்லப்படுவான்.

உலகசம்பந்தமான விடயங்களி லுணர்ச்சியே * லௌகிகவிடய ஞானமெனப்படும். பிறரது ஒழுக்க வழக்கங்களை யோர்தலும், அவ்

* Knowledge of the worldly affairs.

வொழுக்க வழக்கங்கட்கேற்ப நடத்தலும், வசிக்கும் நாட்டினது சட்டதிட்டங்களி னுணர்ச்சியும், அவற்றின்படி யொழுகலும், சுவாதீனமென்பதி னியல்பினை யறிதலும், அதுபெற்றுவாழலும், மிருக சுபாவவுணர்ச்சியும், இவைபோல்வன பிறவும் ஈண்டுக் கூறிய லௌகிகவிடய ஞானமென்பதன்கண் அடங்கும். இவ்வுலகத்திற் சுகசீவனத்திற்கு இவ்வித ஞானம் ஆணிவேர் போன்றதாம். இஃதில்லையாயின் இன்பவாழ்க்கையென்பது பூதகால சமாசாரமாமேயன்றி, வேறில்லை. ஆகவே அவ்வித இன்பமற்ற வாழ்க்கையானது தற்காப்பினுக் கிடையூறாய் நிற்றலின், அவ்விடையூ றொழியுமாறு லௌகிக விடய ஞானம் பெறுதல் ஆவசியகமாகின்றது.

'மோட்சாதனப்பேறு' என்னும் விடயத்தில் மனிதர்களது கொள்கை பல்விதப்படுகின்றது. முற்காலத்தினுந் தற்காலத்தினுமுள்ள சிற்சிலரை (நிரீச்சுரவாதியரைத்) தவிர்த்து மற்றை யாவரும் இம் மோட்சசாதனப் பேற்றினையவாவி, அதற்குரியனவாய முயற்சிகளுஞ் செய்துவருகின்றனர். பேரின்பமெய்துவதற்கு மூலகாரணங்களாயுள்ள பொருள்களை யடைதலே மோட்சசாதனப்பேறு என்று கூறப்படும். இந்த விடயத்திலன்றே சில்லாண்டுகளின் முன்னர், மனிதர்கள் பல பிளவுபட்டு ஒருவரை யொருவர் விரோதித்து நிர்ப்பந்தப்படுத்தி யுண்மை யுணராது மாழ்கினர்! அக்காலங்களோடு இம்மத வாதம் நின்று விட்டதோ? அம்மம்ம! என்சொல்கேம்? இவ்வளவு நாகரிகமுஞ் சீர்திருத்தமு மெய்திய இக்காலத்திலுமுள்ள அம்மத வாதத்தின் கொடுமையினைக் கூறுதற்குச் சேடனும், எழுதுதற்கு அந்தக் கார்த்தவீரியனும் வேண்டும், பார்த்திடற்கு அமரர்கோனும் வல்லரல்லது ஏனையோராலாகற்பாலவோ? இயம்புமின்!

இவையெல்லா மொருபுற மிருப்ப, இங்ஙனங்கூறிய மோட்சசாதனப் பேறே மகா முக்கியமானது என்பதற்குச் சந்தேக மெட்டுணையு மில்லை. யாம் இந்த மோட்சசாதனப் பேற்றினைச் சிறப்புவகையா னெடுத்துக் கூறாது பொதுவகையாற்கூறுகின்றோம். ஏனெனிற் பொதுவகையாற் கூறுமிடத்து எவ்விதக் கொள்கையோர்க்கும் பொருந்துகிற்கும். மேலோர்கள் இவ்விடயங்களி லெல்லாம் அவரவர் தத்தம் அறிவினுக்கு எது உத்தமமாகத் தோன்றுகின்றதோ அதனையே கொள்ளக்கடவார் என்று வாய்ப்பறை யறைகின்றார்கள். அதனை

ச்சற்றுச் செவியிலேற்பீர்! அறிவான் மிக்கீர்! இதன் கண் நமது கொள்கைக ளொன்றோ டொன்று மாறுபடினும் நாமெல்லாம் விரோதமின்றி நட்பாளராய் வாழுத லன்றோ தவருக் கடன்பாடு? செழுந்தமிழாளர்காள் இதனை மறவன்மின்! கடவுளது அருட்பே றன்றே செல்வத்து ளெல்லாந் தலையாய செல்வம்! அதுவன்றே முத்திக்கு வித்து! அதுவன்றே ஆநந்த மழைபொழியு முகில்! அது வன்றே பேரின்பவாழ்வளிக்கு மமிழ்தம்! அதுவன்றே மலமா சொழிக்கும் மதியம்! அதுவன்றே யஞ்ஞான விருள் சீக்கு மிரவி! இத் துணைச் சிறப்பினதாகச் சொல்லப்படும் அத்தெய்வவருளைப் பெறுதல் யாங்ஙனம்? சிறிது சிந்தனை செய்ம்மின்! உபாசனையினானுந் தியானத்தினானும் அன்பினானும் பத்தியினானுமேயாம் என்று ஆன் றோருரைக்குப.—ஆதலிற் றிருவருட் பெருங்கடலாகிய கடவுளைத் தியானித்து அவரருள் பெற்றுத் தற்காத்துப் பரோபகாரஞ் செய்து புகழ்பெற்றபின்றை யுலகத்திலுள்ள ஆன்மகோடிகள் எல்லாம் மோட்சாநந்தம் பெற்று வாழ்க! வாழ்கவே!!

---

## வளவஞ்டு.

பறவைக்கூட்டங்க ளுலாவப்பெற்ற வானத்தினிடங்கள்தோறும் எழுந்த படையையொத்த வெள்ளைமேகங்கள் வெண்கொடிகளைப்போலத்தோன்றிப், பின்பு தெளிந்த கடல்நீரை நிறையவுண்டெழுந் துயரப்பரந்து, கரிய மதயானைக் கூட்டம்போலக் கறுத்த மேகங்களாகிச், சமர்க்களத்திற் பகைவர்மார்பிற் றோய்ந்தொளிரும் வேலைப்போல இருள்கெடமின்னி, வார்கட்டிய முரசம்போல அதிர்ந்து முழங்கிப் பகைசெய்யப் படையுருவாய்ப் பரந்ததல்லாமல் கடைசியிலே கருணைகொண்ட வள்ளலார்கைபோல அந்நாட்டிலுள்ள மலையிடங்கடோறுங் குளிரும்படி, நிறையாகவளவின்றி மழையைப்பொழிந்தன. அதனாலடர்ந்த கருமுகில்தவழு முயர்ந்தமலையானது தான்குடித்த நீரையெல்லாம் படித்தநூலெல்லார்க்கும் பயன்பட விரித்துரைப்பார்போலக் கொப்பளித்தமையால் அதினின்றெழுந்த அமுதமாகிய அருவி யிருந்தவோசையாகத், திரைகொண்டோடுந் தோற்றமானது அந்நாட்டுச் செல்வமலையை யெடுத்துப்

பொன்னுலகிற் சேர்க்கக்கருதி, வானவரால் விடப்பட்ட வடக்கயிறு கள்போல மழைத்தாரைகள்விழவே, மலையைச்சூழத் துள்ளிவிழும் அந்நதியானது அம்மலை பெயராதபடிக்கு வெள்ளியாற்செய்த நீண்ட சங்கிலியாற் சூழக்கட்டி, யதைப் பூமிபிடித்துக்கொண்டது போலத்தோன்றும். மீளவும் அந்நதியின் வெள்ளமானது கிரணத்தைவீசும் பல இரத்தினக்கூட்டங்களை வாரிக்கொண்டு, நுரையெழத் திரைகொண்டு, புண்படுத்திக் கொலைசெய்து கொள்ளையிடும் பகைவர்புகுந்ததுபோல எங்கும்புகுந்து, தன்வல்லமையாலெதிர்ந்த வெல்லாஞ் சாய்த்துக்கொண்டு, குறிஞ்சிநிலத்தைவிட்டுப் புறப்பட்டபின் முல்லைநிலத்திற்பாய்ந்து, தன்னுலைசைந்து வாசமலர்விடுந் தேனோடுகலந்து, மருதநிலத்தில் வரிசையாய்நிற்கு முயர்ந்த சோலைகளும், வயல்களும் நிறையும்படி தண்ணீரிலிருந்து வருமுயிர் நன்றுயுறுப்பெல்லாம் புகுந்ததுபோல் நிறைவுராயோடிக் குறிஞ்சிமுத லங்கங்கே வழியிலெதிர்த்த கல்லுக்கஞ்சாமற்கடந்து, மருதநிலத்திலுள்ள செல்வத்திற் காசைப்படாமல் நில்லாதோடி, யறிவுடையோ ரிவ்வுலகசெல்வத்தைவெறுத்து மோக்ஷமொன்றையே தேடுமாபோல அகன்றகடலைநோக்கிப்போகும்.

இப்படி மலையினின்று விழுந் தண்ணீரைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தலென்னும் நான்குநிலமும் நிறையவுண்டபின் மிஞ்சிய நீர் கடலிற் சேருந்தோற்றமானது பூமி தன்முலைப்பாலை மக்கட்கெல்லாம் நிறையவூட்டிப், பின்னும் பால்மிஞ்சியோடுதலினுல் நனைந்த வாடைமே லின்பமாய்ச் சிந்தியதுபோலுந் தோன்றும். அதனுல் பெரியோர் ஐம்பொறிகள் தாம்போகும்வழி போக்காமலடக்கி அவற்றைப் புண்ணியவழியிலே நிறுத்தல்போல உழவர்கள் நிறைவாக வோடும்ஜலத்தைச் சிதறவிடாமல் பயனுகவொதுக்கி, வாசனைமலர்நிறைந்த வயலிடத்துவிட்டு உழுவார்கள். உழுவதினுல் தீமைசெய்வார்க்கு நன்மைசெய்யுந் தவத்தோர்க்கு மரியதருமம்போல உவர்க்கட லுடுத்தகன்ற பூமி யெவர்க்குந் தாயென்று பாராமல் நெஞ்சுகிழிபட வுழுபவர்க்கும் உண்வுகொடுக்கும். இப்படித் தோன்றிய நிலத்தில் மிகுந்த கருணையுள்ள குருவின் விதியைப் போல நீரில்விளைந்த செந்நெலொன்றே கோடியாக்க கடவதென்றுவிதைத்துக் கூப்பிடத், தேரோடிவழங்கியதிருநாள்போலக் கடைச்சியர் குரவைக் கூத்தாடுவார்கள். பயந்தாலும் புண்ணியமில்லா

ததுகெடுதியெனப் பெரியோர் துணிந்து அதையொழிக்குதல்போல இன்பம் பயக்குந் தாமரை யல்லி முதலிய மலரையெல்லாங் களையெனப்பறித்துப், பின்பு செல்வமடைந்த நீசர்போலப் பசும்பயிர் தலையெடுத்துப் பெரியோர்தலைபோலவளைந்து முத்துபோல் பழுத்திருக்குஞ் செந்நெலையறுத்து, அரியாய்க்கொண்டுபோய் அந்நாட்டி லிதுவே போரென்று பலபோராகச்சேர்த்துப், பொய்யு மெய்யுங் கலந்திருக்கும் பொருளில் பொய்யைநீக்கி மெய்யைக்கொள்ளும் பேரியோர் போல வைக்கோல்கலந்த நெல்லைக் கடாக்களைவிட்டடித்து வைக்கோலை நீக்கிக்,கைகளையேந்திநிற்கும் இரவலர்க்கு முந்திக்கொடுத்து, மற்ற நெல்லுகளை யுண்ணவு முடுக்கவு மெடுத்துச்சேர்ப்பார்கள். இந்த நல்வாழ்க்கை யிசைந்தமையால் குன்றாத தருமத்தைச் செய்தவ ரின்பமாயிறந்தபின் மோக்ஷநாட்டில் சேருவார்கள்.

இவ்வாறே பாபத்தோடு துன்பஞ்செய்யும் பொல்லாங்கெல்லாம் புறத்து நின்றதினல் உப மானமெல்லாங் கடந்துயரும் நல்லறத்தின் மாக்ஷிமையுள்ள அந்நாட்டில் வழக்குந்திறமு மாண்மையுஞ் சொல்லத்தகாதனவாம். அன்றியும் தரித்திரம்வந்தபோது தனக்குச்செய்த நன்றியை நல்லகாலந் தனக்குவந்தபோது மாற்றவேணுமென்பது போல, உச்சியின்பாரத்தைப் பொறுக்கமாட்டாமல் வளைந்தகொம்பானது முன்பு தனக்குயிராகவந்துவளர்த்த தண்ணீரை வணங்கியது போலத் தோன்றவும், கரும்பினாலை யிடத்துண்டாகும் புகையுஞ் சப்தமுமேகம்போல் எழும்புதலா லதைக்கண்ட மயில்கள் சோலைகள்தோறுந் துள்ளியாடவும், குயில்கள் குற்றமுள்ள தீயோரைக் கண்ட பெரியோரைப்போல மெலிந்துவாடவும், மலர்மலிந்த வனமெங்கும் அன்புவிடாமலுங் காரணமில்லாமலுங் காடைகள்செய்யும் போரன்றி வேறு போரில்லாதிருக்கவும், தீங்கெண்ணும் பகைவர் சொல்லிய வாய்வணக்கம்போலத் தீயெழக் கடாக்கள்சினந்து தாக்க மேலே தூசியெழும்படிவிரைந்து பின்வாங்கவும், துன்பம் வந்தபோது மேலான அறத்தின்முயர்ச்சி தோன்றச்செய்யும் பெரியோரைப் போல மாதர்கள் வேர்வையெழக் கைவளையல்கள் சப்திக்கக் கடைந்த தயிரின்மேல் வெண்ணெய்கிளம்பவும், கரும்பும் இருட்டும் பனையுங் கனிகளுந் தென்னையு மலருமாகிய இவைகளிடத்து நின்றிழியுந் தேனையுண்டபின் அந்தத் தேனினு மினிதா யரிய பறவைகள்

பாடவும், பாலுண்டுபிரிந்த கன்றுகளை நினைத்து எருமைக ளன்போடு பொழியும்பாலை யன்னங்கள்வந்து குடித்த களவேயல்லாமல் வேறு களவில்லாதிருக்கவும், குயில்களுங் கொம்புகளினிறைந்த கிளிகளும் வண்டுகளும் பேசுவதுபோலப் பாட அதைக்கண்டு ஆடையைப்போலத் தோகையை விரித்த மயில்களோடு மகளிரு மாடவும், களிகூர்ந்த பறவைகளால் வனங்களொலிக்கவும், வண்டுகளால் மலர்களும் பாடல்களு மொலிக்கவும், வீணைகளொலிக்கவும், புகழும் நாவுகளொலிக்கவும், கடாக்கள் முட்டியொலிக்கவும், பெட்டையைத்தேடி குயில்களொலிக்கவும், முத்துக்களைத்தந்து கரும்புகளொலிக்கவும், மதுரத்தேனைப்பொழிந்து மலர்களொலிக்கவுமாகிய வளமையுள்ள அந்நாடெல்லா மொலிக்கும். இன்னும் அழகிய சிறகுவிரித்த அன்னங்கள் குடியிருத்தலும், அரசர்க்கரச னுளுகையும் பெற்றுத்தேனைப் பெய்யும் சோலைகளாற் சூழப்பட்ட அந்நாட்டினிடத்துச் சிறையில்வைக்குங் குற்றமுடையா ரில்லாமையால் நிழலினுற் சோலைகள் விழிகளுக்குச் சிறைசெய்யவும், குழலினுல் மாதர்கள் மலர்களுக்குச் சிறைசெய்யவும், கழலினுல் ஆடவர் காலுக்குச் சிறைசெய்யவும், மருதவேலி விழுந்த தண்ணீர்க்குச் சிறைசெய்யவுமாயிருக்கும். செந்நெலைச் சுமந்துபோகும் பண்டிகளும், ஆராய்ந்த வெற்றிலை கொண்டுவரும் பண்டிகளும், உயர்ந்த கமுகின் பாக்குள்ள பண்டிகளும், நல்லினிய கனிகள் நிறைந்த பண்டிகளும், நெருங்கிய தேங்கிளநீர்போட்ட பண்டிகளும், நிறையக் கரும்புகளைச் சுமக்கும் பண்டிகளும், தேனைப்பொழியும் நன்மலருள்ள பண்டிகளும், பொன்னும் நவமணியுங்கொண்டுவரும் பண்டிகளுமாக நாடெல்லாங்களித்துக் குறையொன்றுமில்லாமல் வாழும்படி கோபித்த பள்ளர்கள் தூண்டுங் கடாக்களிழுத்த இப்பண்டிகள் தம்முள் நெருங்கித்தேயவும், உயர்ந்ததேங்காய் பழுத்துவிழுதலால் வளர்ந்தவாழைப்பழமும் மாம்பழமும் பலாப்பழமும் மாசினிப்பழமுஞ்சாய்ந்து நசுங்கிச்சொரிந்த தேன் ஆறுகவோடினதால் எங்குமின்பங்தோயவும், குளிர்ந்த கடலில்வாழுஞ் சங்குகள் நொந்தீன்ற முத்துகள் முதல்யாவற்றையுந் தானமாக நிறையக்கொடுத்தலினுல் ஆண்டவன் செல்வமாக அந்நாட்டார்களுக்குத் தந்ததெல்லாம் பிறர்க்கு விருந்தாகச்செய்யவும், மலைபோலக்குவிந்த பொன்னுமணிகளும் மழைபோலக் கொடுக்குங் கொடையும் வேதத்தைப்

போல முனிவர் நடக்கு மாக்ஷியும் வாய்ந்துவிளங்கியதால் அந் நாடெங்கும் வானுலகம்போலுங் களிகூர்ந்தன.

மேலும் விருப்பத்தோடு பெட்டைகளைத்தழுவி யன்னங்கள் தூங்கும் வாசமலர்பூத்த குளங்களே அக்குளங்களைத் தழுவவும், நீண்டகொம்புகளில் மலர்மலர்ந்த சோலைகளே யச்சோலைகளைத் தழுவவும், அழகிய பூநிறைந்த வயல்களே யவ்வயல்களைத் தழுவவும், ஓலைவிரிந்த கமுகு பனை பாலை மா மகிழ் பலா இலந்தை சந்தனங் குங்கும மராமரமுமுள்ள பலசோலைகள் தொகுத்துச்சொல்லக் கூடாதிருக்கவும், வாசமலர் நிறைந்த சண்பகச்சோலைகள் தேன்பொழியு மாலைசூழ்ந்த கூந்தலென்பவோ என்று சொல்லவும், வண்டுகளி னொலியெழத் தேனையுகுக்குஞ் சோலைகள் மழைபெய்யுமேகமென்பவோ என்றுசொல்லவும், எழுதுவதற்கரிய வழகுள்ள பூவுங்கனிகளுநிறைந்த சோலைகள் காதோலையுங் குண்டலமும் பல வாபரணங்களு மணிந்து சந்திரமுகமாய் விளங்கு மாதரென்பவோ என்றுசொல்லவும், கொம்புகள் நேராகவளர்ந்துவிட்ட கருந்துளிர்கள் நடுவில் தேனிறைந்த பூமலர்ந்தசோலைகள் கரியபடத்தின்மேலெழுதினாற்போல வானகத்திலெழுதிய நக்ஷத்திரங்களென்பவோ என்றுசொல்லவும், அந்தமுகத்திலே பலவகைத்தேனையுண்ணு மழகிய சிறகுள்ள பறவைகளைக்காணுதலாலும் இந்தமுகத்திலே மலர்களைக்கொய்யு மிளைஞர் வடிவுள்ளவதனத்தைக் காணுதலாலும் மூன்று முகத்திலேயு மழகெழுதிய பலவகை மலர்களைக் காணலாலும், நல்ல சித்திரக்கூடம்போலச் சிலசோலைகள் தோன்றவும், பூட்டிய ஆபரணத்தைப்போலக் கொம்பிலே மலர்கள் தூங்கவும், குயில்கள் சோடாய்க்கூவவும், வண்டுகள் நாகசனமூதவும், மயில்களிணையா யுலாவிவரவும், மற்றப்பறவைகள் எல்லாங் கூப்பிடுமளவாகச் சப்திக்கவுமாயினதால் களிகூர்ந்த கலியாணப்பந்தல்போலச் சில சோலைகள்தோன்றவும் முதிர்ந்த கனிகளு மலர்களுங் கொத்துக் கொத்தாய்த் தூங்கவும், உதிர்ந்த பழங்களு மலர்களுங் குப்பையாய்க்கிடந்து விளங்கவுமாயினதால் பலமன்னர்கள் தங்கள் கிரீடமுதலான ஆபரணங்களைக் கழற்றியெறிந்து முதிர்ந்த துறவாக விருக்குமிடம்போலச் சிலசோலைகள் தோன்றவும், வெளுத்த ஆட்டுக் கடாக்களுங் கலைமான்களுந் தூயநிறமா யுயர்ந்த பொலியெருதுகளுங் கறுத்த வெருமைக்கடாக்களும் நெடுங்காலத்துந் தங்க

ளுக்குள் சண்டையிடுவதால் அரசருடைய சிலம்பக்கூடம்போலுஞ் சிலசோலைகள் தோன்றவும், கருகருவென்று ஒருபால் காடைகள் கூப்பிடவும் ஞுருஞுருவென்று ஒருபால் மயில்கள்ளொலிக்கவும் புறுக்கள்முதலிய மற்றைய பறவைகளுடைய சப்தமுமெழும்புத லால் ஓயாமல் வாராத அறிவைக்கற்கும் பாடசாலைபோலச் சில சோலைகள் தோன்றவும், மேலேமலர்ந்த மலரால் படம்விரித்திருக்க வும் வண்டுகளினிய இசையால் வீணைவாசிக்கவுங் குயில்கள் பாட வுந் தோகைமயில்க ளாடுங்கூத்தை மற்றப்பறவைகள் பார்த்திருக் கவு மாயினதால் பெரிய நாடகசாலைபோலச் சில சோலைகள்தோ ன்றவும், மயில்கள் காலைத்தூக்கிச் சோடாய்ப்போகவும் எதிராய்வர வுந் தோகை வாலைத்தூக்கி விரிக்கவும் பலகூத்து விகற்பங்களை யாடித்திரியவே யஞ்சனம்பூசிய முகமாய்க் கருங்குரங்குகள் மேலே கொம்புகள்தோறுந் தூங்கவும் பாயவுமாயிருந்து ஆரியக்கூத்தாடி யிருக்கும்பொழுது அச்சோலையையடுத்த பொய்கையுங்கூட நின்று பார்க்கும்படி குவளையென்னுந் தன்கண்களைத்திறந்து தனக்கிடந் தேடி யப்பாலோடாமல் அலைந்தலைந்து திரிவதுபோலக் கரையிலே யலைகள் மோதமோத உள்ளே யிடமுங் கிடையாதென்று கண்ட முல்லை நகைத்ததுபோலத் தன்னரும்புகள் மலர்ந்து பூக்கவுங், கூத்துநெடுங்கால மாடுதலினாற் சலித்து கொட்டாவி விட்டது போலக் காந்தள் மலர்ந்திருக்கவும், அத்தருணத்தில் தோகை மயி லைப்போலச் சிலமாதர்கள் அவ்விடத்தில் வந்தமையால் அவர்க ளழகைக்கண்ட மயில்கள் நமதழகு தோற்றதென நாணியொடுங்க வுங், கிளைகளிலுள்ள மற்றப்பறவைகளிதைக்கண்டு சிரித்தாற்போல இனியதாய்க் கூப்பிடவும், அங்நாடெல்லாம் விளங்கி யொலிக்கும்.

பின்னுங் குளிர்ந்த மாலையைத்தரித்த அம்மாதர்கள் வந்ததினு லிருண்ட சோலையிற் சூரியனுதித்ததென்று களிகூர்ந்த குயில்கள் துதித்தாற்போலப் பாடவும், அன்னங்கள் அம்மாதருக்குத் தந்நடை காட்டிப் படிப்பித்ததுபோல முன்னே நடக்கவும், மாதர்க ளந்நடை யெங்கள் பாதத்தில் பதித்தாயிற்றென்பதுபோல நடந்துபோய்ச் சந் திரகிரணங்களைத் திரட்டிவைத்ததுபோலப் பற்பல நிறமாக மலர்ந்த பூவெல்லாம் வீணிலே கானகத்திற் கிடந்ததென்று கண்டு தாங்கள் மின்னலைப்போல அந்தச்சோலையைச்சுற்றித் திரிந்து அறுக்குதலாற் சர்வ கொள்ளையாகுதென்று கண்ட வண்டுகள் கூவென்னும் ஓசை

யும், இதற்கிரங்கினுப்போலக் கிளிகள் கீகீயென்னு மோசையு மயங்க வள்ளைப்பாட்டுகளைப்பாடி வெள்ளைமுதற் பல நிறமாகிய மலர்களைக் கொய்து அழகிய மணிகளும் பவளங்களும் முத்துக்களும் பொன்னும் இவையெல்லாம் வடிவுள்ள மாலையாகக் கோத்ததுபோலப் பேரழகுள்ள மலரையெல்லாம் பொன்னூலினுலே தமதழகுக்கிணையாக மாலையாய்க்கட்டி, கட்டியமாலையை விரலின்மேல்சுழலக்காட்டி, யுனது நல்லதல்லவென்று தம்முள்ளி சலிக்கூப்பிட்டபின்பு அதையாபரணங்கள்தூங்கு மார்பிலேயு மணிக்கட்டிலேயும் வாசனைப் புகைபடிந்த கூந்தல்களிலேயும் படியச் சூடுவதல்லாமல் வாசனை நிறைந்த மலரைக் குடைந் துள்ளேகிடக்குந் தேனையுண்ணும் நெருங்கியவண்டுகள் பசியாற்றினபின் னருகேநின்று கூப்பிடுவதுபோல இம்மாதரு முருகித் தாங்கள்கொண்ட சந்தோஷத்தைக் கொப்பளித்த தன்மையாகத் தாமரை மெத்தைமேலிருந்து அன்னங்கள் பாடு மோசையும் நாணத் தாங்கள் மலர்மெத்தைமேலிருந்து மதுவின் வழியாய் வாசனைவிட்டு மலர்ந்த ஆம்பலைப்போன்ற வாய்மலர்ந்து சந்திரனொளிவுபோலத் தேர்ந்த வுணர்வுகளையும் புண்ணியத்தையும் நூற்படியே யாராய்ந்து புகழ்ந்து வீணையினோசைபோலப் பாடுவார்கள்.

ஆனதால் மேகத்துள் புதைக்கப்பட்ட மலர்ந்த கொம்புகள் தோறு மணக்குந்தேனைவிட்டுக் கண்களைப்புதைக்கு மிருள்படர்ந்த சோலைகளால் சூழப்பட்டுக் களிகூர்ந்த நாடிதுவென்றால் கண்கடந்த வழகுகொண்டு குளிர்ந்த வின்பந்தரும் வானுலகந் தேடாமலிருப்போமோ? நிழல் செய்யும் பூஞ்சோலைகளில் கண்ணுக்கு நிறமும், வாய்க்குத்தேனும், நாசிக்கு வாசமும், உடலுக்கின்பமும், செவிக்கு வீணைபோலப் பறவை யோசையுங் கிளம்பும்படி கோடாத செல்வமுடைய நாடிதுவென்றால் குறையென்று உள்ளேயிருக்கவொட்டாமல்நக்ஷத்திரங்களைப் புறத்தில்விளங்கத்தள்ளி வாடாத செல்வங்களைக்கொண்ட வானுலகந் தேடாமலிருப்போமோ? படம் விரித்த பாம்பு தன்தோலையுரித்த பான்மையாகக் கல்லுக்குள்ளேயுருஞ்சியுயர்ந்த மலையிலே தூங்கிவிழும் நதிபாய்க் தழகு நிறைந்த நாடிதுவென்றால் அலையில்லாத கருணைக்கடல்பாய்ந்து வடிவுநிறைந்த செல்வநிலைகொண்ட வானுலகந்தேடாம லிருப்போமோ? பகையில்லாமையால் குளிர்ந்த சண்பகவிருக்ஷத்தினிழலிலேகிடந்து நல்ல நித்

திவரவுந் துன்பங்களிங்கில்லாமையால் பிறர்க்கெல்லாம் விருப்பத்தை வருத்திவிக்கவும் நாடி துவென்றால் எக்காலமுமின்பங்குறையாத வாழ்வைச்செய்யுங்குணமுள்ள வானுலகந் தேடாமலிருப்போமோ? நக்கத்தக்க அளவாக நன்மைகளைக்கொண்ட நாட்டுச்செல்வத்தைத் தேடினபோது மக்களாசைக்கு மேலுஞ் செல்வங்களையுடைய வானுலகந் தேடாதிருப்போமோ? அப்படி வானுலகந் தேடாமற்போனால் அழியாதவுயிர்களாவன ரழியாதமோக்ஷவின்பத்தை விரும்புவதால் அக்கவலையைக் காடுசூழ்ந்த இவ்வுலகங் காட்டுநன்மையாற்றுமோ? ஆற்றாது என்பதால் வீணையின்பமாய்ப் பாடினதுபோலக் கண்ணுக்கின்பஞ்செய்யு மழகுடையா ரிவையும் இன்னும் பலவுங் குளிர்ந்த தேனின்பத்தோடே பாடியதால் அந்நாட்டார் பலநாளுங் களிகூர்ந்து வானுடைய வின்ப மனுபவிப்பார்கள்.

இதன்றி ஆலைகளும் பண்டிகளுந் தேய்தலால் முழங்கவும், நிறைந்த புகழ்களுஞ் சங்குகளும் பாவாகமுழங்கவும், ஆட்டுக்கடாக்களு மின்னலும் பாய்தலினால் முழங்கவும், எருமைகளு மாதர்களுந் தண்ணீரில் தோய்ந்து விழுதலால் முங்கவுஞ், சோலைகளிடத்து வாசனையுஞ் செல்வமுங் கொம்புகளிடத்து மலர்களும் மலர்களிடத்துத் தேனும் வானிடத்து நக்ஷத்திரம்போல எங்கும் நவமணிகளும் பசுக்களிடத்துப் பாலுங் குறைவின்றி யிருக்கவும், ஆலைகளிடத்துள்ள தேனுங் மரங்களிற் பூத்த மலரிடத்துள்ள தேனுஞ் சோலையிடத்துள்ள தேனுங் கனிகளிடத்துள்ள தேனும் மாலைகளிடத்துள்ள தேனும் வண்டுகள்மொய்த்த இருட்டிடத்துள்ள தேனு மெல்லாம் வயலிடத்துச் செந்நெல்விளையும்படி பாயவுஞ், சூரியனழகைத் தாமரை காட்டவும், நக்ஷத்திரங்களழகை மற்றநீர்மலர்காட்டவும், மேகத்தின் மழைத்துளி யழகைச் சொரிந்த தேன்காட்டவும், வானுலகிலுள்ள வழகைக்காட்டுங்கண்ணாடிபோலக் குளங்களழகு காட்டவும், மலையின்சிகர மேகத்தோடு பொருதவுங், கொடிப்போர் கரங்கள் மழையோடு பொருதவும், பொன்னாபரணங்கள் மாலைகளோடுபொருதவும், அம்மாலைகள் மார்போடு பொருதவும், பூமியோடு பண்டிகள் பொருது நடக்கவும், குளிர்ந்தபாலோடு பாவினிமை பொருதவும், நான்கொள்ளாத தொன்றுண்டோ என்றதுபோலச் செல்வங்களோடு நாடு பொருதவும், அந்நாட்டுச்செல்வம் வான்வீட்டுச்செல்வத்தோடு பொருதவுங், காலைநேரத்தி லரும்பவிழ்ந்த வாசத்தாமரை

மெத்தைமேல் சங்குகள் சூலுளைந்து விளங்கு முத்துக்களையீன் றப் புறம்போக மாலைநேரத்திலன்னங்கள்வந்து அங்குள்ள முத்துக்களைக் கண்டு தங்கருவென்றெண்ணி யடைகாத்துக் கருப்பஞ்சாற்றிலு மின்பமாய்ப்பாடவுங், காட்டிடத்தில் முனிவர்களும் வாசக் கஞ்சமல ரிடத்து அன்னங்களும் பூவிடத்து வண்டுகளு கொம்பிடத்துப் பே சுங்கிளிகளும் நாவிடத் தினியபாவும் நங்கையர்கையிடத்தில் வீணை களுமாக இவ்வண்ணம் எவ்விடத்தும் எந்நாளும் அரியகருணையுள்ள எந்தையை வாழ்த்திய வோசை கிளம்பவும், அறத்தினல்வரும் புக ழே யரும்புகழென்றும் தன் பகைவனைக்கொல்லுந் திறத்தினல் வரும் புகழே வஞ்சனையென்றுந் தெளிந்த வுள்ளத்தைக் கெடுக் கும் பாவத்தினல் வருமின்பந் துன்பமென்று மயக்குவிக்குமெல் லாம் புறத்துநீக்கி முடியாத களிகூர்ந் தியாவரு மோங்கவும், வருந் தாமறசெய்யும் நல்லறங்களொழியத் தீவினையுந் தள்ளப்படாத துன் பங்களும் உள்ளமயக்கமும் புகழ்வோரல்லாமல் இகழ்வோரில்லா மையு மானதால் கதிர்பரப்புஞ் சூரியனைப்போல் முடிவின்றி யென் பிதா அருளிச்செய்த நூலினெளிவுடைய மெய்யான வேதவிதிக ளின்படியே விரைந்துசெய்த நல்லறங்களைக்கொண்ட மனத்தோ ரடைந்த செல்வங்களை யருந்தமிழும் நிகராகாததுமன்றிச் சொல் லருமையறிந்த வித்துவான்களாலுஞ் சொல்லப்படாவாம்.

---

## மாணிக்கம்விற்ற படலச்சுருக்கம்.

வீரபாண்டியனுக்கு போகஸ்திரீகள் பெற்ற பிள்ளைகள் மன்மத னைப்போலவும் நெல்லுப்பயிருக்குக் களைபோலவும் வளர்ந்தார்கள். இப்படி யிவர்கள் வளர பின்னும் வீரபாண்டியன் பட்டத்துக்குத் தகுந்த பிள்ளைவேண்டுமென்று தானுந் தன்குலபத்தினியும் அங்கயற் கண்ணி மணளனகிய கடவுளைக்குறித்து அஷ்டமி சதுர்தசி சோம வாரமுதலான விரதங்களை அனுஷ்டிக்க அப்போது கடவுளது கிருபையாலே சிறிது காலத்துக்குப்பின் அருந்ததிபோலுங்கற்புள்ள தேவிவயிற்றிலே ஆலம்வித்தின்முளைபோல உலகமெல்லாம் ஒரு குடைநிழலிலாளும்படி ஒரு புத்திரன் பிறந்தனன். அப்புதல்வனுக்கு மிகுந்த சந்தோஷத்துடனே சாஸ்திரப்படி ஜாதகமுதலான சடங்கு

களெல்லாமுடித்து அவனருமையாய் வளருங்காலத்தில் வீரபாண்டியன் வேட்டையாடப்போய்விதிவசத்தாலே புலியால்கொல்லப்பட்டு சுவர்க்கலோகத்தையடைந்தான். அந்தச் சமாசாரம் மதுரையிலுள்ள பெண்டுகளெல்லாருங் கேட்டுக் கையால் மார்பிலடித்துக்கொண்டு உடம்பிலணிந்த சந்தனமழிய கண்களில் முத்துமுத்தாய் நீரொழுக வழுது பிரலாபிக்கிற சமயத்தில் இறந்த அரசனுடைய போகப் பெண்கள் பெற்ற பிள்ளைகளானவர்கள் இதுதான் சமயமென்று யானை குதிரைமுதலான ஆபரணங்களையும் திரவியங்களையும் ராஜமுடியையும் களவுசெய்து மந்திரி பிரதானிகளுக்குத்தெரியாமல் ஓடி ஒளிந்துபோனார்கள். பின்பு வீரபாண்டியன் உத்தரவின்படி நடந்து வந்த மந்திரி முதலானவர்கள் குலபத்தினி குமாரனைக்கொண்டு இறந்த அரசனுக்குக் கருமங்களெல்லா முடித்துப்பின்பு அந்தப்பிள்ளைக்குப் பட்டங்கட்ட உத்தியோகித்து திரவியசாலையிற் புகுந்து நவரத்தின கிரீடத்தைத்தேடி காணாமல் திரவியங்கள்முதலிய சிலபொருள்களையும் காணாமல் திகைத்து வாடி மனோவியாதியால் வருந்தி கிரீடமுதலிய பொருள்களை மாற்றாராகிய புத்திரர்கள் கொள்ளையடித்துக்கொண்டு போனார்களென்று தெரிந்து வேறே கிரீடம் செய்யலாமென்றால் விலையதிகப்படுமென்றும் உயர்ந்த ரத்தினங்கள் கிடைக்காதென்றும், அரசனில்லாமல் கடல்சூழ்ந்த வுலகமெல்லாம் வருந்துமென்றும் இதற்கு நாம் என்செய்வதென்றும் ஆலோசித்துப் பின்னும் சோமசுந்தரக்கடவுள் செய்கை யெப்படி முடியுமோ பார்ப்போமென்று மந்திரிகள் அளவில்லாத கவலைகொண்டு மிகவுஞ் சிறியவனான ராஜகுமாரனைக் கூட்டிக்கொண்டு அரண்மனையைவிட்டு மகாமேருபோன்ற கோபுரவாசலுக்கு முன்னே வந்தனர். வரவும் அவர்கட்கெதிரே சரிகைச்சோமனாகிய கோவணவுடை இடம்படவிளங்கவும் பலவித ரத்தினமூட்டை பிடரியிற்றொங்கவும் அளவில்லாத விலைபெற்ற தோள்வலையங்கள் பளபளவென்று மின்னவும் முப்புரிநூல் வலம்படவிளங்கவும் இந்திரவில்லைபோல் நவரத்தினமாலை மார்பில் விளங்கவும் அழகான ரத்தினகுண்டலங்கள் தோள்மேல் அசைந்தாடவும் வேதங்கள் மகிழுகின்ற பாதங்கள் பூமியிற்படவும் பாண்டியர்களுக்குக் குலதெய்வமாய் அவர்கள் இடரை நீக்குதற்கு சௌந்தரபாண்டியனா யரசாண்ட சோமசுந்தரக் கடவுள் ஒரு வர்த்தகனாய் வந்து, எதிரே வருகிறவர்களைக்கண்டு நீங்கள் என்னகாரணத்தினாலே

வியாகுலசிந்தையராய் வருகிறீர்களென்று கேட்க, அந்தமந்திரிகள் முன்னேநடந்த சங்கதிகளைச்சொல்லக்கேட்டு வர்த்தகனாய்வந்த கடவுள் நீங்கள் ஏன் விசனப்படுகிறீர்கள், என்னிடத்தில் ஒன்பது வகை ரத்தினங்களு மிருக்கின்றன, அவைகள் பதினாயிரங்கோடி பொன் விலைபெற்றனவென்று அவைகளை வகைவகையாய்க் காட்டு தற்கு கிழக்குமுகமாயிருந்து, நீலவஸ்திரத்தை விரித்து நடுவிலும் கிழக்குமுதல் எட்டுத்திக்கிலும் முத்து முதலாகிய ரத்தினங்களைக் கொட்டி இந்த ரத்தினங்கள் வலாசுரனுடைய தேகசின்னங்களென்று சொல்ல, மந்திரிகள் அந்த வலாசுரனென்பவன் யார், அவனுடைய தேகம் ரத்தினங்களான விதம் எப்படி, சொல்லுமென்றுகேட்க, அந்த வலனென்பவன் முன்னாளிலே மூன்று மூர்த்தியும் தானாக விளங்குகிற முக்கண் மூர்த்தியினுடைய பாதகமலங்களைப் பூசை செய்த தவத்தினாலே கடவுள் பிரசன்னமாய் வந்து உனக்கு என்ன வேண்டுமென்று கேட்டனர். அதற்கு வலாசுரன் தாழ்ந்து வணங்கி "சுவாமி, நான் யுத்தத்திலே யாராலும் சாவாதவரமும் அல்லது விதிவலியால் நானிறந்தால் எனது தேகம் பற்றற்றயோகிகளும் விரும்பத்தக்க ரத்தினங்களாகவும் கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்திக்க" அப்படியே கடவுளருள்செய்தார். வரம்பெற்ற வலாசுரன் இந்திரனிடத்திற்சென்று சண்டைவேண்டி அவனுஞ் சம்மதித்து இருவரும் சண்டைசெய்தபோதில் இந்திரன் வலனுடனே சண்டைசெய்யமாட்டாமல் தோற்று ஓடினான். இந்த வலன் சாவாவரம் பெற்றவனாகையால் நம்மால் எக்காலத்திலும் வெல்லப்படான், இவனை உபாயத்தினாலே வெல்லவேண்டுமென்று ஆயுதங்களில்லாமல் தேவர்களுடனே கூடிச்சென்று அசுரசிங்கமாகிய வலனைக்கண்டு நடுங்கி, "அசுரேந்திரா! உன்னுடைய ஜெயகீர்த்தி எல்லாலோகங்களிலும் விளங்குகின்றதினாலே உன்னிடத்தில் அதிக சந்தோஷமுண்டாயிற்று, அதனாலே உனக்குவேண்டிய வரத்தைக்கேள், நான் தருகிறேன்" னென்ன, வலாசுரன்கேட்டுக் கைகளைக்கொட்டி மேகத்தி விடிபோல் நகைத்து, "இந்திரா! நல்ல வார்த்தை சொன்னாய், எல்லாரும் சிரிக்க நீ என்னை முதுகு கொடுத்தோடச்செய்த ஜெயமும் அதனாலுண்டாகிய கீர்த்தியும் உன்பெருமையும் இப்போது நீ செய்த யுத்தத்தில் வெளியாயின, உன்னுடைய கீர்த்தி எங்கும் பிரசித்தப்பட்டன, இதைப்போலவே நீ கொடுக்கிறவரமும் நிலைநிற்கு

மல்லவா, ஆதலால் எனக்குக் கடவுள்கொடுத்த நல்ல வரமிருக்க உன்னிடத்தில் நான் பெறத்தக்கதுமுண்டோ, இனி உனக்கு வேண்டியவரத்தை கேள் கொடுக்கிறேன், அப்படி நான் கொடாவிட்டால் உன்னைப்போல் சண்டையில் முதுகிட்டோடின அபகீர்த்தியை அடைவேனென்றான்." அப்படிச் சொல்லக்கேட்ட இந்திரன் "அசுரேந்திரனாகிய வலனே! பரமசிவனுடைய வெள்ளி மலைச்சார்பில் ஒரு யாகம் செய்யப்போகிறேன், நீ அந்த யாகத்துக்குப் பசுவாய் வரவேண்டு" மென்றான். அதுகேட்ட வலாசுரன், முன்னே ததீசி மகாமுனி உனக்குக்கொடுத்த முதுகெலும்பாகிய வச்சிராயுதத்தினாலே பெற்ற புகழுடம்புபோல் என்னுடம்பெல்லாம் நல்ல ரத்தினங்களாகச் சாகின்ற கொடையினாலும் அழியாத வீரத்தினாலும் புகழுடம்பு இரண்டுண்டாகுமல்லவா, ஆனபடியினாலே நீ எனக்குப் பகைவனில்லை, நண்பனாய் நீ செய்யும் வேள்வியுணவைத் தேவர்களெல்லாரும் உண்பதனாலே தருமமும் புகழும் எனக்குண்டாக யாகப்பசுவாக வேண்டுமென்கிறாய், அப்படியே யாகப்பசுவாவேன், கொடுப்பதே பெருமை, வாஙுதல் சிறுமையல்லவோ வென்று சம்மதித்து வலாசுரன் இந்திரனை முன்னே போகச்சொல்லிப் பின்பு தன் குமாரனுக்குத் தன் அரசாட்சியைக் கொடுத்து வேதசாஸ்திரப்படியாகப் பசுவாய் இந்திரன் செய்கிற யாகசாலையினிடத்தில் வந்து நின்றான். அதுகண்டு இந்திரன் சொன்னபடி நடக்கவும் கொடுக்கவும் உன்னைப்போல் தாதா உண்டோவென்று கொண்டாட வலாசுரன் பின்னும் அதிகமான களிப்புக்கொண்டு மேருமலையுடனே எதிர்த்த விந்தமலைபோல் உயர்ந்து என்னை வேள்விக்கம்பத்தோடே கட்டுங்களென்று கிட்டிநின்றான். அப்போது அவனைத் தருப்பைக் கயிற்றால் சிலந்திநூலாலே சிங்கத்தைக் கட்டினாற்போல யூபத்திற் கட்டி வாயைமூடி மூச்சடங்கக்கொன்று மடித்தார்கள். மடிந்த வலனாகிய வள்ளல் தேவர்கள் பூமழைபொழிய விமானத்தின்மேலேறிப் பிரமலோகஞ்சேர்ந்தான். பின்பு இந்திரன் வேதஞ்சொன்னபடியே அந்தப்பசுவினுடைய வபையை எடுத்து அக்கினியில் ஆகுதிசெய்து தேவர்களையும் உண்ணச்செய்து யாகத்தை முடித்தான். அந்தப் பசுவினுடைய இரத்தமெல்லாம் மாணிக்கங்களாகவும், பல்லெல்லாம் முத்துக்களாகவும், மயிரெல்லாம் வைடூரியமாகவும், எலும்பெல்லாம் வயிரமாகவும், பித்தம் பச்சையாகவும், நிணம்

கோமேதகமாகவும், தசை பவளமாகவும், கண்கள் நீலமாகவும், கபம் புஷ்பராகமாகவும், இப்படி நவரத்தினங்க ளுண்டாயின.

இவ்வாறு ரத்தினங்களின் வரலாற்று மரபைச்சொல்லி வர்த்தகராய்வந்த கடவுள் வடதிசையைப்பார்த்துத்தோத்திரம்பண்ணி அர்ச்சனைசெய்து அந்த ரத்தினங்களைக் கைகள் நிறையவேந்தி மதுரைக்கடவுளைப்பார்த்துக்கும்பிட்டு உட்பார்வையாலே இந்த ராஜகுமாரனுக்கு அளவிறந்த ஆயுளும் செல்வமும் பெருகக்கடவதென்று வாழ்த்திக்கொடுக்க ராஜகுமாரனும் இந்திர விமானத்தைப்பார்த்து கடவுள் திருவடிகளை வணங்கி இரண்டு கையாலும் வாங்கிக்கொண்டான். கொடுத்த வர்த்தகர் மந்திரிகளையும் இராஜகுமாரனையும் முகமலர்ந்து பார்த்து இந்த ரத்தினங்களைப்பதித்த நவரத்தின கிரீடத்தைச்சூட்டி அபிஷேக பாண்டியனென்று பெயரிடுங்களென்ன, மந்திரிகள் அந்த ரத்தினங்களுக்குள்ள விலை கொடுக்கத்தொடங்கி அவ்வர்த்தகரைப்பார்க்கக் காணாமல் மயங்கினார்கள். அப்போது ஒருருவாய் வந்த வர்த்தகர் இடபவாகனத்தின்மேல் பார்வதி சமேதராய்க் கோயிலுக்குள் போகக்கண்டு வந்த வர்த்தகர் இவரேயென்று பின்றொடர்ந்து சென்று கடவுளை வணங்கி இந்த ரத்தினங்களுக்கு விலைகொடுக்க எங்களால் முடியுமோவென்று துதித்து எங்கள் உடல் பொருளாவி மூன்றும் உம்மவாகையால் சுவாமி! மேகஞ் செய்யும் உபகாரத்துக்குப் பிரதி உபகாரம் செய்வதுண்டோ என்று பலதரம் துதித்துக் கோயிலை வலம்வந்து அருள்பெற்றுக்கொண்டு வேதப்பிராமணர்கள் ஆசீர்வதிக்க, அரசன்கோயிலுக்குள் எல்லாரும் வந்து சோமசுந்தரக்கடவுள் ஒன்பது கிரகங்களையும் நக்ஷத்திரங்களையுமே மணிகளாகச்செய்தாரோ அல்லது அவர் அணிந்த பாம்பின் மணிகளோ ஏதென்று மதிக்கக்கூடும். இந்திரலோகத்திலும் இந்த ரத்தினங்கள் கிடையாவென்று ஆச்சரியப்பட்டு மயனிலும் சிறந்த கம்மாளர்களுக்கு மிகுந்த சிறப்புச்செய்து ராஜகுமாரனுக்கு நவரத்தினகிரீடம் செய்வித்துச் சாத்திரப்படி முடிசூட்டி அபிஷேக பாண்டியனென்று பேரிட்டழைத்து பட்டணப் பிரவேசம் வந்து கடவுளையும் வணங்கி அபிஷேகபாண்டியன் சதுரங்க சேனைகள்சூழச் சத்துருக்களெல்லாம் வணங்க மனுநீதிப்படி பயிர்களை ரக்ஷிக்கிற மேகம்போல உலகத்தை ரக்ஷித்து வருகிறகாலத்தில் பழைய கிரீடத்தைத் திருடிக்கொண்டுபோனவர்களைத் தேடிப்பிடித்

தூக்கொண்டுவந்து சிலர்விட அவர்களிடத்தில் கொண்டுபோன பொருள்களெல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு அரசாண்டான்.

தந்தைதன் காமக் கிழத்தியரீன்ற தனயராய்த் தனக்குமுன் னவராய்
மூந்தைநா ளரசன் பொன்னறை முரித்து முடிமுதற் பொருள்கவர்ந்துட்குஞ்
சிந்தைய ராகி மறுபுலத் தொளித்த தெவ்வரைச் சிலர்கொடு விடுப்ப
வந்தவர் கவர்ந்த தனமெலாமீள வாங்கினு னீர்ங்கதிர் மருமான்.

---

## அரசனும் புலவனும்.*

**சூரசேனவர்மன்:**—ஏ! சுசீலரே! நாம் அன்று பேசிக்கொண்டதற்கு நேர்விரோதமாக இன்றைக்கு ஒன்று கேள்விப்பட்டோம். அதுமுதல் என்னவோ எமது மனம் வருத்தப்படுகின்றது.

**சுசீலர்:**—அப்படி மகாராஜா அவர்கள் வருத்தப்படும்படியான விஷயமெதுவும் சம்பவித்ததாகத் தோன்றவில்லையே!

**சூரசேனவர்மன்:**—நாம் காட்டில் துரத்திய அவ்விருவரும் புலி முதலிய மிருகங்கட்கு இரையாய் விடுவரேயல்லாமற் பிழைக்கமாட்டாரென்றன்றோ நினைத்தோம்? அப்படியிருக்க இன்று நம்முடைய ஒற்றர்வந்து அவர்கள் இருவரும் சோழநாட்டிலிருப்பதாகச் சொல்லுகின்றார்கள்! அவர்கள் எப்படிப் போயிருக்கக்கூடுமோ தெரியவில்லை. இந்த விஷயம் காதிற்பட்டதுமுதல் எமக்குக் கவற்சி பெரிதாயிற்று. சுசீலரே! இதற்கு என்னசெய்யலாம்? நன்றாய் ஆராய்ந்து சொல்லுமின்!

**சுசீலர்:**—மகாராஜா அவர்கள் இவ்வற்பவிஷயங்களுக்கெல்லாம் கவற்சியடைவானேன்? தாங்கள் யாருக்கு அஞ்சவேண்டும்? எதற்குப் பயப்படவேண்டும்? சற்குணவழுதியும் சுந்தரியாரும் †பிழைத்துத் தாம் இருக்கின்றார்களோ என்பதே முதல் முதலிற் சந்தேகம். அப்படியே யவர்கள் பிழைத்திருந்தால்தான் என்ன? அன்றி யவர்கள் சோழநாட்டில் வீரேந்திரசோழ னுதவிபெற்றால்தான் என்ன? நமக்குப்பயமா? நாம் எப்பொழுதும் பயப்படவேண்டுவதேயில்லை.

* இது வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் செய்த ரூபாவதி என்னும் நாடகத்தின் மூன்றாவது அங்கத்திற் முதற்களம்.

† பாண்டியநாட்டுப்பூர்வ ராசனும் அவன்மனைவியும்.

அரண்மனை வாயிலில்.

**சேவகன்:**—ஓய்! நீர் யார்?

**புலவர்:**—நாம்தாம் மகாவித்துவான் வித்தியாசாகரப்புலவர்! அரசன்மீது கவிபாடி வந்திருக்கின்றும்- இதை யரசனிடந் தெரிவிப்பாயாக.

**சேவகன்:**—ஏ! புலவர்! ராஜாவுக்குத் தெரியப்படுத்தினுல் நமக்கு என்ன கொடுப்பீர்?

**புலவர்:**—எமக்கு மகாராஜா அவர்கள் கருணைகூர்ந்து அளியாநிற்கும் பரிசில் நான்கிலொன்றீகின்றும். பெறுதி!

**சேவகன்:**—ஏ! புலவர்! அதென்ன? பெறுதி! பகுதி! விகுதி! அதெல்லாம் இங்கே நம்மிடத்திலே இலக்கணம் படிக்காதேயும்! சொல்லும் நேரே! எவ்வளவு கொடுப்பீர்?

**புலவர்:**—அதுதான் நாலிலொன்று தருவோம் என்று அப்பொழுதே சொன்னேமே! தெரியவில்லையோ?

**சேவகன்:**—சரி, புலவர்! மோசம் செய்யக்கூடாது. பார்த்துக்கொள்ளும். பத்திரம்!

**புலவர்:**—சரிதான் போ. (சேவகன் போதல்.)

எந்தப் பெரியமனுஷன் வீட்டிலும் இந்த மாதிரி சிற்சில சேவகநாய்களிருந்துகொண்டு எம்போலியரைக் காண்டலுங் குரைத்து வெள்ளென்று மேலேவிழத் தலைப்படுகின்றன! சீ! இவ்வரசன் என்னவோ! மகா காவல்வைத்திருக்கின்றுன்! முன்னிருந்த வள்ளல் சற்குணவழுதி யாம் எப்பொழுதும் தாராளமாய் அரண்மனைக்குட் போகலாம் என்று உத்தரவு செய்திருந்தான்!—இவனுக்கு நம்மை யின்னுந் தெரியாதே! தெரிந்தால் இவனும் அவ்வாறு உத்தரவு செய்யக்கூடும்.

**சேவகன்:**—மகாராஜா அவர்களுக்கு ஆயிரங்கோடி வந்தனம்.

**சூரசேனவர்மன்:**—ஏடா! சேவகா! என்ன சங்கதி? சீக்கிரமாய்ச் சொல்லேடா.

**சேவகன்:**—மகாராஜா அவர்களிடத்தில் மகாவித்துவான் வித்தியாசாகரப்புலவர் தாம் வந்திருப்பதாகச் சொல்லச்சொன்னுர். இதுவிஷயம் சமுகத்திற்குத் தெரியப்படுத்திவிட்டேன்.

**சுசீலர்:**—ஏ! சேவகா! நீபோய் அவரை உள்ளேவரச்சொல்.

(சேவகன் போதல்.)

தாங்கள் இதைக்குறித்து ஒன்றும் இப்பொழுது யோசனைசெய்யவேண்டுவதேயில்லை. அப்புறம் வேண்டுமென்றால் பேசிக்கொள்ளலாம்.

**சேவகன்:**—ஏ! புலவர்! போம்! வரச்சொல்லி மகாராஜா உத்தரவுசெய்தார். சொன்னதை மறந்திடாதேயும்! பத்திரம்!

**புலவர்:**—சுகபோக சுகுண மன்மதரூப மகாராஜ சூரசேன வர்மர் சமுகத்திற்கு அடியேம் ககன மூதண்ட வேதண்ட பிரமாண்ட மெங்கணுங் கனபுகழ்படைத்த வரவேம் இமயமுதலீழம்வரையிவர்க்கு நிகரெவருமில்லையென்று சொலப்பெற்ற தகையேம் கவி மதக்குஞ்சரங் கல்விக்களஞ்சியம் ஆதல்பற்றி வித்தியாசாகரப் புலவரெனு மேலான வபிதான முடையராவேம் வந்தனந் தந்தனம் நுந்தனம் பெற்றேகவே!

**சூரசேனவர்மன்:**—ஏ! புலவரே! என்ன மடமடவென்று உம் பாட்டிற்கு அடித்துக்கொண்டு போகிறீரே!

**புலவர்:**—என்ன! மகாராஜா அவர்கள் உத்தரவு தெரியவில்லையே! எமது பாட்டிற்காக எம்மை யடிக்கிறதா? தெரியாது வந்துவிட்டேன்! மகாராஜாவே! மன்னிக்கவேண்டும்! மன்னிக்கவேண்டும்!

**சுசீலர்:**—ஓய்! கத்தாதேயும்! சும்மா இரும்!—இவர் நல்ல வித்துவான்! சமுகத்திலே பேசியது தெரியவில்லை. அதனாலேதான் இப்படிப்பேசினார்! வேறொன்றுமில்லை.

**சூரசேனவர்மன்:**—எங்கே நாம் பாண்டியனோடு செய்த யுத்தத்தில் அடைந்த வெற்றியைப்பற்றிப் பாடிய கவியைச் சொல்லச் சொல்லும். சுசீலரே! கேட்போம்.

**சுசீலர்:**—ஏ! புலவரே! பதறாமல் பயப்படாமல் தைரியமாய் வேகமாய்ச் சொல்லாமல் நிறுத்திச்சொல்லும், நீர் மகாராஜா அவர்கள்பேரிற்செய்த கவியை.

**புலவர்:**—கொஞ்சம் கண்பார்த்துக்கொள்ளவேண்டும்!

**சுசீலர்:**—அதெல்லாம் யோசியாதேயும்! கனகாபிஷேகம் செய்யச்சொல்லுகின்றேன்! கவியைச் சொல்லும்.

**புலவர்.**—பளபளா ! மிக்கியந்தனம் !

**சுசீலர்:**—இதுதானே எமக்குக் கோபம் வருகின்றது ! சொல்லுமென்றால் உடனே சொல்லவேண்டாமா ?

**புலவர்:**—இதோ சொல்லுகின்றோம். கேண்மின் !

திருச்சிற்றம்பலம்.

நிம்பமலர் மாலையை மிலேச்சுசற் குணவழுதி
நிகரற்ற பாண்டி ராஜ
னின்மகிமை யோராது மதிகெட் டெதிர்க்கவவ
னிமிடத்தி னிற்றொலையவே
தும்பைமலர் வேய்ந்துயுத் தஞ்செய்து வென்றுசந்
தோஷமுடன் வாகை மலருஞ்
சூடிநற் பாணர்கா டொறும்வந்து பாடிடத்
தேர்க்கயர்கள் வாழ்த்தெ டுப்பச்
சம்பகங் கமழ்குழலி னார்போக முற்றொளிரு
சந்தவடி வுள்ள சதுரா
சகமெலாந் தனதாளு கைக்குட் படுத்திய
தனக்குவமை யெவரு மில்லாய்
வம்புறும் பெண்ணையந் தார்ச்சூர சேனனெனு
மகராஜ மகிப நீதான்
வரையாம லீந்தென்பொருண் மிடிதீர்த்து நீடூழி
மாட்சியுடன் வாழி யவரோ.

திருச்சிற்றம்பலம்.

**சுசீலர்:**—ஏ ! வித்தியாசாகரப் புலவரே ! கவி வெகு நன்றாயிருக்கின்றது ! எங்கே ! கொஞ்சம் அர்த்தஞ் சொல்லுங் கேட்போம்.

**சூரசேனவர்மன்:**—(தனக்குள்) அறியாது செய்துவிட்டோம். இவ்விடத்திலே வைத்திருந்து காரியத்தைப் பார்த்திருக்கவேண்டும். மிஞ்சிப்போயிற்று. இனிமேல் என்னசெய்கிறது ? வருவது வந்துதானே தீரும் !

**புலவர்:**—வேப்பம் பூமாலையை யணிந்த சற்குணபாண்டியன் உன்னுடைய மகிமையை யறியாமற் புத்தி கெட்டுப்போய் உன்னை யெதிர்த்தமாத்திரத்தில் அவன் ஒரு நிமிஷத்திற்றானே தோற்றுப்

போகும்படி தும்பைப் பூமாலை யணிந்து யுத்தம்பண்ணி அவனை ஜயித்து வாகைமாலை தரித்துப் பாணர்பாடத் தோகையர் வாழ்த்தச் சண்பகப்பூவாசனை பொருந்திய கூந்தலையுடைய மாதர்களது போக நல மனுபவித்துப் பிரகாசிக்கின்ற அழகான ரூபமுள்ள நற்குண முடையவனே! பூலோக முழுவதுந் தன்னுடைய சக்கிராதிபத்தி யத்திற்குக் கீழ்படுத்தித் தனக்குச் சமானமானவ ரெவருமில்லாதவனே! மணநிறைந்த பனம்பூமாலையைத் தரித்த சூரசேனவர்மன் என்ற திவ்ய திருநாமத்தையுடைய மகாராஜ பூபதியே! எனக்கு அளவற்ற திரவியத்தைக் கொடுத்து எனது தரித்திரந் தரித்திராவண்ணஞ்செய்து நீ நெடுங்காலம் சிறப்புடனே வாழ்வாயாக வென்பதாம்.

**சூரசேனவர்மன்:**—சுசீலரே! கவி வெகு நன்றாயிருக்கின்றதே! அர்த்தஞ்சொல்லிய பிற்பாடன்றோ தெரிகின்றது. ஏ! புலவரே! நீர் கேட்டுக்கொண்டபிரகாரம் உம்முடைய தரித்திரம் நீங்கும்படி பதினாயிரம் வராகன் உமக்குக் கொடுக்குமாறு உத்தரவு செய்திருக்கின்றோம்! பெற்றுக்கொள்ளும். போம்.

**புலவர்:**—மிகவுவந்தனம். ஆயினும் நான் அரண்மனை வாயிற் சேவகனுக்கு எமக்குக் கிடைப்பதிற் காற்பங்கு தருவதாகச் சொல்லி யிருக்கின்றேம். அதையுஞ் சேர்த்துக்கொடுக்க உத்தரவு செய்தால் மிகவும் நலமாயிருக்கும். அல்லாக்கால் அவன் எம்மை யதிகமான அரந்தைக்கு ஆளாக்குவான்! (புலவர் போதல்.)

**சுசீலர்:**—போய்வாரும்! அப்படியே செய்யச்சொல்வோம்—தாங்களென்ன இவ்வாறு கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள்? அப்படியே யிருந்தாலுந்தான் என்ன? எப்பொழுதும் யாம் யுத்தசன்னத்தராகவே யிருக்கின்றோமே! நமக்கென்ன?

**சூரசேனவர்மன்:**—நமக்கொன்றுமில்லை யாயினும் எம்முடைய மனம் என்னவோ சாந்தப்படுகின்றதில்லை. யாம் ஆதியிலேயே சாக்கிரதையாயிருந்திருக்கவேண்டும். (சேவகன் வருதல்.)

**சேவகன்:**—மந்திரியார் சுசீலரவர்களைக் கூட்டிப்போகும்படி யவர்கள் வீட்டினின்றும் ஆள் வந்திருக்கின்றான். இதுவிஷயம் சமுகத்தில் தெரியப்படுத்தினேன்.

**சூரசேனவர்மன்:**—என் சுசீலரே! உமது வீட்டிலேலதேனும் நீர் செய்யவேண்டிய காரியமுண்டோ? நீர் போகவேண்டியது அவசியந்தானோ?

**சுசீலர்:**—ஆம்! போகவேண்டும்.

**சூரசேனவர்மன்:**—ஆனாற் போய்வாரும். (சுசீலர்போதல்)

சோழன் வீரேந்திரனென்பவன் அதிகமான சேனா பலமுடையவனோ? இந்தச் சற்குணவழுதியின் பேச்சைக்கேட்டு நம்மீது படையெடுத்து வருவானோ? நாம் ஆதியாரம்பமுதல் இதுவரை செய்தனவெல்லாம் பிசகேயாம். இன்னுங் கொஞ்சம் யோசனை செய்யாமற்போனோம். இவ்வளவு மதிகேடராயிருப்போமென்று எண்ணவேயில்லை. எமது மனம் ஒருநாளும் இவ்வாறு பதறினதில்லையே! இவ்வாறு பதறுவதைப் பார்த்தால் ஏதோ கேடு வரும்போலத் தோன்றுகின்றதே!—(மௌனம்) இருக்கட்டும். பாதகமில்லை. அப்படியே வீரேந்திரசோழன் சற்குணவழுதிக்காகப் படையெடுத்து வருவானாயின், நாம் வழுதிமகன் * சிறையிலிருப்பவனைத் தொலைத்துப்போடுவோம். அப்புறம் மேல் நடக்கப்போகிறதைப் பார்த்துக் கொள்வோம். காலமதிகமாயிற்று. இனி நாம் போகவேண்டும்.

---

## பிரகலாத வுபதேசம்.

"ஓ தயித்திய பாலகர்களே! பரமார்த்தமான விஷயத்தை யுபதேசிக்கிறேன் கேளுங்கள். என் வசனங்களை அசத்தியமாக நினைக்கவேண்டாம். ஏனென்றால், நான் பொருள் முதலானவற்றில் ஆசை வைத்தாவது பிரமித்தாவது உபதேசிக்க வந்தேனல்லேன். ஆதலால் நான் சொல்வதை நம்பிக்கேளுங்கள். புருஷன் பிறந்தவுடனே பாலியமும், பின்பு யௌவனமும், அதற்குமேல் தடுக்கக்கூடாத கிழத்தனமும் பெற்று, அப்பால் மிருத்துவின் வசமடைவான். தயித்திய பாலகர்களே! பிராணிகளிடத்திலே இவை

* சுந்தரானந்தன், ரூபாவதியின் காதலன்.

யெல்லா முண்டாவது நமக்கும் உங்களுக்கும் பிரத்தியக்ஷமாகக் காணப்பட்டிருக்கின்றதன்றோ. இம்மட்டேயன்று. மரணமடைந் தவனுக்குத் திரும்பி ஜன்ம முண்டாகிறதும் நிசம். இவ்வர்த்தத் துக்குச் சுருதி ஸ்மிருதி முதலிய சாஸ்திரங்கள் பிரமாணங்களாம். அவைகளை நீங்களும் ஓதியிருக்கிறீர்கள். இந்தத் தேகம் பிறப்ப தற்குப் பூர்வ ஜன்மத்திற் செய்த பாப புண்ணியங்களோடு கூடின ஸ்திரமான ஆத்துமாவை யல்லாமல் வேறுகாரணம் அகப்படாமை யாலே சுக்கில சோணிதங்களுக்கு அதிஷ்டாதாவான ஆத்துமாவே முக்கிய காரணமாம். ஆகையால் புருஷனுக்குக் கர்ப்பவாச முதல் சரீரம் விழுமளவும் சர்வ அவஸ்தையிலுந் துக்கமேயென்று நினை யுங்கள். அன்ன பானுதிகளாலே பசியும் தாகமுந் தீருகிறதும், அந்தந்த வுபாயங்களினுலே சீதவுஷ்ணுதி உபத்திரவங்கள் விலகு கிறதும், சுகமென்று நினைக்கின்றது அவிவேகம். எப்படியென் ருல், அன்ன பானுதிகளைச் சம்பாதிக்கிறதற்காகச் செய்யும் பிர யாசத்தினுலே யுண்டாகிற துக்கங்கள் சொல்லத்தரமா? இந்த அன்னுதிகளே அஜீர்ணமானபோது எத்தனைதுக்க ஹேதுவாகின் றன! இதற்குத் திருட்டாந்தம் பாருங்கள். வாததோஷங்களினுலே மரத்திருக்கிற அங்கங்களுடையவர்களாய், வருத்தத்தினுலே தேக சவுக்கியம் விரும்புகிறவர்களுக்கு உடம்பைக்குத்தி நசுக்குவதும் அடிப்பதும் சுககரமாக இருக்கின்றன! காம மோகாந்தர்களான ஜனங்களுக்கு ஊடலில் காமினீசரணதாடனமும் சுகமாய்க் கா ணும்! இப்படித் துக்க ஏதுக்களில் சுகப்பிராந்தி யுண்டாயிருக்கிற தைக் கண்டீர்களே. இப்படியே மாமிச சிலேஷ்ம மலமூத்தி ராதி மயமான தேகத்தில் சவுந்தரிய சவுகுமார்ய சவுரப்பிய காந்தி முதலான குணங்க ளுண்டென்று நினைப்பதும் பிராந்தியே யல்லா மல் வேறன்று. ரத்த மாம்ச சிலேஷ்ம மலமூத்திர மச்ச ஸ்நாயு அஸ்திகளின் சமூகமா யிருக்கிற தேகத்திலே பிரீதிவைக்கிறவன் நரகத்திலேயும் பிரீதி வைக்கலாம். குளிரினுலே அக்கினியும், தா கத்தினுலே தண்ணீரும், பசியினுலே அன்னமும், சுகமாகத் தோ ன்றுகின்றன. சயித்தியமுந் தாகமுந் பசியுமில்லாதபோது அக்கி னியும் உதகமும் அன்னமும் துக்க ஹேதுக்களா யிருக்கும். ஓ பிள் ளைகளே! புருஷன் எவ்வளவாய்த் தனதானிய ரத்தினுதிகளைப் பரிக் கிரகிக்கிருனே அவ்வளவுந் துக்கமென்று நினைக்கவேண்டும். மனி

தன் மனதுக்குப் பிரியங்களான புத்திர மித்திர களத்திராதி சம்பந்தங்க ளெத்தனை சம்பாதிக்கின்றானோ அத்தனையும் அவனுடைய இருதயத்திலே தைத்த ஆணிகள்போ லிருக்கும்! புருஷன் எத்தனை தூரத்திலே யிருந்தாலும் அவனுடைய இருதயத்திலே யிருக்கிற தன தானிய ரத்தினாதிகள் நாசமும் அக்கினி பாதையும் சோர பயமு மில்லாமல் ஸ்திரமாய்ப் பாதித்துக்கொண்டே யிருக்கின்றன! கிருகத்தில் சோராதிபய மில்லாம லிருந்தாலும், இருதயத்தில் பொருளினிடத்துப் பிரேமையினாலே அவையுண்டாய்க்கொண்டே யிருக்கின்றன! மேலும் ஜன்மிக்கிறபோது அனுபவிக்கிற துக்கத்தைப் போலே மரணத்திலேயும் துக்கம் உண்டாகின்றது. பின்பு யம வாதனையிலேயும் மறுபடி கர்ப்பப் பிரவேசத்திலேயும் மகாதுக்கமே யுண்டாம். கர்ப்பவாசத்திலே லேசமாத்திரமாகிலும் சுகமுண்டா யிருக்குமென்று தோன்றினால் சொல்லுங்கள். ஆனதுபற்றி எங்கும் சுகமில்லை. ஆகையாலே ஜகமெல்லாம் துக்கமயமாக இருக்கின்றன. இப்படிச் சகல துக்கங்களுக்கு மிருப்பிடமான சம்சார சாகரத்தை ஸ்ரீமந்நாராயண னொருவனே கடக்கப் பண்ணுகின்றவன். உங்களுக்குச் சத்தியமே சொன்னேன். நாம் பாலியரானதினாலே விரத்திமார்க்கத்துக்கு அதிகாரிகளல்லே மென்று நினைக்கவேண்டாம். பாலிய யவ்வன ஜராமரணாதி அவஸ்தைகள் தேகத்துக்கே யல்லாமல் ஆத்துமாவுக்கில்லை. சரீரத்திலே ஆத்துமா ஜனன மரணாதி ரகிதனாய் சாசுவதனா யிருக்கின்றான். உலகத்தில் புருஷன், பாலியஞ் சென்றபிறகு யவ்வனத்திலே ஆத்துமாவுக்கு இதஞ்செய்துகொள்ளுகின்றே னென்றும், யவ்வனத்தை யடைந்திருக்கிற போது வார்த்திகத்திலே சிரேயசான ஞானத்தைப் பெற்றுக்கொள்வே னென்றும், நினைப்பான். அப்பால் வயது முதிர்ந்து மூப்புவந்து இந்திரியங்கள் பலஹீனப் பட்டுப்போன வளவில் இனிமேலென்ன செய்வேன், திடகாத்திரனாக இருந்தபோதே ஆத்தும இதஞ் செய்து கொள்ளாமல் மூடனாய்ப் போனேனே யென்று சோகிப்பான். இப்படியே யல்லாமல் துராசார மோகிதனாகி ஒருநாளும் சிரேயசான மார்க்கத்துக்கு அபிமுக னாகமாட்டான். எப்படி யென்றால் நானாவித கிரீடா விசேஷங்களினாலே பாலியமும், சந்தன குசும வனிதாதிபோகபரவசத்தினாலே யவ்வனமும், அசத்தியினாலே வார்த்திகமும், போக்கிக்கொண்டு அஞ்ஞானிகள் தங்களாயுசை வியர்த்த

மாக்குகின்றார்கள். ஆனதனாலே கங்காப் பிரவாகத்தி லிருந்தபோதி லும், வண்ணான், தாகமெடுத்தபோது தண்ணீரைக் குடியாமல் இந்த வஸ்திரந் தோய்த்தாகட்டும், இந்தவஸ்திரந் தோய்த்தாகட்டுமென்று காலம் போக்குவது போலவும், செம்படவன் இந்த மீன் பிடித்தா கட்டும், இந்தமீன் பிடித்தாகட்டும் என்று பொழுது போக்குவது போலவும், பிற்காலத்தை நினைத்துப் பருவத்தை வீண்போக்க லாகாது. பாலிய யவ்வன ஜராமரணாதி யவஸ்தைகள் சரீரத்துக்கே யல்லது ஆத்துமாவுக்கில்லை யென்று நினைத்து, விவேக முடைய வர்களாய் நீங்கள் ஆத்துமா உச்சீவிக்கும்படியான எத்தனஞ் செய் யுங்கள். இந்தப்படி விரத்திமார்க்கத்தை விசதமாக உங்களுக்கு உபதேசித்தேன். இது அசத்தியமென்று நினையாதேயுங்கள். சர் வப் பிரகாரத்திலேயும் சம்சார பந்த மோசனை ஸ்ரீமந்நாராயணனை நினையுங்கள். அவ் வெம்பெருமானை ஸ்மரிக்கிறதற்குப் பிரயோசன மென்ன? ஸ்மரித்தமாத்திரத்திலே சகல பாபங்களும் நாசமாய், சகல சுபங்களு முண்டாம். ஆதலால் எப்போதும் அவனை ஸ்மரித்து மகாத்துமாக்கள் உச்சீவிப்பார்கள். சர்வ பூதாந்தர்யாமியான நாரா யணனிடத்திலே மித்திரபாவமான புத்தி உங்களுக்கு உண்டாகக் கடவது. அவனுக்கு லீலா சாதனங்களான சேதனங்களிடத்தில் சிநேகஞ்செய்யுங்கள். அதனாலே மோகாதி சகல கிலேசங்களும் விலகும். ஆத்தியாத்துமிகாதி தாபத்திரயத்தினாலே ஜகமெல்லாம் துன்பப்பட்டிருக்கையாலே, மிகவும் இரங்கவேண்டிய பிராணிக ளிடத்திலே தெரிந்தவனாயிருந்தால், எவன் துவேஷத்தை வைப் பான். ஒருவேளை சகல பிராணிகளும் செல்வம் கல்வி பலம் முத லானவைகளாலே தன்னைக்காட்டிலும் அதிகமாயிருக்கிறதாகவும், தானொருவனே அப்படியல்லாமல் சத்தியீனனா யிருக்கிறதாகவும் நினைத்தானானால், அப்போதும் துவேஷஞ் செய்யாமல் சந்தோஷப் படவேண்டும். துவேஷஞ் செய்தால் கிடைப்பது ஹானியே. ஆன தனாலே பிராணிக ளிடத்தில் மாச்சரியஞ் செய்யலாகாது. சிலர் வீண் மாச்சரியத்தினாலே தன்னிடத்தில் துவேஷத்தைச் செய்தால் விவேகியானவன், ஐயோ! இவர்கள் அஞ்ஞானக்கடலில் அமிழ்ந் திருக்கிறார்களே, என்றைக்குக் கடைத்தேறுவார்கள் என்று இரங்க வேண்டும். சிறுவர்களே! இவ்விதமாக மயித்திரி, கருணை, முதிதை, உபேக்ஷை என்கிற மனத்தெளிவின் காரணங்களை மத்திமாதிகாரி

களுடைய மதத்தை யனுசரித்து உங்களுக்குச் சொன்னேன். மத்திமாதிகாரிகள் யாரென்றால் லோகத்தைப் பகவானுடைய சொரூபமாக நினையாமல் வேறாகநினைக்கிற சாங்கியர். உத்தமாதிகாரிகளுக்கு ஆனகாரியத்தைச் சுருக்கமாகச் சொல்லுகின்றேன் கேளுங்கள்.

சகல பிரபஞ்சமும் சர்வாத்துமாவான ஸ்ரீமந்நாராயணனுடைய சொரூபமென்று நினைத்து, ஞான முள்ளவர்கள் சகல பூதங்களையும் தன்னைப்போலே அபேதமாக நினைக்கவேண்டும். ஆனதனாலே நானும் நீங்களும் அசுர சுபாவத்தை விட்டு மகா ஆனந்தத்தைப் பெறும் பொருட்டு எத்தனஞ் செய்வோம். சூரியன், சந்திரன், அக்கினி, வாயு, இந்திரன், வருணன், மேகம் முதலானவர்களாலே ஒருபேறுமில்லை. ஆகில் என்ன செய்யவேண்டுவ தென்றால் தேவ அசுர யக்ஷ ராக்ஷச கின்னர பன்னகாதிகளாலேயும், மனுஷ்ய பசு பக்ஷி மிருகங்களாலேயும், அதிசார ஜ்வர குல்மாதி மகா ரோகங்களாலேயும், ராக துவேஷ லோப மோக மத மாச்சரியங்களாலேயும் எது நாசஞ்செய்யப்படாததோ, அப்படிப்பட்ட பரமாநந்தத்தைப்பெற ஸ்ரீ கேசவனுடைய திருவடிகளிலே இருதயத்தை நிறுத்தவேண்டும். அதனாற் சுகமாயடையலாம். ஆதலால், அசாரமான சம்சார மார்க்கத்திலே யுண்டாகிற தேவ மனுஷ்யாதி சரீரங்களுக்கு உரிய சொர்க்காதி போகங்களுக்கு ஆசைப்பட வேண்டாம். உங்களுக்கு நான் வலுவிலே வந்து நன்மை சொல்லுகின்றேன். சர்வ பூதங்க ளிடத்திலேயும் சமத்துவ புத்தியைப் பண்ணுங்கள். சர்வ பூத சமத்துவந்தான் அச்சுதனுக்கு ஆராதனமாகும். சர்வேசுவரனை அந்த எம்பெருமான் பிரசன்னனானால் துர்லபமான அர்த்தமென்ன இருக்கின்றது? ஆனாலும், தர்மார்த்த காமங்களைப் பிரார்த்திப்பது நல்லதன்று. அவை அற்பங்கள். அவைகளினாலே பிரயோசனமென்ன? மோட்சத்தையும் விரும்பவேண்டாம். ஏனெனில் நன்றாய்ப் பழுத்த மாமரத்தினடியைச் சேர்ந்தவனுக்குத் தற்செயலாய்ப் பழம் கிடைக்குமாறுபோலப் பரப்பிரமமான அனந்தனென்கிற மகா கல்ப விருக்ஷத்தை ஆசிரயித்தவனுக்கு மோக்ஷானந்த மென்கிற பலம் தன்கடையே கிடைக்கும். சந்தேக மில்லை'' என்று பிரகலாதாழ்வான் அருளிச்செய்தனர்.

[இரணியகசிபு தன் புத்திரனாகிய பிரகலாதனையழைத்து உன் பிரபாவம் அதியற்புதமாயிருக்கின்றதே! இதற்குக் காரணமென்ன? என்று வினவ, பிரகலாதன் தந்தை பாதங்களிலே தண்டமிட்டுச் சொல்லுகின்றார்.]

“ஐயா! எனக்கு இந்தப் பிரபாவம் மந்திர தந்திராதிகளாலே உண்டானதுமன்று. சுபாவமானது மன்று. எவனெவன் இருதயத்திலே ஸ்ரீ மகாவிஷ்ணு ஸ்திரமாகப் பிரகாசிப்பனோ, அவனுக்கெல்லா மிப்படிப்பட்ட பிரபாவமுண்டு. யாவனொருவன் தனக்குக் கேட்டை நினையாததுபோலே பிறருக்குங் கேட்டை நினையாமலிருப்பானோ அப்படிப்பட்டவனுக்குப் பாபத்தின் காரணமாகிய துரோக மில்லாமையாலே காரியமாகிய பாபம் உண்டாவதில்லை. எவன் மனோ வாக்குக் காயங்களினாலே பூதத்துரோகம் (அதாவது பிறருக்குத் துன்பஞ்) செய்கிறானோ அவனுக்கு அந்தத் துரோக சிந்தையாகிற விதையினின்றும் விசேஷமான துன்ப முண்டாகின்றது. ஆனதனாலே நான் ஸ்ரீகேசவன் சர்வ பூதங்களிலும் வியாபித்திருக்கின்றானென்று தன்னிலே நினைத்து, மனோவாக்குக் காயங்களினாலே யாருக்கும் துரோகஞ் செய்யாம லிருக்கின்றேன். இவ்வண்ணம் நல்ல சிந்தை யுள்ளவனான எனக்கு ஆத்தியாத்துமிகம் ஆதிதெய்விகம் ஆதிபவுதிகம் என்கிற மூன்றுவிதத் துக்கமும் ஏனுண்டாகும்? ஆனபடியினாலே விவேக முள்ளவர்கள் ஸ்ரீ ஹரியே சர்வாத்துமகனாயிருக்கின்றானென்று நினைத்துச் சகலபூதங்க ளிடத்திலேயும் சர்வதேச சர்வகாலங்களிலேயும் இடைவிடாமல் அன்பு செய்யவேண்டும்.

என் பிதாவே! ஆசாரியர் சகல நீதிசாஸ்திரங்களு முபதேசித்தார். நானும் படித்தேன். ஆனாலு மிவையெல்லாம் அசாரமென்று எனக்குத் தோன்றுகிறது. மித்திராதிகளை வசப்படுத்துவதற்குச் சாம தான பேத தண்டங்கள் என்கிற நான்கு உபாயங்களைச் செய்யும்படி நீதிசாஸ்திரத்திலே சொல்லியிருக்கின்றது. ஐயா! கோபியாதேயும். ஜகத்திலே சத்துரு மித்திரன் என்பவர்களை நான் காணவில்லை யானதனாலே சாமதானாதி யுபாயங்கள் வீணாகின்றன. சாத்தியமில்லாதபோது சாதனத்திலே பிரயோசனமென்ன? சகல பூதங்களையுஞ் சரீரமாகக்கொண்டு ஜகத் ஸ்வரூபியாய் ஜகந்நாதனாய்ப் பரமாத்துமாவா யிருக்கிற ஸ்ரீகோவிந்தன் எழுந்

தருளியிருக்கையில் சத்துரு மித்திரன் என்கிற பேச்சுக்கு அவகாச மேது? அந்த விவரத்தைக்கேளும். ஸ்ரீ விஷ்ணுபகவான் உம்மிடத்தி லேயும் என்னிடத்திலேயும் மற்றுமுள்ள சகல ஜகத்திலேயும் பரி பூர்ணமா யெழுந்தருளியிருக்கச் சத்துரு மித்திரன் என்கிறபேதம் எப்படியுண்டாகும்? ஆனதனுலே இச லோக போக சாதனங்க ளாய் வீணன சொற்கள் விரிந்து அவித்தைக்கு உட்பட்டிருக்கின்ற தண்ட நீதிசாஸ்திரங்களினுலே யென்னபயன்? ஐயனே! பந்தம் நீக்கும்படியான பிரம வித்தியாப்பியாசத்துக்கே எத்தனஞ் செய்ய வேண்டும். பாலகன் மின்மினிப் பூச்சியைப்பார்த்து அக்கினியெ ன்று பிரமித்தாற்போலே சிலர் அஞ்ஞானத்தினுலே அவித்தையை வித்தையென்று நினைக்கின்றுர்கள். எது சம்சார பந்தத்திற்குக் காரணமாகாதோ அப்படிப்பட்ட கருமமே கருமமாம். எதுமோக்ஷத் திற்குக் காரணமாகுமோ அப்படிப்பட்ட வித்தையே வித்தையாம். மற்றைக் கருமமெல்லாம் வீணன ஆயாசத்தை யுண்டாக்குமே யல் லது வேருகா. மற்ற வித்தைகளும் சிற்ப சாமர்த்தியமாய் நிற்குமே யல்லாமல் உபயோக மாகமாட்டா. ஆனதனுலே நீதி சாஸ்திரத்தினுல் வரும் ராச்சியாதி பலங்கள் துச்சமென்று நினை த்து உத்தமமான வொரு பொருளைச் சொல்லுகின்றேன், சாவ தானமாகக் கேளும். உமக்குத் தண்டமிடுகின்றேன். பூமியிலே ராச்சியாபேக்ஷை யில்லாதவனும் தனுபேக்ஷை யில்லாதவனும் உண் டோ? ஆனுலும் பூர்வ புண்ணிய வசத்தினுலே கிடைக்கத்தக்கதே கிடைக்கு மல்லாமல் நினைத்தது கிடையாது. மகா பாக்கியவா னன என்பிதாவே! ஜகத்திலே யாவரும் தமக்கு ஐசுவரிய முண் டாகவேண்டுமென்று முயற்சி செய்கிறுர்கள், ஆனுலும் அது ஜன் மாந்தர பாக்கியவசத்தினுலே யல்லாமல் முயற்சியா லுண்டாக மாட்டாது. விவேக மில்லாதவர்களுக்கும் முயற்சி செய்யாதவர் களுக்கும், நீதிசாஸ்திரமறியாதபேருக்கும், அதிர்ஷ்டவசத்தினுலே ராச்சியாதிகள் உண்டாகின்றன. ஆனதனுலே ஐசுவரியத்தை விரும் புகிறவர்களும் புண்ணியமேசெய்ய முயற்சிப் படவேண்டும். மோக்ஷ சுகத்தையும் விரும்புவானுகில் எல்லாவற்றையும் சமமாக நினைக்கும் படியான ஞானத்தைக் குறித்து எத்தனஞ் செய்யவேண்டும். தேவ மனுஷிய பசுபக்ஷி விருட்சாதி ரூபமான பிரபஞ்சமெல்லாம் ஸ்ரீ அநந் தனுடைய ஸ்வரூபமாயிருக்கின்றன. ஆனல் அஞ்ஞானிகளுக்கு

வேறுபோலே காணப்படுகின்றன. ஸ்ரீ விஷ்ணுபகவான் விசுவரூப தரனுனதனுலே தாவர சங்க மாத்மகமான பிரபஞ்சத்துக்கெல்லாம் அந்தர்யாமியா யிருக்கின்ருனென்று நினைத்து, விவேகியானவன் சமஸ்த பூதங்களையும் ஆத்ம சமானமாகப் பாவித்திருக்கவேண்டும். இந்த ஞான மெவனுக் குண்டாயிருக்குமோ அவனிடத்திலே அனுதியாயும் ஷட்கு ணைசுவரிய சம்பன்னனுயு மிருக்கிற அந்தப் புருஷோத்தமன் பிரசன்னனுவான்! அவன் பிரசன்னனுனல் சமஸ்த கிலேசங்களும் விலகிப்போம்.''

---

## சாவித்திரி சரிதை.

சீருஞ் சிறப்பும் பொருந்திய இப்பரதகண்டத்திலே மத்திரதேயத்தை யரசாண்டுவந்த வேந்தனெருவனிருந்தான். அவன்பெயர் **அச்சுவப்பதி.** இவன் நற்குண நற்செய்கைகளமைந்து மகா அழகு வாய்த்தவளாகிய **மாளவி**யென்னுந் தையலைக் கடிமணம் புரிந்தனன். அவளுடன் காதல்மீதூர இல்லறம் சிறிதும் வழுவாது நடத்துதலினும், பலவகை யின்பத்துன்பங்களை யனுபவிப்பதினும் பலநாட்கள் கழிந்தேறின. இவர்களுக்குச் சகல சம்பத்துக்களும் குறைவில்லாதிருந்தும், தமது மனத்தை யிடைவிடாதீர்ந்துகொண்டிருக்கும் பெருங்குறை யொன்றையே யுடையராயிருந்தார்கள். அதை நினைந்து நினைந்து தினந்தினமும் வருந்தி மனநைவார்கள். அக்குறை யெது வென்ருற் புத்திரப்பேறில்லாப் பெருங்குறையேயாம். இக்குறையால் இன்பங்களெல்லாவற்றையும் வெறுத்துத் துன்பமேலிட்டவராய்த் தேகமிளைத்து முகம்விளர்த்து வாடியிருப்பார்கள். மனக்குறையொன்ருலேயே பலவகைத் துன்பங்களு முடன் தொடர்வது முலகியல்பன்ரே? **ஊணு**றக்கத்தையு மிக்கவலையினுலேயே பெரிதுந் துறப்பார்கள். மனச்சந்தோஷத்தை யெழுப்பும் சங்கீத நடனங்களையும் வெறுப்பார்கள். இக்கவலைதீரும் நாளென்று வருமோ வருமோவென்று சிந்தித்திருப்பார்கள், எங்குறையைத் தீர்க்கவல்லா ரியாவரென்று 'வான்பார்க்கும் பைங்கூழ்போல்' ஏங்கித்திகைப்பார்கள்: இப்படிப் பலநாட்களைக்கழித்து வருங்காலத்தொருநாள்

வாடும்பயிர்க்கு மழைபோலே மகதியாழைக் கையிலேந்திய நாரத விருடி அரசனதில்ல நோக்கி வருவாராயினர். அவரைக் கண்டவள வில் அவ்வரசன் ஆனந்தப்பெருக்கால் தன்னைமறந்தவனாய் மெய்ம் மயிர் பொடிப்ப எதிர்கொண்டழைத்துவந்து ஆசனத்திருத்தி அர்க் கிய முதலிய சோடசோபசாரங்களையுந் தவறுதியற்றி நாக்குழறத் தழதழத்த வார்த்தைகளாற் பின்வருமாறு மொழிவானாயினன். "எளியேம்மீது கருணைகூர்ந்து இச்சிறுகுடிலை நோக்கிப் பாதபங்க யம் வருந்த வரும்படியான பெருந்தவம் என் மூதாதையர்கள் என்ன செய்தார்களோ? தேவர்க்கு மரியவராகிய நீர் எழுந்தருளப்பெற் றது ஒப்பற்ற பெரும்பாக்கியப்பயனேயாம்! யாங்கள் கிருதார்த்த ராயினேம்! கிருதார்த்தராயினேம்! என்றிவ்வாறு துதித்து அவரது தாமரைத்திருவடிகளைக் கண்ணினுஞ் சென்னியினும் ஒற்றிக்கொண் டவராய் வணங்கிநிற்கும் அரசனையும், ஆசனத்திற்கருகே கொடி போலொல்கிப் பனியால் வாடிய தாமரைமலர்போன்ற வதனத்தைக் கொண்டு நிற்கும் அவனதில்லக்கிழத்தியையுங் கண்ணுற்ற நாரத மகாமுனிவர் நுமது மனத்தை வருத்துங்குறையைக் கூறுகவெ ன்று திருவாய்மலர்ந்தருளினர். "எங்கட்கொரு குறையுமில்லை. புத்திரப்பேறின்மையென்னும் பெருங்குறை யொன்றே யெங்கள்மன த்தை அலக்கழிப்பது! எங்கட்கு அருந்தும் உணவும் உணவாகிலது! கீதமினியயாழும் காதுக்கினித்திலது! உலகமுழுவதும் பிள்ளையி லாப்பெருமாக்கள் என்று கூறும் இழிபெயரையு மடைகின்றோம்! புத்தென்னும் பெருநரகிற் புகுந்தன்மைய ராயினேம்! இதுவுமன்றி எமக்குப்பின் எங்கள் குலம் உலகம் புரக்குந்தன்மையு மற்றோம்! எமது சந்ததி எம்மோடிற்றது! இவ்வளவிற்குங் காரணம் ஒரு புத்திரனுவதின்மையே! இக்குறை தீருமாயின் எங்களைப்போ லும் புண்ணியசாலிகள் மூவுலகிலுமிலர் என்பது திண்ணம்" என்று அரசன்கூற, "மலடி மலடியென் றியாருமழைக்கும் பெற்றியனேனே" னென்று மாளவியுந் துக்கித்துக் கூறினள். இதைக்கேட்ட முனி வரர்பிரானும் அவர்கள் கோரிக்கை யீடேறும்வண்ணம் ஒருரை பகர லாயினர். நீங்கள் சாவித்திரி தெய்வத்தை அல்லும்பகலு மிடை விடாது சிந்தித்து நோன்பு நோற்பீரேல் அத்தெய்வவருளால் என் றும் நும்பெயரை யுலகத்திலே நாட்டும் ஒரருமை மகவுதிக்குமெ ன்று கூறிப்போந்தனர். இம்மொழியைக்கேட்ட தம்பதிகள் ஆகம்



3391

பூரித்து அடங்காமகிழ்ச்சியுடையராய்த் தம்மீது அன்புமிக்கு வரம் பாலித்த வள்ளலை வாயாரப் பலகாலுந் துதிப்பாராயினர். முனிவர் கூறிய மொழிப்படி ஒருகணமேனும் தவறாது சாவித்திரியாரை வணங்கித் துதித்து நோன்புநோற்றனர். சின்னாட்செலச் சாவித்திரிதெய்வம் இவர்கள் நோன்பிற் குவந்து வேண்டுகோட்கிரங்கி தெரிசனந்தந்து "வேண்டுவனகேஏ" ளென மனஞ்சந்தோஷித்துப் பாதங்களில் வீழ்ந்து பாடித்துதித்து, "பிள்ளைச்செல்வத்தைத்தந்து எங்கள் மனோவியாகூலத்தை மாற்றியருள்க" வென்று வேண்டிக்கோடலும் "நீங்கள் செவிக்கின்பத்தைச்செய்கின்ற மழலைபகரு மைந்தனை விரும்பினீர்கள். நாம் நும் மனோரத மீடேறும்வண்ணம் அன்னமென்னடைக் கன்னியை யளித்தோம். நீங்கள் பல்வகை நன்மைகளையும் பெறுவீர்க" ளென்று கூறியருளியது. "அரசுகாத்தளிக்கும் அருமைப்புதல்வனை வேண்டின வெமக்குக் கருமைக் கூந்தற்கன்னியைக் கொடுத்தலினா லெந்துயர் நீங்குமோ" வென்று வேந்தன் ஏங்கிக்கேட்ப, சாவித்திரியார் "நீர் பயக்கும் இலக்குமியன்ன மாதுசிரோமணியாற் பல்வகைப் பெருஞ்செல்வங்களையும் பெற்றுய்வீ" ரென்று கூறியருளினர். வரங்கைக்கொண்ட மன்னன், மாளவி கருப்பமுறலும் மனமிக மகிழ்ந்தனன். நாள் செலச்செல, அம்மெல்லியல் கொடியிடை பெருக்கவும், முலைமுகங்கருகவும் தேகமெலாம் பசுமைநிறம் பரவவும் பதம்பெரியதாகவும் பத்துமாத நெருங்க, ஓரிள வல்லிப்பூங் கொடியை யீன்றனள். ஈன்ற வக்காலையிற் றேவர்களார்த்துப் பூமாரிபொழிந்தனர். மன்னவனும் விழாக்கொண்டாடிப் பன்னிரண்டாண்டு இறைவேண்டிலேனெனக் குடிகட்குப்பறையறைவித்து, வேதியர்க்கு மிரவலர்க்கும் அன்னதானம் சொன்னதானம் பூதானங் கோதானமுதலிய வெறுக்கக்கொடுத் துவகைபூத்தனன். பின்பு சாவித்திரி தெய்வவருளாற் பிறந்த தன்றநயைக்குச் **சாவித்திரி**யென்றே நாமமிட்டுச் சிறந்தனன். மாளவி தவமிருந்துபெற்ற தன்னருமைக் கண்மணிக்குப் பரிமளமஞ்சள்பூசி, நீராட்டிக் கண்துடைத்து, திலப்பொட்டுந் திருநீற்றுக்காப்புமிட்டு, ஆபரணமணிந்து, திருஷ்டிகழித்து, முலைப்பாலூட்டித் தொட்டிலிற் படுக்கவைத்து, எங்கள் அருமைக்கண்மணியே! அஞ்சுகமே! மகவில்லையென்ற மனோதுக்கம் மாற்றவந்த சிந்தாமணியே! என்று தாலாட்டித் தினந்தினமுஞ் சீராட்டுவாள். தந்தைதாயிருவரும் தம்மருமைப்புதல்வி

யைக் கண்ணிமைபோற் காத்துவர, விரலைச்சுவைத்தும், தாளுதைத்தும், வாய்குவித்தழுதும், மீள நகைத்து மிருக்கும். பின்னர்ப் பெற்றோர் மனம்பூரிக்கும்படி, வாய்திறந்து கரும்பு கசக்குமழலை பகர்ந்தும், மேல்விழுந் தின்பஞ்செய்தும், உண்ணத்தகுந்த அறுசுவையுண்டியைத் தனது சிறிய அழகிய கைகளாற் குழப்பியும், இரவிற் சந்திரனைத் தன் மெல்விரலாற் சுட்டி "அம்புலி வாவா" வென்று விளித்தும் பொழுதுபோக்கும்.

இந்தவிதமாக இக்குழந்தை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வயசு ஏழாகப் பேதைப்பருவத்தை யடைந்தாள். அப்பொழுது முல்லை முகைபோலு மினியபற்கள் ஆம்பல் வாயினிடத்து விளக்கமுறும்படி வீற்றிருந்தனள். பிறகு தனது காதிற் சிற்றோலையணியத்தகும் பெதும்பைப்பருவமடைந்ததும், அவளது நடையைக்கண்டு அன்னங்கள் பின்றொடர்ந்தனவன்றிக் கண்ணுமுகமுங் கவினெய்தின. மேன்மேலழகு முதிரவும், முலைமுகங்களெட்டிப்பார்க்கவுந், தானும் மங்கைப் பருவத்தை யெட்டிப்பிடித்தனள். அக்காலையி லரும்பிய முல்லைக்கொடி யிருகோங்க முகைகளைச் சுமந்து நின்றதாகப்பொலிந்து விளங்கினள். இங்ஙனம் பார்த்தார் கண்ணைப்பறிக்கும் பேரழகுகொண்டு விளங்கியகல்விப்பெருஞ் செல்வியும் தனது தோழியரோடுகூட நந்தனவனத்திற்சென்று, பூக்கொய்தும், மென்பந்தாடியும், கழல்விளையாடியும் காலங்கழித்து வருவாள். இவ்வாறொழுகு நாள்களு ளொருநாள் தோழியரெல்லாம் பிரிந்துசெல்லத் தானும் உயிர்ப்பாங்கியும் ஓரிடத்தில் வதிவாராயினர். அப்பொழுது ஊழ்வலியின் திறத்தால் இக்கற்பிற்கரசியின் கண்முன்னர் அழகு அன்பு இன்பமிகுந்த காளையொருவன் குதிரையேறிச் சென்றனன். அவனைக் கண்ணுற்ற விக்கட்டழகியின் பளிங்கும்பழித்த நெஞ்சம் காதலின் வயத்ததாகியது. அக்கணமே அந்நம்பியைத் தன் கணவனென வரித்தனளாய்த் தன்மனம் அவனைப் பின்பற்றிச்செல்லத் தான் அரண்மனையே சென்று சேர்ந்தனள். சேர்ந்த வந்நங்கை அவனை யிடையறாது சிந்தித்தலிலேயே தனது காலத்தைச் செலவழிப்பாள்.

ஈதிங்ஙனமாக, அரசர் கோமகனும் தனது மங்கைக்குப் பருவ நேர்ந்தமை நோக்கித் தன் மனைவியோடும் யோசிப்பான்: "பெண்

னே! நமது அருந்தவப் புதல்வியும் யுவதித் தன்மையை யடைந்தனள். பெண்ணுக்குத்தகுந்த குணனு நலனும் பொருந்திய மணாளனைத் தேடியன்றே மணம்புரிதல் தகுதி. இனியும் நாம் வதுவை நடத்தத் தாமதிக்கின் நரகிற்புகுவோமெனச் சாத்திரங்கூறுகின்றது. அன்றியும் தகுந்த மருகனாலேயே நாம் மோட்சமடையவேண்டுமே! நாடாளு மரசரில் நங்கைக்குத் தகுந்த நாயகன் ஒருவனுமாகான். இது தருமசங்கடம் யாம் என் செய்வோம் என் செய்வோ" மெனப் பெற்றதாயும் "சிறிது நாளாக நங்குழந்தை வேறுபாடடைந்திருக்கிறு" ளெனத் தெரிவித்தனள். தம்மங்கைக்குத் தகுந்த வரனெங்குளனோ வென்று மனமழுங்கி யிருக்கையில் நாரதமகாமுனிவரெழுந்தருள, அரசன் அவருக்குபசார மியாவுமியற்றிப் பைம்பொற்றவிசில் வீற்றிருக்கச்செய்து, பணிந்து போற்றி வீற்றிருந்தான். மன்னன் மனைவியார் மாளவிதேவியும் மலரடிகளை வந்தித்து "மலடிப்பெயரை மாற்றியருளிய வள்ளலே!" யென்று மனமுருகிமாதவரருகினின்றனள். அப்பொழுது உருக்கிவிட்ட பொன்னனைய கன்னியும் பெற்றோரை முறைமையின் வணங்கித் தவவிருடியை வழிபட்டு நின்றனள். கருணை சமுத்திரமாகிய முனிவர்பிரான் யாவர்க்கும் ஆசிகூறினர்.

அத்தருணம் அரசனுந் தனதுகண்மணியாகிய பெண்மணியைத் தழுவியெடுத்துத் தன்னருகிலிருக்கச்செய்து முனிவரை வணங்கி யிவைகூறுவான்: "சுவாமி! தங்கள் கிருபா வீக்ஷண்யத்தினாலும் எமது தவப்பேற்றாலு முதித்த இப்பாவைக்குத் தகுந்த பத்தாவை யாம் எங்குங் காண்கிலேம். சொல்லொணாத வனப்பும் குணனு நலனு முடைய எங்கொடிக்குத் தகுந்த தருவை யாம் எங்குந்தேடவல்லேம்? நாயகனில்லாத மங்கையின் நலனெல்லாம் வீணல்லவோ! இவளுக்கேற்ற உருவமு மிளமையும் அன்பு மழகுந் திருவுமுடைய வொருவனன்றோ அவள்கணவனாவான். எமது சிற்றறிவிற்கு இவட்கு நாயகன் இவ்வுலகி லிலனென்றே தோன்றுகின்றது. ஆயினும் இவ்விஷயத்தை நோக்குங்காலத்து எம்மனம் மிகுதியுந் துயரடைகின்றதே! ஆதலின் தங்கள் வாக்கியம் வேதவாக்கியத்தினுஞ் சிறப்புடைத்தாதலால் தாம் அருள்சுரந்து திருவாய் மலர்ந்தருளவேண்டும்" என வேண்டிக்கொண்டனன். அரசனது வேண்டுகோளைச் செவிசேர்த்த முனிவர் "ஊழ்வலியின் திறத்தை அறியற்பாலார் யாரிருக்கின்றனர்? நீ என் கிலேசப்பட்டுக்கொண்

டிருக்கின்ருய்? ஈச்சுரவருளால் நினது பேதை புந்தியிற்புகுந்து தங்கி யிருக்கின்ருன் ஒருவன், அவனே யவட்குரிய பரிசுத்தமமைந்த குண சாலியாகிய மணுளன். அவனுக்கு நின்கன்னியைத் தானஞ்செய் வதேசிறப்பு'' என்றனர். அரசன் மிகுந்த வியப்புற்றவனுய்த் தனது மகளைநோக்கிக் "குழந்தாய்! எங்குலக்கொழுந்தே! நினது மனத்தை யுறைவிடமாக்கி யாங்கெழுந்தருளியிருக்கின்ற நினது நாயகனை எமக் குக் கூறவேண்டு'' மெனக்கூறுதலும், அம்மங்கை நாணினளாய்த் தலை குனிய அருகிலிருந்த மாளவிதேவியார், "கண்ணே! பெற்றதந்தை யிடத்திலுந் தாயிடத்திலுங் கூறுவதில் என்ன கெடுதியிருக்கிற'' தென்றுவற்புறுத்திக்கேட்க மிகமெல்லிய குரலால் "சாலுவதேய மன் னன் சற்புத்திரன்'' என்றுரைத்து முகம் வியர்த்து வாடிநின்றனள்.

தன் மகளது வார்த்தையமுதத்தைச் செவியாரப்பருகிய அச்சு வப்பதி மகாராஜனும் முக்காலமுமுணர்ந்த முனிவர்பிரானை நோக் கிச் "சாலுவதேயமன்னன் சற்புத்திரனது குணுகுணங்களைத் தெரி விக்கவேண்டு'' மென நாரதர் "அரசனே! அப்பிள்ளை திரிகரணசுத்தி யுடைய சத்தியவான். நற்குண நற்செய்கைகள் யாவும் ஒருங்கே தங்கப்பெற்றவன். வேளைவென்ற பேரழகுடையவன். தவத்திற்சிற ந்த தயாநிதி. தந்தைதாய்ப்பேணுந் தகைமையுடையவன். தெய்வந் துதிக்குஞ் செவ்விய நடையுடையவன்'' என்றுரைத்துப் பின்னும் அரசன் முகமலர்ச்சியொடுங்க, "ஓராண்டெல்லையி லுயிர்துறப்பான் போலு'' மென்றனர். அரசன் துயர்க்கடலுள் மூழ்கினவனுய், தனது தோகையின் முகத்தைப்பார்த்துக் "கண்மணியே! அருந்தவமுனி வர் கூறிய வருமொழிகளைக்கேட்டாய். யாவுந்தெரிந்துகொண்டனை. இன்னமும் நீ யறியவேண்டுவ சிலவுள. அவை எவையெனில் சா லுவதேசத்தரசனுக்கு நேத்திரமில்லை. நாடு நகரமுமிழந்து தீச் சுவாலைவீசும் கொடிய காட்டிடத்தே தன் மனைவி மைந்தனுடன் சென்று வருந்துகின்றனன். இவற்றையெல்லாம் யான் கவனிக்கா மல் நின்னை யச்சத்தியவானுக் களிக்க வெண்ணங்கொண்டபோ தும் அவன் ஓராண்டில் மரிப்பனும்! ஆதலால் நீ அவனை யினியுங் கருதாது வேறு ராஜகுமாரனை வரிப்பாய். நினக்கவனைத் தப்பாது அளிப்பே'' னென்றுரைத்தனன். தகப்பன் மாற்றமுணர்ந்த சாவித் திரியும் கண்ணீர்கலங்க வாயுரையெழாது தியங்கிநின்றனள். மாளவி தேவியாரும் தனது மகளினது கண்ணைத்துடைத்து "அம்மா! நீ

ஏன்வருந்தவேண்டும்? நின் தந்தை நினக்கு நன்மை கூறுவரேயன்றி கெடுதி யாதொன்றுங் கூறுவாரல்லர். தந்தை தாயர்களாகிய நாங்கள் நினது நன்மைக்கே பாடுபடுவோமன்றி வேறுண்டோ? நீ புத்திசாலிப்பெண்ணாகவிருந்தும் இது தெரிந்துகொள்ளவில்லையே! ஏனழுகின்றாய். நீ அழப்புகின் யாம் ஆற்றுவமோ? கண்ணே! ஒருகணவனைவரிப்பது அவனுடன் ஒத்த அன்பினராயிருந்து சுகபோகபாக்கியங்களை யனுபவிப்பதற்கல்லவோ? காடே வீடாகவுடைய ஒருவனுக்கு வாழ்க்கைப்படில் நினது அனிச்சமு நெருஞ்சிலா யஞ்சு செஞ்சீறடி யென்னபாடுபடும்? தோழியர்களெல்லாம் நினக்குக் குற்றேவல் புரியவும் பாதம் வருடவும் அமர்ந்துநின்ற நீ கண்ணிழந்த மாமனுருக்கும் வலியற்ற மாமிக்கும் தொண்டுபுரியவுங் கூடுமோ? 'கைக்குநிறைந்த பொன்னினுங் கண்ணுக்குநிறைந்த கணவனே கணவனுவான்' என்பாயேயாயின் அவன் ஒருவருடகாலத்தில் மரித்துப் போவானே! ஸ்திரீகளுக்குப் புருஷபாக்கியத்தினும் விசேஷமுமொன்றுண்டோ? ஆதலால் நீ வேறு அரசரேற்றுச் சிறுகுருளையை யோசித்துச் சொல்லுவாயாக" வென்று கூறினள். தன் தாய் வாயினின்றும் எழுந்த சொற்களை நாராசங்காய்ச்சி நடுச்செவியில் நுழைத்ததெனவேயெண்ணி, சிறிதும் அவ்வார்த்தைக் குடன்படாளாய் நின்றமையை முகக்குறிப்பானறிந்த ராஜபத்தினியும் "என்னருமைக்குழந்தாய்! உனக்கெத்தனைமுகத்தாற் கூறியும் நீ தெரிந்துகொள்வதில்லை. குழந்தைகளுக்குப் பெற்றோரே பூசிக்கப்படுந் தெய்வமாதலால் அவரது வார்த்தையமுதத்தை யுட்கொள்ளாதுமிழ்ந்துவிடுதலுந் தகுதியோ? இது பெருநரகத்திலுய்க்குமே! அன்றியும்பெண்கள் என்றுஞ் சுதந்தரமுடையர்களல்லரே! கன்னித்தன்மைகழியும்வரையினும் ஈன்றவர்க்குரிய சொத்தாவா ரல்லவோ? அவர்கள் எவ்விதக்கட்டளையிடினும் மறுக்கா தவற்றிற் கிணங்குவது மகளிரியல்பன்றே? அன்றியுங் கன்னிப்பெண்கள் பெற்றோர் தமக்காக்கிவைக்கு நாயகனையே நாயகனெனக் கொண்டவனோடு இல்லறம்வழுவாது நடாத்தவேண்டுமன்றே? பெண்ணே! நாங்கள் நின் எண்ணத்தைத் தெரிந்துகொள்ளாது ஓர் வரனைத் தெரிந்தெடுத்து அவனுக்கு நின்னை மணம்புரியின் அப்பொழுது என்செய்வாய்? யான் பிடித்தமுயலுக்கு மூன்றேகால் என்னும் பிடிவாதத்தைவிட்டு எம்மொழியைக்கேட்டு அவ்வண்ணமே நடக்கின் நினக்குப் பல்வகை

நன்மையும் சித்திக்கும். நீயே யோசித்துப் பார்ப்பாயாக" வென்று மனநொந்து கூறினள்.

உலகத்திலே பெண்ணுவாளிவளென்று நன்குமதிக்கப்படும் சாவித்திரியும் இவ்வார்த்தைக் கோவையைக்கேட்டு மிகவும் வெய்துயிர்த்தனளாய்த் தன் நனவைத்தன் நாயகன்கண் நிறுத்தி யுணர்வின்றியே 'அம்மவோ' என்றலறிப்பின் சிறிது தெளிந்து வாய்திறந்து சிலவார்த்தைகள் குயிலு நாண வின்னமிழ்திற் கன்னற்பாகிற் கூறுவாளாயினள்.

"என்னருமைப் பெற்றேர்களே! யான் ராஜகுல முறைக்குந் தங்கள் கட்டளைகளுக்குஞ் சிறிதேனுமீறி நடந்தேனில்லையே! அரசர்கள் தமது அருந்தவப் புதல்விகளுக்குச் சுயம்வரம் நாட்டுதலுமொன்றுண்டே! அக்காலத்துக் கன்னியர்கள் தமக்குரிய கணவரிவராவாரென்று மாலை சூட்டியவவர்க்கே தாமுகந்த பத்தினியாதல் கடனன்றே? ஊழ்வலியின் திறத்தால் பொற்கொடி யொருத்தியின் பொன்னரிமாலைபெற்ற பெருந்தோட்குரிசில் சத்தியவானே யாயின் அங்குள்ள பெரியோரெல்லாம் அவட்கு வேறொரு நாயகனைத்தேடி யமைத்தலுங் கூடுமோ? 'சூழ்வளியுடன் சுழல் சருகிற்றேன்றிய் ஊழ்வழி மனஞ்செலலுண்மையன்றுகொல்' என்பது போலே அமைப்பதுதானே யமைக்கும். முன்னரே ஒருவன்தாரமாயின வென்னை வேறொருவன் மணக்கவுங்கூடுமோ? சிறுமையும் பெருமையும் சிந்தையின் நிறைவு. என்று மனத்திலே வரித்தேனே அன்றே யவன் என்கணவனுயினன். ஒரு கிருத்தியத்தைச் செய்வதினும் மனத்தால் நினைப்பதே பெரும்பெருமையுடைத்து. சகல விதபூசைகளினும் மானதபூசை சிறக்கவில்லையோ? பிராமணர்கள் மனத்தினுலே யொருவற்கொரு தீங்கை நினைப்பினும் அப்பெரும் பாவத்தைப் போக்கிக்கொள்வதற்குப்பிராயச்சித்த முதலிய புரிகின்ருர்களே! பதிவிரதைகளுக்குத் தமது கணவர்கள் மிகவுங் கொடிய பாதகர்களாக விருப்பினும் வன்னெஞ்சர்களாயினும் தரித்திரர்களாயினும் குரூபிகளாயினும் அவர்களையே தெய்வமெனவெண்ணி யவர்சொற்றவரு நடந்து வருவதே பெருங்கடமையென்று நினைப்பார்கள். இனி அவனையன்றி மும்மூர்த்திகளுட் சிறந்த சிவபிரானே மாலையிடுவதாக வமையினும் யான் சிறிதும் விரும்பேன்.

தபோநிதி யெதிரில் திரிகரண சுத்தியாய் என் நாயகன் இவன் என்று கூறிய வொருவனை நிராகரித்து வேறோராடவனை மணம்புரியக் கருதுவேனாகில் உலகத்திற்கு வசைச்சொல் கற்பித்தவளாவதன்றிப் பதிவிரதைகளென்கின்ற பெயரைப்பறக்கச் செய்தவளே யாவேன். ஆதலின் யான் மனத்தினிடத்து வரித்த குரிசிலாகிய சத்தியவானே என்கணவனன்றி வேறொருவனுமிலன்" என்று கூறினள்.

பெற்றோர்களும் தம் தநயையின் கற்பின் மேம்பாட்டினைக் கருதியவிடத்துச் சிறிது சந்தோஷித்தும், அவள் கூறிய நாயகனது தன்மையை நோக்கியவழி பெரிதும்துக்கித்தும் சிறிதுநேரம் வாயுரையெழாது வாளாவிருந்தனர்.

பின்னர் அச்சுவப்பதி மகாராஜன் "எனதினிமைப் புத்திரியே! யான்கடை முறையாகக் கேட்பதொன்றுண்டு. அதற்கு விடையளிக்கத்தடைபடக் கூடாது. இப்பொழுது இவ்விளம் பிராயத்திற்றானே மனத்தினிடத்து நாயகனாக வரித்திருப்பதாகக்கூறுகின்றாயே, அவன் வேறொரு பெண்ணை மணம்புரிந்திருந்து நின்னை விரும்பாதிருப்பினும் அன்றி நின்னிடங் காதலின்றி 'நின்னை வேண்டாமென வெறுத்தனனாயினும் நீ என்செய்வை? "யான் என்றுங் கன்னிகையாகவிருந்து காலங்கழிப்பே"னென்று கூறுதியேல், அங்ஙனமிருத்தல் உலகியல்போடு முரணுவதன்றிப் பிறந்தகத்தார்க்குப் பெரும்வசைச்சொல்லைப் பிறப்பிக்குமே! நீ சிறுகுழந்தையாதலானும் அதினும் பெண்பிள்ளையாயிருத்தலானும் இவற்றையெல்லாஞ் சிறிதுங் கவனியாது ஓரே பிடிவாதமாக வார்த்தையாடுகின்றனை" யென்று தன்கருத்துக்கிணங்கும்படி பற்பல விதத்தில் நயபயமாக அறிவுகொளுத்துவதாக நினைத்துக் கூறினன்.

இம்மொழிகளைக்கேட்ட மாது சிரோமணி "எனதருமைத் தந்தையே! என்னை எனது பிராணநாயகர் அங்கீகரியாது விடுப்பினும் அவரைத் தியானஞ்செய்தலிலேயே என்காலத்தைக்கழித்துச் சுகித்திருப்பேன்" என்றொருதலையாக விடையளித்து நின்றனள். இதைச் செவிகொண்ட அரையனுந் தியங்கிச்சோர, வருகிருந்த நாரதர் அவனைப் பல நீதிமொழிகளாற் றேற்றி "நின் கோதையை யன்

னவற்கே யளிக்கவென்று திருவருள் பாலித் தவனாற் பூசிக்கப்பெற் றவ்விடம் விட்டகன்று தன்னாச்சிரமஞ்சென்று சேர்ந்தனர்.

சென்ற ருஷிபுங்கவரது கட்டுளையைக் கடைப்பிடித்த தாயுந் தந்தையும், தம்மருமைப்புதல்விக்கு மணம்புரியக் கருதி, சேனாசமுத்திரம் புடைசூழக் காட்டுவழியைக்கடந்து, சத்தியவானும் அவன் தந்தையு மிருக்குமிடம்வர அவ்வரசனு மிவர்களை யெதிர்கொண் டழைத் துபசாரமியாவு மியற்றலும் ஒவ்வொருவரும் தனித்தனி மற்றவரது க்ஷேமலாபங்களை விசாரிப்பாராயினர்.

அப்பொழுது சத்தியவான்தந்தை அச்சுவப்பதி மகாராஜனை நோக்கி நாடு நகரமியாவும் விதிவசத்தால் துறந்து பிணியாற் பீடிக் கப்பட்டு மிகவும் வருத்தமுறுகின்ற இக்காலத் தெம்மைப்பார்க்கும் படி கருணைமிக்கு, சக்கிரேஸ்வரராகிய நீர் காடு மலை வனம் வனாந் திரங்களைக்கடந்து எழுந்தருளியது உமது தண்ணளியின்றன்மையை நனிமிக வுணர்த்திற்றென்று முகமன் கூறிப் போசனஞ்செய்ய எழுந் தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து வேண்டிக்கொண்டனன். சாலுவதேய மன்னன் வேண்டுகோளின்படி அச்சுவப்பதியும் தனக்குப்படைத்த காய் கிழங்கு கனிகளைத் தேவர்கொடுக்குந் தெள்ளமிழ்த மெனவேவுண்டு களிகூர்ந்தனன். பிறகு வார்த்தை யாடிக்கொண்டிருக்கையில் அச்சுவப்பதி தன்மகள் சத்தியவான்மீது காதல்கொண்டது முதலாகிய யாவும் விளங்கக்கூறி யினி தாமதிக்காது மணமுடிப்பதற்கு உத்தரவு கொடுக்கவேண்டுமென சாலுவ மன்னனைத் தூண்டினன். அதற்குச் சாலுவதேயத்தரசன் “நாங்கள் மிகவும் கொடிய தாரித்திர திசையை யடைந்திருக்கு மிக்காலத்தில் உமது பெண்ணைக் கொள்வதென்றால் சிறிதுஞ் சரியான விஷயமாகத் தோன்றவில்லை. மற்றைப்படி யுமது குமாரத்தி எனது குமாரனை வரிப்பதில் யான்கொண்டாடி மகிழ்ச்சியெய்துவதற்கு இடமிக விருப்பினும் யான் ஒருதலையாக விசைவதற் குடன்பாடில்லேன்” என்று தன் எண்ணத்தைத் தெரித்தனன். பிறகு மத்திரதேயத்தரயன் அவனிசையும்படியான பலவித விஷயங்களைக் கூறிநிற்க சாலுவமன்னன் ஒருவாறு ஒத்துக்கொண்டனன். அச்சுவப்பதி நினைத்து வந்தகாரியங் கைகூடிற்றென்று கழிபேருவகைகூர்ந்து கணிகளாராய்ந்து கூறிய சுபதினத்தில் குலுங்கப்பூத்த பூங்கொம்பு ஒல்குவதுபோல ஆபரணாதிகளா விலங்கப்பெற்ற தனது கன்னிகை

சாவித்திரியை, சத்தியமே யுருவெடுத்துவந்த சத்தியவானுக்குக் கன்னிகாதான விதிப்படி வேதவேதோத்தமர்கள் சடங்குகளியாவு மியற்றத் தேவர்கள் பூமாரிபொழிய மனோவாக்குக்காயங்களாற் றத்தஞ்செய்து, சீதனமாக இருவகைப்பொருள்களும் அளவுபடாமற் கொடுத்துக் களிப்புஞ் சிறப்புமடைந்தனன். சிலநாட்கள் சென்றதும் மருமகனையும் சம்பந்திகளையும் தமது நகரம் வந்திருக்கும்படி பலவாறு வேண்டியும் அவர்கள் மறுத்தமைகண்டு மிகவும் வருந்திப் பிறகு ஒருவாறு தேர்ந்து மாளவிதேவியோடு மத்திரதேயஞ்சேர்ந்து குடிகள் தழைக்கச் செங்கோல் செலுத்திவந்தனன்.

தம்பதிகளிருவரும் இரும்பைக் காந்தம் பற்றுந்தன்மையுடையவர்களாய் அன்பு மீக்கூர்ந்து மணியின்கண் ஒளியேபோல மனம் ஒருப்பட்டு உடம்பிரண்டு முயிரொன்றுமாய் வண்டு தாமரைப்பூவதாக நின்று காமச்சுவையின் செவ்வியுணர்ந்து வருவாராயினர்.

அகலிகையை மிதித்து அருந்ததியைத் தனியொழித்த கற்பிற்கரசியாகிய சாவித்திரி தினந்தினமுந் தன் நாயகன் மாமன் மாமியர் கட்டளைக்குச் சிறிதும் வழுவாமல் நடந்தும் அவர்கள் வேண்டுவ குறிப்பினுணர்ந்து செய்தும் தெய்வமஞ்சல் என்னும் விதிப்படி தெய்வவழிபாடுபுரிந்தும் இல்லறமாகிய தேரை யொழுங்கிற் பிறழாது நடாத்திவருவாள்.

"சிறுகாலை யட்டில்புக லருத்தியுறச் சமைத்தல் சுவை
திருத்தி யூட்டன்
மறுகாலை யெண்ணாது விருந்தழைத்தன் மகப்பெறுதன்
மடநா ணச்சம்
பெறுகாலை யின்புறுதன் முன்னுறங்கப் பின்னுறங்கல்
பின்னெ ழாமை
உறுகாலை தொழுதெழுதல் பன்னிரண்டும்"

கற்புடையோர் செய்கையென்று பெரியோர் பணித்த விதியினின்றும் மறந்தும் வழுவாது நடப்பாள். இவளது நற்குண நற்செய்கைகளையும் கற்பின் தன்மையையுங் கண்ட புருடனும் மாமன் மாமியரும் இவளை மனைவியாகவும் மருமகளாகவும் பெற்றது எமது 'பெரும்புண்ணியம் பூர்வபுண்ணிய' மென்று கொண்டாடி, பெரிது மன்புபாராட்டி வந்தார்கள்.

இவ்வாறு நாட்கள்கழிந்தேற ஒருநாள் சாவித்திரியும் நாரதர் கூறிய மொழியை மறக்காது நாளெண்ணிப்பார்க்கத் தன் கணவனுக்கு நிரியாணம் நாலாநாளெனக் கண்டனள். உடனே சாவித்திரி தெய்வ வழிபாடுகளியாவு மொருங்கியற்றி நூல் கூறும்வண்ண நோன்புநோற்று, உண்ணாது, உறங்காது, வார்த்தையாடாது, மூன்றுதினமு மொரேமனதாய்த் தியானஞ்செய்தலிலேயே கழித்துவந்தாள்.

நான்காநாள் உதையத்தில் தன்னுயிர்க்கிழவனையடைந்து அவனைப் பன்முறையும் பாதங்களில் வீழ்ந்து வணங்கி "தாங்கள் இன்று வனத்திற்குப்போக நேர்ந்திராயின் என்னையு முடனழைத்துப் போகக் கிருபை புரியவேண்டு" மென்று பணிந்து கேட்டுக்கொண்டனள். அவ்வுரைகேட்ட அரசிளங்குமரனும் தன் காதலியை யன்புடன்பார்த்துப் "பெண்ணே! மூன்றுதினங்களாக நோற்றற்கரிய நோன்பு நோற்று விரதங் காத்து ஜலமு மருந்தா திருந்தனை. இன்று பாரணமருந்தி தேகசிரம நீங்குவாயாக. யான் இன்று கானிற்சென்று மீண்டு நாளை யுன்னைத் தவமுமலழைத்துச்செல்வேன்"என்று கூறச் சாவித்திரி: "தீபதரிசனங் கண்டன்றி பாரணையருந்த விடமில்லை. ஆதலால் நின்னோடு வனத்திற்சென்று பகற்பொழுதைக் கழிக்க எண்ணங்கொண்டேன். சிறிதும் அயிர்க்கா தின்றருள்செய்தல் கட" னென்று ஆதரம் பெருகுமாறுரைத்து முயற்கறையில்லா முழுமதி முகத்திற் குறுவேர்வரும்ப விளங்கினள். சத்தியவான்: "பெண்ணே! உனக்கு வரவேண்டுமென்று எண்ணமிருப்பதால் நீ வரலா" மென் றுரைபகர சாவித்திரி அவனிடம் விடைபெற்றுத் தன் மாமன் மாமியரிடஞ்சென்று அவர்கள் திருவடித்தாமரைகளில் வீழ்ந்திறைஞ்சி "யான் உமது குமாரரோடு வனஞ்சென்று மீளுமாறு வரங்கொடுக்கவேண்டு" மென்று தாழ்ந்துநிற்க, அவர்களும் "நினக்கு விருப்பமிருப்பின் நீயும் நின்கணவனுஞ் சீக்கிரஞ்சென்று மங்களகரமாக வருவீர்க" ளென வாழ்த்தி விடைகொடுத்தார்கள். பிறகு சாவித்திரி மலர்ந்த இனிய முகத்தினளாய் யானைபின் மயில் நடப்பதென்னத் தன்பதியின் வனம்புகுந்தனள். போகும்வழியின் ஒருபக்கத்தில் சர்ப்பங்களினது சிறந்த ரத்தினங்களும், மூங்கில் யானைத் தந்தம் பன்றிக்கோடு முதலியவைகளின் முத்துக்களும், சந்தனவகிற் குங்குமத்துண்டங்களும் புரட்டிக்கொண் டாரவாரத்துடன்

பாறைகளிற் ருக்கிவரு மருவியையும், ஓரிடத்தில் வானின் மேட விராசியைமுட்டும் வேயினது தலையில் மதிதவழ்வ தொப்ப வட்ட வடிவாயமைந்த இருலுடைந்து தேன்மாரி பொழிவதையும், ஒரு பாகத்தில் மின்னனார் கரம்போலலர்ந்து சிவந்த காந்தண்மலர் காட் டெரிபோன் றிருப்பதையும் மற்றோரிடத்தில் குராமலர் மாலையைக் குழலிலேதரித்த எயிற்றியர் கள்ளுண்டு மகிழ்ந்து குரவையாட்டயர் தலாலுண்டாகும் பேரொலி யிடியோசையினு மிகுந்தெழுவதை யும், ஒருபக்கத்தில் ஆண்யானைகள் பெண்யானைகள் புடைசூழ ஆர வாரித்துச் செல்லுவனவற்றையும், ஒருபால் கொடிச்சியர் தமது கூந்தலுக்கூட்டும் அகிற்புகையானது மேகம்போலெங்கும் பரவ மயில்கள் கார்காலமெனக் களித்துக் கண்கள் நிரம்பிய தோகை களை விரித்து ஆலுதலையும், மற்றொருபால் யானைகளை விழுங்கத் தக்க மலைப்பாம்புகள் வானளாவிய தருக்களிற் றுயின்று கொடிகள் போலிருத்தலையும், வேறொருபால் ஸ்திரீகள் நரம்புதெரித்து யாழ் பயிறலையும், ஒருபால் பன்றிகள் தம் கொம்புகளால் உழுதநிலத்தில் மறச்சிறுர்கள் தினைவித்திடுதலையும், ஓரிடத்தில் காடை கவு தாரி முதலிய பட்சிகள் ஆரவாரித்தலையும், மற்றொருபக்கத்தில் பசுக்களினது முலையினின்று வழிந்தபால் நிரம்பி யருவியாய்ப் பெ ருகுதலையும், ஒருசார் வேங்கை, காட்டெருமை, பன்றி, மான் முத லிய வொய்யென விரைந்தோடா நிற்பதையும், வேறொருசார் அண் டரது புள்ளாங்குழலொலி பொதுளுவதையும், மற்றொருசார் கண் போன் மலர்ந்த காமருசுனை மலரையும், தத்திவரும் அலையையும், ஆழத்தையும் நீரையுமுடைய சுனைகளையுங் கண்டு பேரானந்தமடை ந்தவர்களானார்கள்.

கந்தருவனைப் பழிக்குங் கவினெய்திய மாதராள் அவனை நிழ லெனத் தொடர்ந்துவர ஆங்குள்ள மற்றைப் பற்பல செவ்விகளை யவட்குக்காட்டித் தருப்பைகள் கவர்ந்தும், சமிதைகளொடித்தும், தருக்களிலேறிக் காய்கனிகள் கொய்தும் வாசனைமலர்கள் பறித்தும் அவளிடங் கொடுத்துச் செல்லாநிற்கையில் ஆங்கோர் பெரியவிரு க்ஷம் கண்ணிற்பட அதனருகிற் சென்றங்கீழவிற் றங்கினன். பின் னர் அவ்விடத்தினின்றும் அவன் அடிபெயர்க்க முடியாது தன்மனை வியை விளித்துப் "பெண்ணே! என் கால் கைகளெல்லாம் நடுக்க முறுகின்றன. விழிகள் சுழலுகின்றன" வென்று சோர்ந்துவீழச்

சாவித்திரியும் தனது கொய்சகத்தை விரித் ததிலவ னுடலைக் கிடத்தித் தன்மடிமீது அவன்சிரத்தை யிருக்கச்செய்து மெல்லென அவன் கைகால்களைத் தனது காந்தளங்கையாற் றைவந்து பராசத்தியைத் தியானஞ்செய்து தன் பத்தாவின் நிலைமையையும் தன் நிலைமையையும் நினைக்குந்தோறுங் கண்ணீர் முத்துமுத்தாய்ச் சொரிந்து வருந்தியிருந்தாள். அக்காலையில் எமதருமன் சிரத்திற் கிரீடமுஞ் செவியிற் குழைகளு மிலங்கச் சிவந்த கண்ணனுய்ப் பார்த்தோர் நடுநடுங்கும் பெரியகோரவடிவினனுய் எமபடர்பலருஞ் சூழத் தன்எருமைக்கடா வாகனத்திலேறி சூலபாசாதியாயுதங்களைக்கரத்திலேந்தி யாண்டெழுந்தருளினன். அப்பொழுது சத்தியவானும் பற்கிட்டிக் காதடைத்துக் கண்பஞ்சடைந்து சலனமின்றியிருந்தான். சாவித்திரி தன் நாயகனுக் குற்றதுன்பத்தைக் கண்டு தரிக்கிலளாய் வெதும்பி யழுதுகொண்டிருந்தாள். தென்புலமன்னன் இனி தாமதித்தலிற் காரியமில்லையென்று தனது பாசத்தை வீசிச் சத்தியவான துயிர்கொண்டு சென்றனன். சாவித்திரி தன்கணவ னுயிர்நீத்தலும் அவனுடலை மெல்லெனத் தரையிற்கிடத்தி, உயிர்கவர்ந்து செல்லும் யமனைக் கண்ணுற் றவன்பின் ரொடர்ந்து "மகாபுருஷரே! நீர் யாவர்? யாதுகாரணத்தினுலே எனது அருமந்தநாயக னின்னுயிரைக்கொண்டு செல்கின்றீர்" என்று வினவ அவனும் மந்தகாசத்தோடு பின்வருமாறு கூறுவான். "கற்பினுக்கருங்கலமாகிய காமர் பூங்கொம்பே! யான் தருமன். நற்குண நற்செய்கைக ளொருங்கமைந்த நின்காதலனுக்குரியநா ளிற்றைப் பொழுதோடு முடிந்ததாதலால் என்றூழிற்படி யவனுயிர் கவர்ந்துசெல்வான் யானே வருவேனுயினேன். பாவியாயிருப்பவர்களை யான் வந்து கொண்டு செல்வதில்லை, என்தூதர்கள் இம்சித்தவர்க ளுயிர்கவர்ந்துவருவார்கள். நீரேன் துக்கப்படுகின்றீர்? எப்பொழுது பூமியிற்பிறந்தார்களோ அப்பொழுதே இறப்பார்களென் றுமக்குத் தெரியாதோ? நீர் கற்பிற் கரசியாதலால் உமது விழிப்புலனுக்கு யான் புலப்பட்டேன். ஆதலால் நீர் என்னைக்கண்டீர். இனி யான் செல்வேன். நீர் நும்மிடம் போகலா" மெனச் சாவித்திரி "ஐயா! நாங்கள் ஒருவரொருவரைப்பிரிந்து ஒரு நிமிடமும் ஆற்றி யிரோம். நாங்கள் உடலும் உயிரும்போ லொன்றியிருந்தோம். உயிரின்றி யுடல் நிலைபெருது. ஆதலின் என்னின்னுயிராகிய நாயகனுடன் யானும் வருகிறே" னென்று

3391

வேண்டிக்கொள்ள அந்தகன் "அம்மணி! நீங்கள் இன்னும் இவ்வுல கிலிருக்கவேண்டியிருக்கிறது. வினைப்பயனெழியாமல் நானழைத் துச்செல்வதற் கெனக்காற்றலில்லை. நாயகன் பின்பு என்னுலகிற் குடலோடடைந்த மகளிர் யாவராவதிருக்கின்றனரா? இல்லை யாத லின் நீர் இங்கிரும்; உமக்கு வேறு ஏதாவது வரம்வேண்டுமெனிற் கேளும்; தவறாது கொடுப்பேன்" என்றான். மங்கையர்க்கரசியார் அவனைப்பார்த்து "நீர் அவ்வாறு வரங்கொடுக்கக் கருதினால் எனது மாமனார் கண்ணிழந்திருக்கின்றார். அவருக்குக் கண்கொடுத்திரட் சிக்கவேண்டு"மென்று வேண்டினள். அங்ஙனமே "தந்தேன் தந்தே" னென் றந்தகன் தன்வழி நோக்கிச் சென்றனன். சாவித்திரி சற் றுஞ் சகியாதவளாய்த் தன்னின்னுயிரைக் கொண்டுசெல்லுங் கூற் றின்பின்னர் விரைந்துசெல்ல, அவன் திரும்பிப்பார்த்து "இப்பெ ருங்காட்டிற் றனியாய் என்னைத் தொடர்ந்துவருவது உமக்குச் சரி யன்று. ஆதலால் நீர் இங்கேயே நில்லு" மென்னப் "புருடனிலாத வள் பிணத்தோடொப்பாள், எனப்பெரியோரு மெடுத்துரைத்திருப்ப, அவரை நீர் பிரிக்க யான் பிரிந்தாற்றல் அறமில்லாது மறமே யாக, அவர்சென்ற வுலகந் தவறாது வருவேன். தனியாய் நின்று தரித்திலேன் கணமும்" என்று மிக இனிமையா யவன் இறக்கமுறும் படி கூறத் தருமன் மனமிளகி யிவைகூறுவான்: "யாவராயினும் உலகியல்புக்கு விரோதமாய்க் கூறுதல் தக்கதன்று. இனி புருட னன்றி வேறு எது கேட்கினுங் கொடுக்குந் திறலுடையேன். கேட் பாயாக" வென "எனது மாமனார் முன்போல் நாட்டிற் கரசாகி யம ருமாறு வரமளிக்க" வென்ன அவனும் "தந்தேன் தந்தே" னென்று தாண்டிச்சென்றனன். பின்னரும் அவள் கவலையுடையளாய்க் கால மூர்த்தியைத் தொடர்ந்துசெல்ல அவன் திரும்பி நாரியர் சிகாமணிக் கிவை கூறுவான்: "கருவிடத்துற்றபொழுதே காலமுதலிய யாவுங் கணக்கிட்டு வைத்திருக்கின்றன. அவ்வாறே யுயிர்க ளனுபவிக்க வேண்டும். இதனினின்றும் முறைபிறழச்செய்ய எத்தகைய தேவர் முனிவர்க்கும் ஆற்றலிலது. ஆதலால் உமது புருடன் திரும்பி வரான். நீர் நுமதில்லம்போய்ச் சேரும்" எனச் சாவித்திரி தென் றிசைக்கடவுளைப்பார்த்துத் "தாமரை நாயகன் உலகமெல்லாம் படைத்தலும் உந்திபூத்தோன் அவற்றைப் புரத்தலும் நீ ரழித்தலு மாகிய தொழிலைக் கைக்கொண்டிருக்கிறீர்கள். அங்ஙனமாக நீ

றெந்தொழிலிலும் வல்லவராகின்றீர். ஆதலால் உம்மினும் பெருமையும் வலிமையுமுள்ள தேவ ரியா ரிருக்கின்ருர்கள். யான் நும்முடைய தன்மையாவும் கண்டவர் சொல்லப் பெரிதுங் கேட்டிருக்கின்றேன். மலையுனுச்சி மலைக்குத்தெரியாதுபோல நீவிரும் நுமது பெருந்தன்மையை யறிந்துகொண்டீரில்லை. தாமெப்படியாவ தென்மீது கருணைகூர்ந்து எனது நாயகனுடன் என்னையழைத்துக்கொண்டுபோகவேண்டும். இதுதான் என்கோரிக்கை. இதனலுமது பெருந்தன்மைக்கு யாதொரு குறைவும் வரா" தென்று மிகவும் பணிந்து வேண்டினள். காலதண்டக்குரிசில் அவளைப்பார்த்து "அம்மா! நுமது கணவனையன்றி வேறெது வேண்டினுங் கொடுக்கின்றேனென்று யான் சொல்லவில்லையோ? உமது கணவனை யுமக்குக் கொடுக்கவோ அல்லது உம்மை என்னுலகுக் கழைத்துக்கொண்டு போகவோ எனக்கு ஆற்றலில்லையே! நீர் வேறு ஏதாவது கேளும் கொடுக்கின்றேன்." என்றுகூற "என் பெற்ருேர்கள் புத்திரவாஞ்சையினல் மிகவும் மெலிந்திருக்கிருர்கள். அவர்கள் மனேரத மீடேறும்படி நூறுவலிய சிறுமைந்தர்கள் அவர்களுக் கனுக்கிரகஞ் செய்யவேண்டு" மென்றனள். "அவ்வாறே தந்தேன் தந்தேன் நீர் போகலா" மென்று விடைகொடுத்து உருக்கரந்து நின்றனன். அப்பொழுது சாவித்திரி அவன்சென்ற வழியின்னதென்று தெரியாது மயங்கி தெற்குத்திசையை நோக்கிச் சிறிதுதூரஞ் சென்று கண்ணீர் கண்களிற் பொருந்த, மிகுந்த துக்கத்துடன் பலவாறு துக்கித்திருந்ததைக் கண்ணுற்ற தருமதேவன் மனதிரங்கி அம்மங்கையர்சிரோமணிக்கு மனக்கவலைதீர்ப்பான் எதிர்தோன்றி "கற்பிற்கரசியே! நீர் புலிமுதலிய துஷ்ட ஜெந்துக்கள் வசிக்கு மிக்கொடுங்காட்டில் இவ்வாறு வருந்துவது தகுதியன்று. மாண்டவர் மீண்டுவரார். என்னல் கூடிய வரையில் யான் நுமக்கு நன்மைசெய்தேன். இனியான் செய்வதொன்றுமில்லை. ஆதலால் நீர் இனியும் வருந்தாது இவ்விடம் விட்டகல்வதேசரி" யென்று தேறுதல் கூறினன். தரும குணமுடைய பெரியோரைக்கண்டால் மனக்குறையாவும் நீங்குமென்று வேதவேதாந்தமர்கள் பலர்கூறப் பலதரமுங் கேட்டிருக்கின்றேன். அத்தகையோர் வார்த்தை யொருதினையளவும் பழுதுபடாதென்றே நம்பியிருக்கிறேன். யாவரது கண்ணிற்கும் புலப்படாத தேவரீரைக்கண்டு யான் வரம்கொடுக்கப் பெற்றிருக்கிறபோது என் மனக்குறையாவும்

சூரியனைக்கண்ட பனியென நீங்கியிருக்கவேண்டுமே! அவ்வாறின்றி யான் குறை சார்ந்திருப்பதும் என்னவோ? கணவனில்லாதபோது உம்முடைய வரங்களா லெனக்கென்ன பயனுண்டு? அது பிணத்திற்கு மலர்மாலை சூட்டி ஆபரணந்தரித்து ஆடையணிதல்போலவே யிருக்கின்றது. குடுமிக்கூந்தலில் நறுநெய்பெய்து கொண்டானிற் பின்னையுமிருந்து சோறுதின்று வாழ்கின்றாளே கொடியளேகாண் என்று நித்தம் பழிதூற்றப் பட்டிருப்பேனோ? ஒருக்காலுமிருப்பதற்கு மனமொற்றுமைப் படேன். ஆதலால் என்னுயிர்க்காதலனைநீத்தி யானகன்றுபோ தலாற்றிலேன். அவர் செல்லுமிடம் யானுஞ்செல்வேன். நீர் தடுப்பது தருமமன்று." என்று சாவித்திரிதேவியார் சொல்ல மறலியும் மனமனலிவிட்ட மெழுகுபோலுருகி யவளைப்பார்த்து "நமக்குவேண்டியதை யானளிப்பேன். நீர் சிறிதும் ஒளிக்காமல் அஞ்சாமல் நெஞ்சினுள்ளது கேட்க"வெனப் பங்கயமாதும் அவனைப்பணிந்து வணங்கி "என்னை மணந்தவ னுயிரளித்தியென"க் கொடுத்தேன் கொடுத்தேனென்றுப் பின்னும் "நீர் நுமது கணவனோடு நாட்டை யடைந்து நன்மகவுச்செல்வம் பொருந்தி, பெருங்காலம் வாழ்ந்திருப்பீ" ரென வாழ்த்தி வைவச்சுதபட்டினம் போய்ச்சேர்ந்தான்.

பெயராவின்பம் பெற்ற நறுமலர்க்கொடியும் தன் கணவன் சோர்ந்துகிடக்குமிட மடைந் தவனதுசிரத்தைத் தன் தொடையின் மீது பொருந்தி முகத்தைத்தடவத் தூங்கியெழுவான் தன்மை யொப்பச் சத்தியவான் உயிர்பெற்றெழுந்து தனது அருமைமனையாட்டியினது ஆனந்த முகத்தைப்பார்த்துப் பெண்ணே! யான் அயர்ந்து நித்திரைசெய்துவிட்டேன். நீயேன் எழுப்பாமலிருந்தாய்ப் பகற்பொழுதெல்லாம் போய்விட்டது. என்னவோ கனவுகண்டிருந்தேன். யாரோவொரு சுந்தரபுருடன் கைத்தலம்பிணித் தென்னைக் கொண்டு சென்றனன். ஒருபெண்வந்து இரந்திட விடுத்தனன். ஆதலான் யானும் வந்தேன். அவ்வாறு என்னைச்சிறை செய்தான் இன்னவனென்று தெரிந்துகொள்ளக் கூடவில்லை. இக்கனவின் பயன் என்னவோ?" என்று கூறியதற்குக் கற்பகக்கொடியும் தாம்கண்ட கனவெல்லாம் உண்மையேயாகும், நாளைக்கே தாம்முடி தரிக்கப் போகின்றீர், குறைவொன்றுமில்லை, பாருமென்று மந்தகாசத்துடன் கூறித் தாம் மிகவு மிளைத்து வருந்தியிருக்கின்றீர்கள், இரவும் வந்துவிட்டது,

காடு மத்தியிலிருக்கின்றது, நாம் இங்கிருப்போமா? அல்லது போவோமா? என்று கேட்டனள். "பெண்ணே! என்றைக்கு மிவ்வளவு நேரம் இங்கிருந்ததில்லை. இன்றென்னவோ அதிக நாழிகையாய்விட்டது. தாய்தந்தையர்கள் மிகவும் வருந்துவார்கள். நம்மைக் காணுமல் வெவ்வேறுவிதமாய் நினைப்பார்கள். நாம் சீக்கிரமாகப் போய்ச் சேரவேண்டும். வா! போவோ"மென்று சத்தியவான் சாவித்திரியை யழைத்துக்கொண்டு காட்டைக்கடந்து வீடுபோய்ச் சேர்ந்தான்.

இவர்கள்செய லிவ்வாருகப் பொழுதுசாய்ந்தும் மகனும் மருகியும் வாராமலிருப்பதைக்கண்ட சாலுவதேசத்தரசனு மவன்மனைவியும் துன்பக்கடலி லாழ்ந்தவர்களாய் வருந்தியிருக்கும்போது அரசனுக்குக் கண்களிரண்டு நன்றுதெரிய வரும்பூதெய்தி யானந்தசாகரத்திற் றிளைத்தனன். அப்பொழுது சூரியன் மேற்கடலிற் குளிக்க விரவுபட்டது. விளக்குவைத்த சிறிதுபொழுதில் சத்தியவான் சாவித்திரியுடன் வந்து தனது பாதங்களை வணங்கி நிற்ப அவர்களைக் கண்ணாரக்கண்டு களித்து ஆசீர்வதித்த அரசன் "என்ன காரணத்தால் பொழுதுபோ யிதுகாறுங் காட்டிலிருந்தீ"ரென விஞவினன்.

சத்தியவான் தந்தையைப்பணிந்து "இன்று உற்றதெல்லாம் சாவித்திரி சொல்வாள்" என்று சொல்ல, அவள் தருமதேவன் தனது கணவ னின்னுயிர் கவர்ந்ததும் அவன்பின் சென்று தானிரந்ததும் அதற்கவன் பகர்ந்த மொழிகளும் அவற்றை மறுத்துத் தான்கூறிய வார்த்தைகளும் அதனல் அவன் மனமிளகி வரம்மூன்றுங் கணவனதுயிருங் கொடுத்ததுமாகிய யாவும் நிகழ்ந்தவாறு கூறி நின்றனள். அவற்றைக்கேட்ட மாமன் மாமியார் மிகவும் புளகாங்கிதமடைந்து தமதில்லிற் புகுந்த பூங்கொடியைப் புகழ்ந்து கற்புடைய பெண்ணினலடையத்தகும் பெரும்பயனை வியந்து கொண்டாடினர்கள். எனக்குக் கண்ணளித்த கண்மணியே யென்று காவலன் முகமனியம்பினன். பிறகு சாவித்திரியைப் பாரணமருந்தச் செய்து யாவரும் நடந்த விஷயங்களின் தன்மையையும் திருவருளின் சம்மதத்தையும் நினைந்து நினைந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

பின்னர் சாலுவதேயத்தைக் கவர்ந்த பகைவன் இறக்க அத்தேசத்தார் தமது அரசனையடைந்து அவனைவேழமேலேற்றிச் சென்

று பொன்முடி கவித்தார்கள். கண்ணும் நாடும் பெற்ற வரசன் குமாரன் சத்தியவானேடிருந்து உலகம் செவ்விதாகப் புரந்து வாழ்ந்திருந்தான். மத்திரதேயத்தரசனுகிய அச்சுவப்பதியும் நூறுமக்களைப் பெற்று இந்திரனைப்போ லுலகமெலாம்புகழ விருந்தான்.

கற்பிலக்கணத்திற் சிறிதும் வழுவாத நங்கை யொருத்தியால் பிறந்தகத்தார்க்கும் புகுந்தகத்தார்க்கும் பல நன்மையும் இம்மை மறுமைப்பயனும் வருமென்பதற்கு ஐயமேயன்று. இச்சாவித்திரி கதையால் ஈது நன்குணர்ந்தாம்.

---

## ஸ்ரீராமரும் வாலியும்.

[வாலிக்குஞ் சுக்கிரீபனுக்கும் நடந்தபோரில் வாலி தன் தம்பியைத் தூக்கிப் பூமியிலே மோதும்படி எத்தனித்த தருணத்தில் சுக்கிரீபனுக்கு உபபலமாக வந்திருந்த ஸ்ரீராமர் மறைந்திருந்து ஒரு பாணத்தை வாலிமார்புக்கு நேராக இலக்குப்பார்த்துப் பிரயோகஞ்செய்தனர். அது அவன் மார்பிலே வாழைப்பழத்திலே ஊசிநுழைவதுபோலத் தடைபடாமல் நுழைந்தது. வாலி அதை இழுத்துப்பறிக்கவும், அதில் ஸ்ரீராமன் என்று எழுதியிருந்த நாமத்தைக் கண்டவுடன் பலவாறு நினைத்து வருத்தப்பட்டான்.]

இவ்விதமாக மனமழிந்து துயரப்படுகின்ற வாலிக்குமுன்னே, மநுவிக்கியானத்திற் சொல்லப்பட்ட ராஜ தருமத்தைத் தவறாமற் காக்கின்ற நிமித்தம், வேதமார்க்கந் தப்பாமல் ராச்சியபாரஞ் செய்த தசரதமகாராஜாவுக்குப் புத்திரனுகத் திருவவதாரம் செய்தருளிய புருஷோத்தமராகிய ஸ்ரீராமர் பிரசன்னமானார். வாலியானவன் நீலமேகமானது தாமரைகள் புட்பிக்கும்படி ஒரு பர்வதாகாரமாகிய வில்லைத் தாங்கிக்கொண்டு பூமியிலே வந்து நிற்பதுபோல எதிரேநின்ற ஸ்ரீமந்நாராயணனுகிய ராமமூர்த்தியைக் கண்டான். கண்கள் புண்போல இரத்தமும் நெருப்பும் பொழியப் பார்த்து, அப்பா! என்னநினைத்து என்காரியத்தைச் செய்தாயென்று சொல்லிப் பின்னும் ஏசத்தொடங்கினான். சத்தியமும் மரபுந் தவறாமல் காத்து அதனிமித்தமாகப் பிராணனைவிட்டுவிட்ட புனிதனுகிய தசரத சக்கரவர்த்திகுமாரனே! பரதனுக்கு முன்னே பிறந்தாய். அயலாரைத் தீமைசெய்ய வேண்டாமென்று ஆக்கியா

பித்து அந்த ஆக்கினைதப்பி நடந்தவர்களைத் தெண்டித்து நீதானே இப்பொழுது தீமைகளைச் செய்தால் நன்மையாமா? பெற்றதாயைப்போல அன்பையும் தயையையும் சிநேகத்தையும் தர்மத்தையுங் கைவிடாமல் தழுவிக்கொண்டிருக்கின்ற நீ, குலதர்மம் இப்படிப்பட்டது, கல்வி இப்படிப்பட்டது, நன்மை இப்படிப்பட்டது, திரிலோகாதிபத்திய மிப்படிப்பட்டது, புஜபல மிப்படிப்பட்டது, உலகத்தை ரட்சிக்குந்தன்மை யிப்படிப்பட்டதென்று தருமசாஸ்திரஞ் சொல்ல அறிந்திருந்தும், மறந்தவர்களைப்போல அந்தச்சாஸ்திர நிச்சயத்தை அழிக்கலாமா? சித்திரத்திலும் எழுதப்படாத திவ்விய சுந்தரத்தையுடைய ஸ்ரீராமா! ராஜதருமமென்பது உங்கள் வமிசத்திலே பிறந்தவர்கட்கெல்லாம் இயற்கையா யிருக்கின்றதல்லவோ? அப்படியிருக்க உனக்கு ஆவியும் ஜனகபுத்திரியும் கிடைப்பதற்கு அருமையான அமிர்தத்தையொத்த உன் தேவியாகிய சீதையைப் பிரிந்தபிற்பாடு நீ மனந்திகைத்தையோ? ராக்ஷதர்கள் ஒருபிழை செய்துபோனால், அதற்கு ஈடாகக் காட்டிலிருக்கின்ற ஒரு குரங்கு ராஜனைக் கொல்லும்படி உங்கள் மநுநீதியிற் சொல்லியிருக்கின்றதோ? உனக்குரிய பச்சாத்தாபத்தை எங்கேதான் கொட்டிவிட்டாய்? என்னிடத்தில் என்னகுற்றத்தைக் கண்டாய்? ஐயா இந்த அபகீர்த்தியை நீ பூண்டுகொண்டால் இனிக் கீர்த்தியைத் தாங்கத் தக்கவர்கள் யார்? உலகத்திலே சஞ்சரிக்கின்ற குரங்கின் கூட்டத்திற்குமாத்திரம் கலிகாலம்வந்து நேரிட்டதோ? ஒழுக்கமும் நன்மையும் வேண்டியது எளியவர்களுக்கு மாத்திரமோ? பலவந்தர்களுக்கு வேண்டியதில்லையோ? அவர்கள் பழியே செய்தாலும் புகழாய் முடியுமோ? ஒருவருந் துணைவேண்டாத விஜயப்பிரதாபனே! பெற்ற பிதாவானவர் உனக்குக்கொடுத்த ராச்சியசாம்பிராச்சியத்தை உன் தம்பிக்குக் கொடுத்து காட்டில் அவனைக்கொன்றாய். இப்போது இந்த ராசரிகத்தை என் தம்பிக்குக் கொடுத்துக் காட்டில் என்னைக் கொன்றாய். இதைப்பார்க்கிலும் வேறென்னகாரியஞ் செய்யவேண்டும். ஆண்மை செலுத்துகிறது சுத்தவீரர்களுக்குரிய வொழுக்கமே ஆயினும் என்னை யிப்படி அநியாயமாகக்கொன்ற நீ நாளை அந்த ராவணனை முறைதவறிய காரியஞ் செய்தானென்று கோபிப்பையோ? ஒருநாளுங் கோபமில்லாதவனே! இருவர் எதிர்த்து யுத்தஞ் செய்து கொண்டிருக்கும்போது அவ்விருவரையும் சுற்றத்தாராகப்

பாவிக்க வேண்டியதைவிட்டு, ஒருவர்மேல் கிருபையைச்செலுத்தி ஒருவர்மேல் கோபங்கொண்டு ஒளித்திருந்து வில்லைவளைத்துப் பாணப் பிரயோகஞ்செய்வது தருமமோ? அல்லது பாவமோ? இது பக்ஷபாதமே. மேலும் வீரமுமல்ல, விதியுமல்ல, சத்தியமுமல்ல, உன்னுடைய பூமிக்கு என் சரீரம் பாரமுமல்ல, நான் உனக்குப் பகையாளியுமல்ல. கொஞ்சமாகிலும் அன்பும் அருளுமில்லாமல் நீ இவ்விதமாகச்செய்தது என்ன நியாயம்? இகபரங்களில் வரும் நன்மை தீமைகளைக் குறித்துப்பார்த்துச் சத்துருக்கள் சிநேகர் அந்நியர்களாகிய சகலரும் ஒப்பச்செய்கிறதல்லவோ தருமத்தை ரட்சிக்கிறதென்பது. குற்றம்வந்து சம்பவிக்குமென்று பாராமல் ஒரு பக்ஷத்திற் சார்ந்து உதவிசெய்யலாமோ? சிங்கத்தைக் கைவிட்டுச் சிறுமுயலைத் துணையாகச் சேர்த்துக்கொள்வதுபோல பகையாளியைச் சாதிக்கவேண்டுமென்று ஆலோசித்த நீ, நொடிப்பொழுதிலே செயிக்கத்தக்க சமர்த்தனாகிய என்னை ஒளித்துப் பலவீனனாகிய சுக்கிரீபனைக் கைப்பற்றிக்கொண்டையே இது என்ன முயற்சி? சந்திரனுக்குக் களங்கமுண்டானதுபோலக் களங்கமில்லாத சூரியகுலத்துக்கும் நீ பிறந்து களங்கமுண்டாகும்படி செய்தாய். ஒருவன் வந்து என்னைப் போருக்கு அழைக்க நான் அவனுடனே எதிர்த்துச் சண்டைசெய்கிற சமயத்திலே ஒளித்திருந்து அம்பெய்து என்பிராணனை வதைத்துப் பின்னும் வெட்கமில்லாமல் நான் விழுந்துகிடக்கின்ற இடத்தில் எனக்கு முன்பாக வந்து நிற்கின்றாய். சாஸ்திர தருமத்தையும் உங்கள் பிதுராசாரத்தையும் கைப்பற்றாமல் வாலியென்கின்ற என்னைக்கொன்று ராசதருமத்தின் வேலியை முறித்தெறிந்தாய். உன் தாரத்தை ஒருவனெடுத்துக்கொண்டுபோக அபவாதமாக எப்படி கையிலே வில்லை வைத்துக்கொண்டு சும்மாவிருக்கிறதென்று நிராயுதன்மேல் மறைந்து அஸ்திரம் பிரயோகித்ததல்லவோ வில்வீரம்! என்று, வாலியானவன் பொறிபறக்கப்பல்லைக்கடித்து மனங்கொதித்து அதிகக் கோபமாய்க்கண்ணின் வழியே நெருப்புச்சிந்தும்படி பேசினான்.. அதற்கு ஸ்ரீ ராமர் உடனே பின்வருமாறு மறுமொழி அளித்தனர். நீ முன்னாளிலே பிலத்துவாரத்திற் புகுந்துபோய் வெகு நாள் வராமலிருந்தாய். அப்போது உன் தம்பி மிகவுந் துயரப்பட்டுத் தானும் அந்தப் பிலத்துவாரத்திற்குள் உன்னிடத்தில் வரும்

படி புறப்பட்டான். இவனை உங்கள் குலத்திலுள்ள பெரியவர்களும் படைத்தலைவர்களும் பிடித்துக்கொண்டு நீயும் போய்விட்டால் எங்களுக்குக் கதி யார்? இனி நீயாவது இருந்து அரசாட்சி செய்யென்று வெகுவாய்ச்சொல்லி நிறுத்தினார்கள். அவர்கள் அப்படிச் சொல்லியும் இவன் என் தமயன் இறந்துபோய் நான் மாத்திரம் உயிருடனே யிருக்கிறதோ? இப்பொழுதே இறந்து போகின்றேன். ராசரிகமுஞ் செய்கிறதில்லை. நீங்கள் என்னசொற் சொன்னீர்களென்று மறுத்துவிட்டான். மறுபடியும் அவர்கள் பல விதத்திலும் இணங்கும்படி சொன்னதைக்கொண்டு அரசாட்சிசெய்யச் சம்மதித்தான். நீ வந்தவுடனே உன்னை வணங்கி உன் ராசரிகத்தை உன் வசஞ்செய்து நடந்த சமாச்சாரமுஞ் சொன்னான். அப்போது இவன்மேல் கோபித்துக்கொண்டு இவனிடத்தில் குற்றமில்லாமலிருந்தும், இவனைக்கொல்லுகிறதற்கு நினைத்து நீ மிகவும் உபத்திரவஞ் செய்தாய். அத்தருணத்திலே இவன் என் பிழையெல்லாம் பொறுத்துக்கொள். உனக்கு அபயம் அபயமென்றுஞ் சொன்னான். அல்லாமலும் மகா பலவந்தனாகிய இந்தச் சுக்கிரீபன் உனக்கு யுத்தத்தில் நான் தோற்றேனென்று கைகளை உயர எடுத்துக் கும்பிட்டும், இவன் பிராணனை எமனுக்கு உணவாகக் கொடுக்கிறேனென்று சீறினாய். இவன் நடுங்கி நாலு திக்கிற்கும் அப்புறத்தே ஓடினான். அது அறிந்தும் மனதிரங்காமல் தம்பியென்றும் பாராமல் துரத்தினாய். நீவந்தால் உன்தலைவெடித்துப்போம்படி ருஷிசாபம் உண்டாயிருக்கின்ற மலையின்மேல் இவன்போயேறினான். நீ அவ்விடத்திற் போகவில்லை. அதனால் இவன் உயிர்தப்பிப் பிழைத்தான். எப்பொழுதும் தெளிவினை யுடையவர்களுக்கெல்லாம் பரதாரத்தை இச்சியாம லிருக்கின்றதே அன்பும் நல்லகுடிப்பிறப்பும் வீரமும் வித்தையும் மெய்ம்மையும் நீதியுமாம். மேலும் நாம் பலவந்தராயிருக்கிறோமென்று எளியவரைத் துன்பப்படுத்துகிறதே வீரங்குன்றுவதும், ஒருவர் விவாகஞ் செய்துகொண்ட ஸ்திரீகளைக் கற்பழிக்கிறதே தருமந்தவறுவதுமாம். இப்படி இருக்க நீதருமம் இன்னதென்பதையும் இம்மைமறுமையையும் யோசித்துப்பாராமல் உனக்குள்ள பெருமையையும்விட்டு உன் அருமைத்தம்பியின் பிராணபதமாகிய பெண்சாதியையும் பலாத்காரமாய் அபகரித்துக் கொண்டாயாகையினாலும், இவன் எனக்குப் பிராணசிநேகனானபடியினாலும், இவனுடைய துய

ரத்தை நிவிர்த்தி செய்கிறது என்கடனாகையினாலும், அந்நியர்களாகி லும் எளியவர்களாயிருக்கின்றவர்களுக்கு வந்த ஆபத்தைத் தீர்க்கிற தே என்னுடைய மனோபீஷ்டமாகையினாலும், இப்படிச்செய்தேனெ ன்று ஸ்ரீராமர்சொற்றனர். அவற்றைக்கேட்ட வாலி ஐயா! நீ தகாத தென்று சொல்லிய இவ்வளவு செய்கையும் எங்களுக்கு இயற்கையா யிருக்கின்றது. கற்புடைய உங்கள் குலத்து ஸ்திரீகளின் புணர்ச்சி போல பிரமதேவன் எங்களுக்கு உண்டு பண்ணவில்லை. தாயென் றும் தங்கையென்றும் மகளென்றும் மனைவியென்றும் தமயன் பெண்சாதி தம்பிபெண்சாதி யென்றும் கிரமமில்லாமல் நேர்ந்தபடி புணரும்படிசெய்தான். மேலும் கல்யாணஞ்செய்கிறது மில்லை. எங்கள் மிருகசாதிக்குத் தக்கபடி மனம்போனவாறு நடந்துகொள்ளு கிறதேயல்லாமல் வேதமார்க்கத்துக்கு ஒத்த குணமுமில்லை. ஆகை யால் சிறிதுங் குற்றமே யில்லை. இதை நீ அறியென்று வாலிசொல்ல அதற்குத் தகுதியாகிய நியாயத்தை ஸ்ரீராமர் சொல்லலுற்றனர். நீங் கள் சிரேஷ்டர்களாகிய தேவர்களுக்குப் புத்திரர்களாய்ப்பிறந்து, தர்மமார்க்கத்தை அறிகிறபடியால் உங்களுக்கு மிருகத்துவமே யில்லையென்பது தெரியவந்தது. ஆகையால் அதருமஞ்செய்வது அடாது. தருமத்திற்கு இருப்பிடமாயிருக்கின்றது பொறியுணர் வில்லாத ஜடமாகிய சரீரமா? ஐம்புலங்களையும் பகுத்தறிகின்ற அறி வல்லவா? சாஸ்திர தருமங்களைச்செவ்வையாக அறிந்த நீ பிழை செய்து பாவத்தை யடையலாமா? முதலையானது பிடித்திழுக்கச் சங்குசக்கரங்களை யேந்திய ஆதிமூலமாகிய ஸ்ரீமந்நாராயணனைக்கூவி யழைத்துப் பேரறிவினாலே மோக்ஷானந்தத்தைப்பெற்ற அந்தக் கஜேந்திரனும் மிருகஜாதிதானே. தருமச்சிந்தையினாலே சீதையின் துக்கத்தை ஆற்றும்படி ராவணனுடனே யுத்தஞ்செய்து மோக்ஷ மடைந்த எங்கள் பிதாவாகிய ஜடாயுவும் கழுகுகளுக்கு ராஜாவாகிய ஒரு பக்ஷிதானே. ஆகையால் அறிவே பிரதானம். நல்லது தீயது அறி யுந் தன்மை யில்லாததல்லவோ மிருகம். நீதிசாஸ்திரத்தின் கருத்து நீ யறியாதது மற்றொன்றுமில்லை யென்கிறதை உன்வார்த்தைதானே தெரிவிக்கின்றதே. இன்னது தக்கது இன்னது தகாததென்று சரி யாக அறியாதிருக்கின்றவர்கள் உயர்ந்தமனிதர்களானாலும் மிருகமே. மிருகமானாலும் மநுநீதி தவறாமல் நடக்குமாகில் அது தேவர்களுக் குச் சமானமே. நீ காலனுடைய பராக்கிரமத்தையழித்த சிவனைப்

பத்தியுடனே பூசைசெய்து அந்தப்பூசாபலத்தால் ஆகாசமல்லாத மற்ற நான்குபூதத்தின் வலியையும் பெற்றிருக்கின்றையே. அநேகர் தரும மார்க்கத்தை அடைந்திருக்கின்றார்கள். அநேகர் அதை இழந்திருக்கின்றார்கள். தேவர்களிலும் தீமைசெய்து திருத்தப்பட்டிருக்கின்றார்கள். இப்படியிருக்கிறபடியினாலே எந்தக்குலத்திலும் பிறந்த எப்படிப்பட்டவர்களுக்கும் மேன்மையும் கீழ்மையும் அவரவர் செய்யும் வினையினாலேயே உண்டாகுகின்றன. அந்தத் தன்மையை அறிந்திருந்தும் நீ இல்லறத்தைக்கெடுத்து நடந்தாயென்று ஸ்ரீராகவர் சொல்ல, அதுகேட்டு வாலியானவன் "நல்லது அப்படியானாலும் என்னெதிரேவந்து யுத்தஞ்செய்யாமல், வேடர் மிருகங்களை எய்கிறதுபோல மறைந்திருந்து அம்புவிட்டது என்ன" வென்றுகேட்டான். அதற்கு லக்ஷ்மணர் பிரதியுத்தரஞ் சொல்லுகின்றார். முன்பு உன் தம்பியாகிய இந்தச் சுக்கிரீபன்வந்து சரணாகதம் பண்ணினான். அப்போது எங்கள் தமயனார் முறைதவறிய உன்னைக்கொன்று இவனை ரக்ஷிக்கிறோமென்று அபயஸ்தங் கொடுத்தார். ஆகையால் உன்னெதிரேவந்தால் நீயும் பிராணன்மேல் இச்சையுடையவனாய்ச் சரணாகதியடைந்தால் அவனுக்குக் கொடுத்தவாக்குத் தவறிப்போகுமென்று மறைந்திருந்து பாணப் பிரயோகஞ்செய்ததென்று சொல்ல, அந்தவார்த்தையை வானரகுலத்திற்கு ராஜாவாகிய வாலிகேட்கவே, மெய்தானென்று எண்ணிக் கோபமடங்கித் தருமசொரூபனான ஸ்ரீராமன் குற்றஞ்செய்ய மாட்டாரென்று மனஞ்சம்மதித்து, கேள்விச்செல்வ முண்டாகிய வாலி மெய்யறிவு பிறந்து நமஸ்காரஞ்செய்து சொல்லுகின்றான்.

தாய்போலச் சகலசீவராசிகளுக்கும் கிருபைசெய்து தருமமும் தகுதியும் மேன்மையும் நீயேயென்று சொல்லும்படி நிற்கின்ற பரமாத்துமனே! நீ விசேடமாகக் குறித்துப்பார்க்குந் தருமத்தை நாய்க்குச்சமானமாகிய எங்களிடத்திலேயா பார்க்கிறது? நான்செய்த தீமைகளைப் பொறுத்தருளவேண்டும். யாதொன்றுந் தெரியாத குரங்கென்று நினைத்து நாயேன் சொன்னசொற்களைப் பற்றி உன்திருவுள்ளத்திலே சீற்றங்கொள்ளாதே. துக்கத்தைத் தருகின்ற என்னுடைய ஜெனன்மரண வியாதிகளுக்கு அருமையாகிய ஒரு சஞ்சீவிமருந்துபோலத் தோன்றிய ஐயனே! கேட்ட வரங்களையெல்லாங் கொடுக்கின்ற வள்ளலே! அடியேன் ஒரு விண்

ணப்பம் பண்ணிக்கொள்ளுகின்றேன், அதைக் கேட்டருளவேண்டும். கூர்மையாகிய அஸ்திரத்தினலெய்து நாயடியேனுடைய பிராணன் பிரிந்துபோகின்ற சமயத்திலே மெய்யறிவைக் கொடுத்து ரக்ஷித்தாய். பிரமா விட்டுணு உருத்திரனென்கின்ற மும்மூர்த்திகளும் நீயே. அம்மூவர்களுக்குள்ளும் முதல்வனுயிருக்கின்றவனும் நீயே. பாவமும் நீயே. தருமமும் நீயே. பகையும் நீயே. உறவும் நீயே. மற்றுஞ் சகலமும் நீயே. முப்புரங்களையும் எரித்த சிவன் முதலானவர்களால் நான் பெற்றவரங்களையெல்லாம் உருவி என் வலிமை மிகுந்த மார்பையும் உருவிவந்து உயிரையும் உண்ட உன்னுடைய அஸ்திரமே யல்லாமல் தருமமென்பது வேறுண்டோ? மனிதர்கள் தேவர்கள் முதலாகிய எவர்களுமாய், மிருகம் பறவை முதலாகிய எவையுமாய், கார்கால முதலாகிய அறுவகைப்பருவங்களும் அந்தந்தப்பருவத்திற்கு உரியபயனுமாய், பூவும் மணமும்போலச் சர்வபதார்த்தத்தையும் விட்டுநீங்காமற் கலந்து பொதுவாயிருக்கின்றவனே! உன் கடாக்ஷத்தினலே. நீ இன்னனென்றும் உனது தன்மை யிதுவென்றும் அறியும்படி எனக்குத்திவ்விய ஞானம் உதயமான படியினலே இனிப் பரமபதங் கிடைப்பது அருமையோ? தருமசொரூபனுகியவுன்னைப் பிரத்தியக்ஷமாகக்கண்ட நான் இன்னங் காணவேண்டியது வேறென்ன இருக்கின்றது. ஜென்மஜென்மாந்தரங்கள் தொடங்கிவந்த மகத்தாகிய என்கருமத்திற்குப் பிராயச்சித்தம் என்னவென்றுல் அடியேனுக்கு நீமுத்திகொடுத்து ரக்ஷிக்கிறதுதான் ஐயாவென்று தோத்திரஞ்செய்து பின்னுஞ்சொல்லுகின்றுன். உயர்ந்த பெருமைபொருந்திய ஸ்ரீராமா! என்னைக்கொல்லும்படி என் தம்பி உன்னைக்கொண்டுவந்து விடுத்து, சிற்றினமாகிய குரங்குகளுடனே கூடியிருந்து ஆலோசித்தும் சம்பாஷித்தும் அரசாண்டுவந்த இந்தவெறுமையாகிய இராச்சியத்தைத் தான்பெற்றுக்கொண்டு, எனக்கு மோக்ஷராச்சியத்தைக் கொடுத்தான். இதைப்பார்க்கிலும் அதிகமாகிய உதவி மற்றென்றுண்டோ? சுவாமி உம்மிடத்தில் நானொரு வரங்கேட்கிறேன். அது என்னவென்றுல் என்தம்பி குரங்கின் சேட்டையாய்க் கள்ளைக்குடித்த மயக்கத்தினுல் அறிவுதடுமாறி உன்விஷயத்தில் ஏதாகிலும் அபசாரப்பட்டால் என்மேல் ஏவிய அம்பென்கின்ற கூற்றுவனை அவன்மேலேவவேண்டாம். இதுவுமல்லாமல் இன்னமொன்று நான் கேட்கவேண்டும். உம்முடைய

தம்பிமார்கள் என் தம்பியைப்பார்த்துத் தமயனைக் கொல்லுவித்தா னென்று இகழ்ச்சிசெய்யாமல் காத்துக்கொள்ளவேண்டும். நீர்தானே முன்னமே உன்குறையை முடிக்கிறேனென்று அவனுக்கு அபயஸ் தங்கொடுத்திருந்தீர். மேலும் இது கர்மாநுசார மாகையால் அதைக் கடக்கக்கூடுமோ?மாயையையுடைய அந்தராக்ஷதனைப் பிடித்துவந்து தேவரீர்முன்னேவிட்டு என் குரங்கின்தொழிலைக் காண்பிக்கிறதற்கு ப்பாக்கியஞ் செய்யாமற்போனேன். இனி யதைச்சொல்வதனாற் பிர யோசனமில்லை. ஆயினும் இப்பொழுது நீர் நினைத்ததைச் செய்ய வேண்டுமென்றாலும் இந்த அநுமானே செய்கிறதற்கு உரியவன். இவனை உம்முடைய கையிலிருக்கிற வில்லைப்போலவே திருவுள்ளத் திலே வைத்தெண்ணும். என்தம்பியை உம்முடைய தம்பியாகவே நினையும். இவர்களுக்குச் சமானமாகிய துணைவர்கள் உமக்கு வேறி ல்லை. இவர்களைக்கொண்டு லோகமாதாவாகிய பிராட்டியாரைத் தேடிக்கொள்ளுமென்று ஸ்ரீராமருடனே சொல்லி, சமீபத்திலே பிர லாபித்துக்கொண்டு நின்ற தன்தம்பியைப் பார்த்து, அப்பா! அங்க லாய்க்காதே, வாவென்று கையைநீட்டிச் சேர்த்துத்தழுவிக்கொண்டு வேதமும் ருஷீஸ்வரர்களும் பிரமாவும் மற்ற ஆகமசாஸ்திரத்துறைக ளின் முடிவும் சொல்லுகின்ற அநாதியாகியவஸ்துவே இப்படிவில்லை யேந்திக்கொண்டு ஸ்ரீராமனென்ற நாமந்தரித்துத் தருமத்தை நிலைநிறு த்துகிறதற்கு வந்து அவதரித்திருக்கின்றது. இதை எவ்வளவாகிலுஞ் சந்தேகமாக நினைக்கப்போகிறாய். நிலைபெற்றிருக்கின்ற மோக்ஷ ஐசுவரியத்தைவிரும்பி அதற்குத்தகுதியாகிய மார்க்கத்தில் நிற்கின்ற சீவாத்மாக்களெல்லாம் இவருடைய நாமத்தையே கற்கின்றன. இவரையே தியானிக்கின்றன. இதற்கு சாட்சிவேண்டுமானால் என் னைக்கொன்ற மகத்துவமே போதும். வேறொரு எதுவும் வேண்டுவ தில்லை. நாள்தோறும் இவருக்கு அளவில்லாதபொல்லாங்குகளைச் செய்தவர்களும் சற்கதி அடைவார்களாகில் இவருடைய பாதாம்பு ஜத்தைச் சார்ந்திருந்து ஏவல்செய்கிறவர்கள் பெறுங்கதியடைவது சொல்லுந் தரமாமோ? உனக்கு விதியே உதவிசெய்ததனால் அருமை யென்ன ? இகபரமிரண்டும் பெற்றுக்கொண்டாய். இனிச்செய்யத் தக்கது என்னவென்றால், மகாலட்சுமியையும் மறுவையும் மார் பிலுடைய ஸ்ரீமகாவிட்டுணுவாகிய இந்த ராமச்சந்திரனது ஏவலைச் சிரசாக வகித்துக்கொண்டு மனதை ஒருவழியிலே நிறுத்தி மூன்று

லோகத்தாரிலும் மிகவும் உயர்ந்திருக்கக் கடவாய். மதத்தகுரங்கின் புத்தியைக் காட்டாமல் அதை நிவிர்த்திசெய்து செய்தநன்றியைநினைத்து இவருக்கு ஆபத்துவந்தபோது உன்னுயிராயாவது கொடுத்து சகலருக்கும் மோட்சபதத்தைத்தருகின்ற இந்தராகவர் சொன்னவையெல்லாம் தடுக்காமற்செய்து நெடுங்காலமளவும் ஒழியாத செனனத்தை ஒழித்துவிடு. இராச பெருக்கத்தினால் களிப்படைந்து மறந்து இகழ்ச்சிசெய்யாமல் இவருடைய திருவடித்தாமரையை நீங்காது வாழக்கடவாய். அரசர்களும் எரிகின்ற நெருப்புஞ் சரியென்று நினை. அடிமைகள்செய்தகுற்றம் அற்பமானாலும் பொறுப்பார்களென்று நினைக்கவேண்டாம். அகலாமலும் அணுகாமலுமிருந்து தீக்காய்கின்றவர்களைப்போலப் பக்குவமாக நடந்துகொள்ளென்று இவ்விதமாகிய உறுதிகளையெல்லாங்கொண்டு தம்பிக்குப் புத்தி சொல்லி, ஸ்ரீராமனைப்பார்த்து "ஐயா தாசரதி! இந்தச் சுக்கிரீபனும் இவன் சுற்றத்தாரும் இன்றுமுதல் உம்முடைய அடைக்கல"மென்று அவனைச் சுவாமிகையில் ஒப்புவித்துத் தன்கையைச் சிரசின்மேற்கூப்பி அஞ்சலிசெய்தான்.

---

## பாண்டவர் வெளிப்படுதல்.

---

அற்புதமாகிய ஐவர்வெளிப்பட்ட சரித்திரத்தைச் சொல்லுகின்றேன் கேளும் சந்திரகுலாதிபனேயென்று வைசம்பாயன மகா முனியானவர் திருவாய் மலர்ந்தருளினார்.

மந்திரமூர்த்தியின் மகிமைப்பலனே சிந்தையுணீங்காச் செனமேஜயனே! பாண்டவர்களும் பாஞ்சாலியும் விராடபுரநீங்கி மாஞ்சோலைசூழ்ந்த வனத்தூடமைந்த பூஞ்சாலைசேர்ந்த பொய்கையில் மூழ்கி அருணோதயமானவுடனே செப தப விதிகண்முடித்து சூரிய நமஸ்காரஞ்செய்து ஸ்ரீ வேதவியாசனையும் எமதருமராசனையுந் திக்கு நோக்கிப்பணிந்து பாண்டவ சகாயனது பாதபத்மநினைந்து பருதியினொளியினும் பழயவடிவஞ்சிறந்து மகாலட்சுமிபோன்ற பாஞ்சாலியுடன் பாண்டவமுதல்வன் வீற்றிருக்கும்பொழுது வாயுகுமாரனான வீமசேனனும் தேவேந்திரகுமாரனான செஞ்சிலைவிசயனும் ஆயுள்வேதியரளித்த நகுலசகாதேவரும் தங்கள் குலத்திற்குங் குண

த்திற்கும் நலத்திற்கும் நன்மைக்கும் தகுதியாக முரசக்கொடிபடை த்த முன்னோனைத்தொழுது அன்னோனருளிய ஆசிமேற்கொண்டு பெரும்புகழ்ப் பிரகாசத்துடன் தமயனிடஞ் சார்ந்திருந்தார்கள்.

இவ்வாறிருக்குஞ்சமயத்தில் நிகரற்ற விற்றுங்கிய தனஞ்சயன் தருமராசன்முகத்தைச் சந்துர்ஷ்டியாய்ப்பார்த்து செந்தூரத் திலதம்போற் செவந்த புண்கண்டு, ஆ அண்ணா தேவரீருடைய நெற்றியில் வடுவிற்கிடமானவாறு யாதென்று திடுக்கிடக்கேட்டான். தருமராசன் சிறுநகைபுரிந்து யாதொன்றுஞ் சொல்லாமலிருந்த அப்போது மின்னலைப்பழித்த மேனிபடைத்த பாஞ்சாலி விராடராசனுக்குந் தருமராசனுக்கும் வாக்குவாதத்தினால்வந்த தீது ஈதென்றுரைத்தாள். இன்னதென்றுசொன்ன வந்நேரமேயெழுந்து இன்னமுந் தாமதமாயென்று நெருப்புப்போலெரிந்து நெடுமூச்செறிந்து அண்ணன்மேற்பரிந்து "ஐயோ! நான் பிரிந்துவந்த துன்பமிதுவோ! இப்போதே விராடபுரம் வேகக்கொளுத்தி மச்சநாடன் றலையை வாங்கி வைக்கிறே" னென்று நச்சரவம்போற்சீறி வெட்சிமாலையணிந்த ஆகமுந் தேகமும் அலரநடுங்கி பற்கடித்து விற்பிடித்து அவனுக்கிச்சையான குலத்தைப் பச்சடிபண்ணுகிறேனென்று புறப்பட்டான்.

நெருப்புடன் காற்று நேசமானதுபோல் வீமனும் வெகுண்டு வீரிட்டெழுந்தான். நகுலசகாதேவ ரிருவரும் வியாகூலத்தோடு நடுங்கி விராடராசனுக் கின்றுவினைசகாலமா வென்று மெய்ம்மறந்து விட்டார்கள்.

இத்தன்மைவாய்ந்த தம்பிமார்களின் கடுங்கோபத்தைக்கண்ட தருமராசன் "ஒகோ கோ! மோசமாச்சுதே" என்று பூசிதவார்த்தைகள் புகன்று "நேசவிசுவாசிகளே! ராஜகுல சிரேட்டர்களே! நிட்டூரம்வேண்டாம். சிறிதுஉற்று யோசனைசெய்யுங்கள். ஒருவருடைய ஆபத்துக்காலத்தில் மற்றொருவர் உதவிசெய்தால் அவ்வுதவியை ஆயுசுள்ளவரைக்கு மறக்காமல் "நன்றிகுன்றாமை" யென்னும் நீதியையும் தருமத்தையும் நினைந்துநாடி முன்னுதவிசெய்த பேர்களால் என்னபிழைவந்தபோதிலும் அதைச் சகித்து மனம்பொறுத்து நன்றிபிழையாமல் நன்மைசெய்பவர்கள் நாளும் பெரியவரென்று நானிலம்புகழ்வதுண்டு. சாதுக்களும் சாத்திரங்களிற் பேசியிருக்

கின்றார்கள். பற்பலநாளும் நன்மைபுரிந்து சொற்பமாக ஒருநாளிற் குற்ற நேரிட்டால் ஒரு அற்பக்குற்றத்திற்காக நன்றிகுன்றி மனங் கன்றி பொல்லாங்குசெய்ய நினைப்பது புகழல்ல பூணல்ல பொரு ளல்ல புலமைகெட்ட கீழ்மக்கள் செய்கையாம். புண்ணியகுலத் திற்பிறந்த மேன்மக்களே! ஒரு நன்றிசெய்தபேர்களை உள்ளத்தில் வைத்துப் பிழை நூறானாலும் சான்றோராகியபெரியோர் பொறுப் பார்கள். கயவராகிய மூடர்களுக்கு எழுநூறு நன்றிசெய்து ஒன்று தீதாமாகில் முன்செய்த நன்றிஎழுநூறுந் தீதாய்க் கெட்டுப்போம். ஆகையால் காடாக்கினி மூண்டகாட்டில் பன்னிரண்டுவருடங் கஷ் டப்பட்டு, பதின்மூன்றாவது வருடத்தை இந்த விராடராசனுடைய நீழலிலிருந்து இவனது உப்புந்தண்ணீருமுண்டு நாம் எண்ணிய வெண்ணம் பின்னமில்லாமல் அஞ்ஞாதவாசங் கழித்தோம். எத் தேசத்தரசர்களினும் இத்தேசத்தரசன் மெத்தவும் சரசன். நாம் எங்கிருந்து அஞ்ஞாதவாசம் பண்ணலாமென்று முன்னர் வின வியபோது "விராடபுரத்திற்கு மிஞ்சியபுரமுமில்லை, விராடராசனுக்கு மிஞ்சிய ராசனுமில்லை"யென்று சொன்னீர்கள். உங்கள் சொல்லை நம்பி இங்குவந்தடுத்தபோது நமக்கிவன் ஊழியன்போலும் இவன தரசாட்சி நமதரசாட்சிபோலும் காலங்கடத்தினோமே யல்லது நா மிவனுக்குத்தாழ்ந்து நடுங்கி நடந்ததில்லையே. நம்மையிவன் அதிகா ரஞ்செய்ததுமில்லையே. ஏதோ கோபபாபமென்னும் கொள்கையா லும் நமது தீவினைவயத்தாலும் குற்றம்நேரிட்டது. அதற்காக நாம் கடவுளைநோக்கி மன்னிப்புக்கேட்டு இவனுக்கொரு பொல்லாங்குநே ரிடாமல் காக்கவேண்டியகடமை நம்முடையதாயிருக்க நீயவனைக் கோபித்தெழுவது குணமல்ல. நம்மைத்தொழுது இரட்சித்த தோன்ற லின்பேரில் பழுது நினைப்பது பாவம் பாவம்பார்த்தனே! பதராதீர்க" ளென்று தருமராசன் தடுத்தார். அதன்பேரில் வீமார்ச்சுன ளிருவ ரும் நகுலசகாதேவரும் மூத்தவர் மொழிந்த முறைபிறழாமல் மச்ச ராசன்மேல் வைத்த கோபமாறி தருமராசனுத்தரவின்படி வன்னி மரத்திலேறி அவரவ ராயுதங் கைக்கொண்டு அந்தப் பாலைநிலத்தி லமர்ந்த கோலாகலி நீலி சடாதரி லீலாவதி சூலி கலாதரி குண்டலி குமரி சாமுண்டியைப்பணிந்து, வன்னிமரத்தை வலம்வந்து வண ங்கி எங்கள் தாயினது கருப்பம்போல் ஆயுதங்களைக் காத்தளித்த த்மனியமான தருவேயென்று சந்தோஷப்பேரிட்டுச் சம்பிரமங்கொ

ண்டாடி விராடராசனுடைய கொலுமுகச்சாவடியிற் கூசாமற் புகுந்து, ஐந்து தேவேந்திரர்கள் ஒரு இந்திராணியுடன் வந்திருந்தவாறு போல தந்தத் தவிசேறி யிருந்தார்கள்.

அந்தவேளையில் செந்தழல்வளர்க்கும் அந்தணர் முனிவர் மந்திரி சாமந்தர் தந்திரி பிரதானிகர் பந்துமித்திரர் வந்தவிருந்தின் மாந்தர் வேந்தர் யாவருஞ் சேர்ந்துவந்து, குந்திதேவியார் தந்த மைந்த ரைவரும் குருகுலம்விளங்கப் பிரகாசித்து தயமாகிய குமுதநண்பன்போற் சிங்காசனத்திலிருக்கக்கண்டு, தங்களாற் றாங்கப்படாத சந்தோஷங்கொண்டு விராடராசனுக்கு விரைவிற் றெரிவித்தார்கள்.

அச்செய்திகேட்ட மச்சராசன் இச்சை மேற்கொண்டு "ஐயோ! நாமென்செய்தோம், இனி யென்செய்வோ" மென்று மனவருத்தங் கொண்டு சந்தன தாம்பூல புட்பம் பன்னீர் மஞ்சட் குங்குமவாசனைத் திரவியம் தேங்காய் வாழை திரண்மாங்கனி பலா பலபல பலகாரங்கள் பருப்புவர்க்கங்கள் தட்டுத் தட்டாய் யெடுப்பித்துக்கொண்டு பட்டுப்பட்டாவளிகள் கட்டுக்கட்டாகிய கட்டுவர்க்கங்கள் தாப்த்தாக்கள் முட்டுப்படாத முத்துமுதல் நவரத்தினங்கள் ஆணிப்பொன்னொடு மாணிக்கங்கள் இவற்றை எல்லாம் காணிக்கைவைத்து தானும் புத்திரனுந் தருமபத்தினியும் பாண்டவர்களின் பொன்னடியில் வீழ்ந்து புழுதிமேற்புரண்டு "பிழைபொறுத்தருளும்! பூரணநிதியே பொறுமைக்கரசே" யென்று துதித்துப் பூமியைவிட்டெழுந்திராமலிருந்தார்கள். அம்மூவரையும் தருமராசன் வாரியெடுத்து மார்போடணைத்து பக்கத்தில் வைத்து "ஆதிசேடன் முடிமேற்றாங்கிய பூமியில் உம்மைப்போலியாரிருக்கிறார்கள். நீர் மெத்தவும் உத்தமர், புண்ணியசாலி, பொருமைக்குவேலி" யென்று புகழ்ந்து மகிழ்ந்தார்.

இவ்வாறு கொண்டாடிய குருகுலக்கோமானது குளிர்ந்த வாசகத்தால் மச்சகுலாதிபனெழுந்து மறுபடியும் பணிந்து "வேந்தாகிய சாந்தமூர்த்தியே! தோத்திரமென்பது தம்மைப்போல்பவர்க்குத் தகுமல்லது எங்கட்குத் தகாது. நாங்கள் அவ்வளவு பாத்திரமுஞ் சேத்திரமுங்கோத்திரமும் பெற்றவர்களல்ல. ஆதலால் அடியேன் மிகவும் பேயன், விவேகமற்ற சேயன், முன்கோபத்தாற் பதறிப்பேசு

கின்ற வாயன், அப்படிக்கிருந்த போதிலும் தங்கட்கு நான் தகுந்த நேயனெனப்பாராட்டி என்னுல் நேரிட்ட குற்றங்குறைகள் எவையிருப்பினும் அவைகளை மன்னித்து, ஓட்டித்தீர்க்க வைரநாட்டாமல், சிலகாலத்திற் சொல்லிக்காட்டாமல், தீனனுன வென்னை ஆண்டருள் செய்யவேண்டும் பாண்டவர்களே'' யென்று வேண்டிக் கொண்டான்.

இப்பிரகாரம் புகன்று அடைக்கலம் புகுந்த விராடராசனை வேந்தர்வேந்தாகிய தருமராசன் பார்த்து இரக்கமுள்ளவராய் இஷ்ட பூர்த்தியாய் சொல்லத்தொடங்கினுர்.

ஐயா விராடபூபதியே! உமது விராடபுரத்தில் நாங்கள் வந்து சேர்ந்த பிற்பாடு துன்பமென்பவை யில்லாமலும் எங்கட்குரிய சுதேசம்போலும் எங்கும் பிரக்கியாதி யுண்டாகும்படி வேற்றுமையின்றி வீற்றிருந்து வாழ்ந்தோம். இதல்லாமலும் நாற்றினடவால் விளையுங்கழனியின் மடையாய்! நீரோட்டத்திற் சேற்கண்டைகள் நேரோறிப்பாய்ந்து விளையாடுந் தேரோறிய மச்சநாட்டரசே! நீ யறிய சொல்லுகின்றேன். உன்னில் உன்னிலுமுயர்ந்த உற்றுருமில்லைப் பெற்றுருமில்லை மற்றுருமில்லை. மாசற்ற மரபோய்! உன்னைவிட எனக்கு வேறொரு உதவியுமில்லை, நான் இதுவரையிலும் அநுபவித்துவந்த உன் பட்டினத்தின் பதவியைவிட வேறொருபதவியுமில்லை. நீயும் உன் சகோதரர்களும் உன் புத்திர மித்திர பௌத்திராதியரும் நால்வகைச்சேனைகளும் எனக்குப் படைத்துணைவந்து என் பக்கத்தில் நிற்பீர்களாகில், துராங்காரமாய் எங்களை வஞ்சித்த சத்துருக்களையும் அவர்கட் குடன்பட்டு வந்த சேனைவேந்தர்களையும் ஒரு நிமிஷத்தில் இயமலோக மேற்றிவைக்கிறேன். இது மெய்யென்று பறைசாற்றி வைக்கிறேன். ஐயமற உட்கொள்ளு'' மென்று வையகம் வாழ்த்து மரபினுன்சொல்ல அதனுல் மச்சராசன் தேறி மகிழ்ந்து புகழ்ந்து மனத்துயர்மாறி மாதொடு மகனுந் தீதகன்றுற்றுர்கள்.

பின்னர் உத்தரகுமாரன் நமக்கு உறுதிதேடிக்கொள்ளுந் தருணமிதுதானென்று தந்தைதாயிருவரையு முன்னிட்டுக்கொண்டு தருமராசனைப்பணிந்து வாய்பொத்திநின்று "சமுத்திரத்தை ஆடையாகத் தரித்தருளிய அகிலவுலகத்தையும் வெள்ளைக்குடை நீழலிலடக்கியாளும் விதரணவேந்தே! தமக்குத்தக்க பக்குவமாகப் பேச

வறியன் ஆயினுஞ் சிறியன் ஆயினும் இந்த விராடபுரமும் இதனது பூவளம் பொருள்வள முள்ளன யாவும் தேவரீருடையதே. இயாங்களியாவரும் உங்களுடைய ஏவற்பணிவிடைக்கேற்றவர்களே. எங்கட்கு சுதந்தரமான ஆறுவிதப்படைகளும் தங்களுடையதே. இதல்லாமல் என் தங்கையாகிய உத்தரகுமாரத்தியும் அர்ச்சுன ராசற்குரியவளே. இவ்வளவு தயவுசெய்து எங்களை யாண்டுகொள்ள வேண்டும் ஆண்டவமாராகிய பாண்டுநந்தனரே'' யென்று வேண்டி விரும்பினான்.

இவ்விதமாக உத்தரகுமாரன்சொல்லக் கேட்ட விசயகாண்டீபத்ரன் "ஆகா கா ! வென்று கையமத்தி கல்வியின் சாரமுஞ் செல்வியின் அபாரமும் கைப்படை வீரமும் விற்பன விவேகமும் கற்பனையாரமும் கருணையுதாரமும் காமன் மயமும் சேமன் செயமும் காரிய சித்தியும் கூரியபுத்தியுமுடைய காவலன் மகனே! உன் தங்கையாகிய உத்தரகுமாரத்திக்கு நான் சிலகாலம் நாட்டியம் பழக்கிவைத்தபடியால் அவளெனக்குப் பெண்ணென்று நீ யிப்போது கொண்ட நினைப்பை நீக்கிவிடு. அல்லது உன்னிஷ்டப்படிக்குத் தப்பாமல் உறவுகலக்கவேண்டுமானால் நன்னலம் நற்குணம் வாய்ந்த உனக்கிளையவள் பொன்னிலமுதலிய மன்னவர் புகழும் பேர்படைத்த என் மைந்தன் வாளபிமன்னனுக்கு உரியவளாகு'' மென்றான்.

இப்படிக்கு அற்புதமாய் விளம்பிய பற்குனன் மொழியைக் கேட்டு அவ்விடத்திலிருந்த சாத்திரசம்பன்னருடன் தருமராசன் விராடராசன் முதலியபேரும் ததாஸ்துவென்று சம்பிரமங்கொண்டாடினார்கள். உடனே விராடபூபதியானவன் கலியாண முரசவாத்திய முழக்கிவைத்து பந்து மித்திரபார்த்திபர் தமக்கெல்லாம் பாண்டவர்கள் விராடபுரத்திலிருக்கின்றார்களென்று ஓலைகளெழுதி தூதர் வசத்திலனுப்பி யறிக்கையிட்டான்.

மேகவண்ணனை கண்ணனும் அவரண்ணனும் வருகின்றார்களென்று தூதுவராற் கேள்விப்பட்டு, சோக நீங்கிச் சுகம்பெற்றிருந்த பாண்டவர்களும் விராடராசனும் வேதநாயகனைக் காணவேண்டுமென்று எதிர்கொண்டு சென்று கண்டு இருவர்தேகமும் ஒன்றென்று சொல்லும்படியாய் இறுகத்தழுவியணைத்து ஆகாயமளாவிய சிகர கோபுரஞ்செறிந்த பேரவையி லழைத்துவந்த பலராமர் சாத்தகி

யாதவகுமாரன் முதலிய பேர்கட்கும் அரவணைப்பள்ளி நீங்கிய ஆதிமத்தியாந்த ரகிதனோடு வந்த பெரியோர முதலிய உரியோர் எவர்க்கும் தகுதியாகிய சன்மானமும் ஆசனமும் வெகுமான மும் கொடுத்துப் பிரிய வசனங்கள் பேசிக்கொண்டார்கள். மந்திரி பிரதானியர் சிலரும் வந்தவர் யாதவர் முந்தினா பலரும் மரியாதை குறையாமல் வணங்கி நின்றார்கள். சுபத்திராதேவியும் யாதவஸ்திரீக ளும் ஸ்ரீ கிருஷ்ணருடைய அஷ்டபாரியர்களும் தேவகி தேவியார் ரோகணிதேவியார் மற்றுமுள்ள தாய்மாரும் திரௌபதாதேவி யிருந்த அந்தப்புரம் போய்ச்சேர்ந்து, சகலவித மரியாதையுடன் உப சாரமும் பெற்று தனதுபாராட்டி சுபங்கொண்டாடி யிருந்தார்கள்.

அப்பால் அபிமன்னனெருங்கி தந்தையர்தம்மை வணங்கி பாஞ் சாலியைப்பணிந்து மாஞ்சோலைக்குயில்கூவும் வளனுடைய மச்ச நாடனுக்கும் வந்தனந் தந்தான். அவர்களியாவரும் ஆலிங்கனம்பண் ணி ஆசீர்வதித்து அதிசயமடைய ஆண்மிக்கையுடையபாண்டவர் பக் கத்தில் இளஞ்சிங்கம் வீற்றிருக்குந்தன்மைபோல் இருக்கச்செய்தார் கள். அப்பொழுது அந்தப்பிள்ளையைப் பெற்றவர்கள்கண்டு மிகவு மகிழ்ந்து வியப்புடன் புகழ்ந்து நயந்து வியந்து பூர்வஞ்செய்த புண்ணியபலமே பிள்ளையாகப்பிறந்ததென்று கொள்ளை கொள்ளை யாய்க் கொண்டாடிக்கொண்டிருக்கும் பொழுது, தருமசொரூப முள்ள தருமராசன் விடாத கடாக்ஷவீக்ஷண்யப் பார்வையால் வீரப் பிரதாபத்தோள் பூரித்த அபிமன்னனை நோக்கி திரமானவார்த்தை களைப்பேசி சொல்லுக்குச்சொல் சாத்திரயுக்தமாய்ச் சொல்லுந் துணிவைத்தேர்ந்து ஆசைமேலிடச் சிறந்து அகமகிழ்ந்திருந்தார்.

இவ்விதமாகப் பெரியதந்தையினிடத்திற் பேசிய அபிமன்ன னும் மருமகன்றிறத்தால் மாமனாகப்போகிற விராடராசனும் மைத் துனனாகிய உத்தரகுமாரனும் சுவேதன்முதல் மற்றுள்ளோரும் சுதேக்ஷணாதேவியும் கண்களிகூர்ந்து செவிகுளிர்ந்து முகமலர்ந்து அகமகிழ்ந்து ஆநந்தங்கொண்டாடினார்கள்.

இப்படியாக விருக்கின்ற சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவானு டைய திருவருட்பயனால் விராடபுரம் வந்து சேர்ந்த சுவேதனென் பவன் தன்தந்தையான விராடனையும் சிறிய தந்தைமார்களையும் தரும ராசன் முதலிய பேர்களையும் தாயாகிய சுதேக்ஷணையையும் பணிந்

தான் இவர்களெல்லோரும் ஏந்திமுத்தமிட்டார்கள். மச்சராசனொரு வனும் இச்சைமேலிட்டெழுந்து மைந்தன்பேரில் விழுந்து விவேகக்கொழுந்தேயென்று மார்போடணைத்துப் புயத்துடன் புயமொத்தி முகத்துடன் முகஞ்சேர்த்து இருகரத்தையும் எடுத்துப்பிடித்து உச்சிமோந்து கருத்தினுறக்களித்துக் கண்ணருள்தழைத்துச் சில மொழி புகன்றான்.

அப்பா! ஐயா! என்கண்மணியே! நீ எந்தவிடத்திலிருந்தாய், தந்தவண்ணனுக்கிளைய நந்தகுமாரன் உன்னையெங்கே கண்டார், இவருடன் கூடி நீயெப்படி வந்தாய், எவ்விடத்தில் நீங்களிருவருஞ் சந்தித்தீர்கள், இது எனக்கு நல்லகாலம், என் மனங்குளிரச் சொல்லையா என்சுதனாகிய சுவேதனே! யென்று விராடராசன் கேட்கக் கடல் நிறவண்ணக்கண்ணன் சொல்லத்தொடங்கினார்.

ஓ! விராடபூபதியே! உமது குமாரன் தவவேடம்பூண்டு அருந்தவமிருந்து சிவனருட்பொருந்திப் பெருந்திறற்படைகளும் பெருமையும் பெற்றான். இத்தன்மையாகச் சித்திபெற்றிருக்கிற திடத்தை யானறிந்து இந்தவுத்தமனை யழைத்துக்கொண்டு துவாரகைக்கு வந்து எனக்கு அசாத்தியமாயிருந்த சத்துருக்களையெல்லாம் இவனாலொழித்துவிட்டு இவனுக்கு விருந்து முதலிய வுபசாரஞ்செய்து என்னிடத்தில் வைத்துக்கொண்டிருக்கும்போது, நீங்களெழுதியனுப்பிய ஓலையைக்கண்டு மச்சநாடடைந்தோம் பூபாலவென்று கோபாலன் சொல்ல அச்சொற்கேட்ட விராடராசன் பட்சமேலிட்டு மகன் பக்கத்திலிருந்து தவம்புரியப்போனது முதல் வந்ததுவரையிலும் சாங்கோபாங்கமாக சேமலாபங்களை விசாரித்து, பகைவரென்னும் யானைகளைக்கொல்லுகின்ற சிங்கம் போன்ற பாண்டவருடன் யாவரையும் பணிந்து, சபாமண்டபத்திற் பொருந்தியிருந்தார்கள். விராடராசனுடைய மற்றைப்பிள்ளைகள் யாவரும் தமயனை சுவேதனைச் சாஷ்டாங்கமாகத் தொழுது அவனாலுபசரிக்கப்பட்டுத் தருக்கியிருந்தார்கள். அன்னையாகிய சுதேட்சணாதேவியும் தன்னைப் பணிந்த சுவேதனை வாழ்த்தி பொன்னுக்கிணையாகிய புத்திரியின் கண்ணுக்கினிமையான கணவனைப்பார்த்துக் களிப்போடிருந்தாள்.

அதுவேளையில் பாஞ்சாலதேச ராசனும் சோமகாளும் அவர்கட்குரிய நால்வகைச்சேனைகளும் இளம்பஞ்சபாண்டவர்களும் திர

டஷத்தூய்மன் முதலாகியபேரும் வந்தார்கள். அவர்களை விராடராசனும் பாண்டவர்களும் எதிர்சென்று கண்டு ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு தகுந்தமரியாதைகளுடன் புகழ்ந்து சபாமண்டபஞ் சேர்ந்திருந்தார்கள்.

இப்பால் குந்தி போசகுல ராசர்களும் மத்திர தேசாதிபர்களும் புத்திரவர்க்கங்களும் மித்திரவேந்தர்களும் பாண்டிநாட்டரசரும் சோழராசரும் சேரபூபதியும் மாகர தேசாதிபர்களும் இன்னும் பல பல தேசத்திறைவரும் வன்னவன்ன வாகனமேறி வந்தார்கள். அன்னவர்க்கெல்லாம் மன்னவர் வரிசையிற் சொன்னவண்ணங் குன்னமில்லாம லுபசரித்து ஆசனத்தி லமர்த்தினார்கள்.

வந்த வேந்தர்கள் சிந்தையுவந்து பாண்டவர்களைப்பார்த்து அந்தோ! நீங்கள் பன்னிரண்டுவருடங் காட்டில் வாசம்பண்ணும் படியாயும் நாங்க ளுங்களைப் பிரிந்திருக்கும்படியாயு நேரிட்ட தல்லவா! ஆ கா! வினையேயென்று மனநொந்தார்கள். தம்மைக்குறித்து வெம்மையடைகின்ற தராதிபர்களைத் தருமராசனோக்கி, சகலசாத்திரங்களுங்கற்ற சம்பன்னர்களே! மேல்வினை யெவரையுமீற்றி விடாதே. மேதினியிற்பிறந்த வேதனாலும் வினைக்குப்புறம்பாய் மீளப்போகாதே. ஆகையால், நடந்துபோன காரியத்தைப்பற்றி விசனப்படுவதி லாப மொன்றுமில்லை. இனி நடக்கவேண்டிய காரியங்களை நன்காராய வேண்டியதென்று சாந்தமாகப்பேசி, ஓ தரணீஸ்வரர்களே! தாமரைச்சேக்கையிற் படுத்த அம்ஸங்கள் அம்மலர்த்தேன்களானவைந்த இறகுகளை வானத்தில் விரித்துலரச்செய்கின்ற வண்மையும் தானத்தைப்பொழியுந் தந்தாவளத் திண்மையும் நீர்வளநில வள நன்மையுமுடைய இந்த மச்சராசன் வசந்தகால மன்மதன் போன்ற மகாராசன். இவருடைய நாட்டிற்கு நாங்களெப்போது வந்தோமோ அப்போதே காட்டிற்றிரிந்த வருத்தமும் எங்களை மாட்டிவருத்திய தீவினைப்பொருத்தமுங் கேட்டையடைந்து போய் விட்டது. இந்த அன்பருடைய பேருதவியால் துன்பகன்றிருந்தோம். முன்பு நான் மாட்டிக்கொண்ட தெவ்வாறென்னில், சுர லயை பேதமில்லாத ச ரி க ம ப த நி யென்னும் சப்த சுரதாதுடன் சேர்ந்த குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் இவைமுதலிய ஏழிசைப்பாடலுக்கு விரும்பிவந்துருகிய அசுணப்பட்சிகளானவை

பறையடியோசைகேட்டு சிறையடியாதயர்ந்து கைப்படுமோறுபோல் விண்ணுக்கிறைவனெனப் போன்றமண்ணுக்கொருவனெனவாண்ட திரிதராட்டிர மகாராசனென்னும் எமது பெரியதந்தையின் வார்த்தையால் மயங்கித் துரியோதனன் சகுனி துச்சாதனன் கன்னன் இவர்கள் கூடியெண்ணிய வஞ்சனையி லகப்பட்டு மாய்ந்தவாறு போற் றேய்ந்துவருந்தினேன். இனி நான் செய்யவேண்டிய காரியமென்னை ? நீங்களிருவரும் என்னைக்காக்கும்படிக்கு கண்ணுக்கிமைபோற் கலந்திருக்கின்றீர்கள். உங்கள் சித்தம் என் பாக்கியமென்று மெத்தவருந்தியுரைத்த உத்தமன் சொல்லைக்கேட்ட கொற்றவர் பலரும் பதைபதைத்து, இப்போ திவ்விடத்திற் சேர்ந்திருக்கின்றநாமெல்லோரும் இதுவேபயணமாகப் புறப்பட்டு இன்றைக்கே சண்டைவிளைத்துத் துரியோதனன் மண்டையோலையைக் கிழித்து அவனுக்குத் துணைவந்தவர்களைக்கொன்று கழித்து ஜெயஞ்ஜெயமென்ன வருவோம் வாருமென்று தருமநந்தனன் கருத்திற்குப் பொருத்தமாக வற்புறுத்திச் சொன்னார்கள்.

இவ்வாறு மன்னர்மன்னர்கள் பின்னருருமல் முன்னிட்டுரைத்த மூர்த்தண்ய மொழியை விராடர்கோன் கேட்டுச் சபையை விட்டெழுந்து சாஷ்டாங்கமாக விழுந்து கோபாலகிருஷ்ணனைச்சிந்தித்து இருகரங்குவித்து வந்தித்து தான் சிந்தித்திருந்ததைத் தெரிவித்துக் கொண்டான். அதாவது, இந்த நிலங்காக்கு மிறைவர்காள் கேண்மின் ! மலைகள் மதித்துத்துதித்து வணங்கப் பூரித்தபுயமும் நீதிசாத்திர நெறிமுறைப்பயனும் சொற்பொருணயமு விற்பன வியனும் சௌந்தரியமும் கூர்வேல்தாங்குந் தைரியமுமுடைய பாண்டவசுபுத்திரனென்னும் அபிமன்னராசனுக்கும் என் தவக்கொழுந்தாகிய உத்தரையாட்கும் கல்யாணவைபவம் கண்டருளிய பிற்பாடு, வாளைகள் பாயக் கமுகம்பாளைகள் சாய வனிதையரூடி மகிழ்நருங்கூடி விளையாடும் வளனுடைய குருநாட்டைச் சண்டையிட்டு வாங்கப்புறப்படுவோம். அதுவரையில் நீவி ரியாவரு மன்னிக்கவேண்டும். மேலும் மாயனுக்கு மருமகனாகவாய்த்த வாளபிமன்னன் எனக்கு மருமகனாக வாய்க்கின்றமையாற் பற்பல தேசாதிபர்கள் ராசாதிபர்கள் வரும்படிக்கு முற்பிறப்பிற்செய்ததவம் இப்பிறப்பிற் கைவல்லியமாயிற்றென்று சிறப்புற்றேன். மாலைதாங்கிய வன்புயமோங்கிய மன்னவர்களே ! சீக்கிரத்தில் முகூர்த்தம் நடக்கும்படிக்குச் செலவு கொடுத்

தருளவேண்டுமென்று சந்தனபாளித புஷ்பதாம்பூல பலாதிகளுந் தட்டுத்தட்டாய் வைத்து முட்டுப்பாடில்லாமல் கைகட்டிக்கொண்டு விராடராசன் கேட்டான். அதன்பேரிற் சகலருஞ் சம்பதித்துத் தருமராசனது தயைப்பார்வையை நோக்கி அவ்வாறு நடத்துவதே அதிகஸ்ய அதிகபலமென்றார்கள்.

---

## தந்திரம்.

உலகத்தில் முன்னுக்கு வருவதற்கு அறிவினும் தந்திரமே அதிக முக்கியமாயிருக்கிறது. ஆனால் அது இயற்கையிலமையப் பெறாதவருக்கு எளிதிற் சித்தியாகிறதில்லை. ஆயினும் பிறராற் பெரும்பாலும் விரும்பப்படும் விஷயங்களை நன்றாய்க் கவனிப்பதனால் அஃது ஒருவாறு சித்தியாகும்.

பிறருக்குச் சந்தோஷம் கொடுக்கக்கூடிய ஒருசமயத்தையாவது தவறவிடக்கூடாது. எல்லாரையும் உபசரிக்கவேண்டும். மரியாதையானது செலவின்றிக் கிடைக்கிறதாயும் மற்றெல்லாவற்றையும் விலைக்குவாங்கும் திறனுடையதாயுமிருக்கிறதென்று மான்டேக் மாதரசி (Lady Montague) கூறினாள். உண்மையாகவே, எத்துணைப் பணங்கொடுப்பினும் கொள்ளற்கரிய பலவற்றையும் மரியாதையாற் கொள்ளலாம். ஆகையால் நாம் சந்திக்கும் ஒவ்வொருவரையும் வசியஞ்செய்யவேண்டும். அவர்கள் தயவைச் சம்பாதித்தால் சகல மனிதருடைய இருதயங்களும் பொக்கிஷங்களும் உங்களுக்குச் சொந்தமாகின்றனவென்று பர்லிபிரபு (Lord Burleigh) எலிஸபெத் (Elizabeth) மகாராணியவர்கட்குச் சொன்னார்.

பலத்தால் முடியாதகாரியம் தந்திரத்தாற் பெரும்பான்மையும் கைகூடுகின்றது. அதற்கு மேற்கோளாகச் சூரியனையும் காற்றையும் பற்றிய ஒருபழமையான கட்டுக்கதையை லிலி (Lily) எடுத்துச் சொல்லுகிறார். "தம்முள் எவர் வலியரெனச் சூரியனுக்கும் வாயுவுக்கும் நடந்த சம்வாதம் அழகாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு கனவான் வெளியில் நடந்துகொண்டிருக்கும்பொழுது காற்றானது அவருடைய மேலங்கியைப் பறக்க அடிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு மிகுந்த பலத்தோடு சப்தித்துக்கொண்டு அங்கியைக் கழ

ற்றுவதற்காகச் சுழன்றடித்தது. இதனால் அங்கியானது முன்னிலும் உறுதியாக அவர் முதுகில் ஒட்டிக்கொண்டது. காற்று எத்துணை அதிகரித்ததோ அங்கியும் அத்துணை உறுதியாய் அவர் உடம்பைப் பற்றிக்கொண்டது. பின்பு சூரியன் தன்னுடைய உஷ்ணமான கிரணங்களைப்பரப்பி அக்கனவானை வாட்டவே அவர் வெயிலாற் களைப்படைந்து அங்கியோடு தான் அணிந்திருந்த சட்டையையும் கழற்றிவிட்டார். அதைப்பார்த்த வாயு சூரியனே வெற்றிபெற்றதாக ஒப்புக்கொண்டது."

மனிதர்களை முன்னால் துரத்துவதினும் பின்தொடரச்செய்தல் எளிதென்றும் எந்தவகையிலும் பயமுறுத்துவதினும் வழிகாட்டல் மிகவும் நன்மை என்றும் எப்பொழுதும் ஞாபகமிருக்கவேண்டும். "வேண்டுவன பெறுவதிற் கத்திமுனையாற் கட்டாயஞ்செய்வதினும் புன்னகையா லிணக்குவதே மேன்மை."

அரசநீதியிலும் "அளவுக்கு மிஞ்சாது அரசுபுரிதல்" ஒரு நல்ல பிரமாணம்.

நாம் பழகநேரிடும் பலரும் நம்மிடம் நம்பிக்கைகொள்ளவும் அவ்வகையான நம்பிக்கைக்கு நாம் தகுந்த பாத்திரராகவும் முயலவேண்டும். திறமையினும் யோக்கியதையே அனேகருடைய செல்வாக்குக்குக் காரணமாயிருக்கிறது. உயர்ந்த உத்தியோகம் எதுவுமின்றி மகாசன சபைகளில் அதியாச்சரியமான செல்வாக்குடையராயிருந்த பிரான்ஸிஸ் ஹார்னர் (Francis Horner) உடைய முகத்திற் பத்துக்கற்பனைகளும் சொலித்துக்கொண்டிருந்தன வென்று ஸிட்னி ஸிமித் (Sydney Smith) சொல்லிக்கொண்டிருந்தார்.

நீதியோடும் மதியோடும் நம்மால் இயன்றமட்டும் மற்றவர்களுடைய விருப்புகளுக் கிணங்கிநடக்க முயலவேண்டும்; ஆனால் அவசியம் நேர்ந்தபோது "அன்று" என்று அச்சமின்றிச் சொல்லவும் வேண்டும்.

"ஆம்" என அகமலர்ச்சியோடு ஒவ்வொருவரும் சொல்லுவதில்லையாயினும் எவரும் "ஆம்" எனச் சொல்லக்கூடும்; ஆனால் "அன்று" எனச்சொல்லுவது அதனினும் மிகுந்த வருத்தமானகாரியம். அவ்வாறு சொல்ல இயலாது அனேகர் அதோகதியடைந்திருக்

3396

கிறுர்கள். ஆசியா மைனர் (Asia Minor) தேசத்துச் சனங்கள் "அன்று" என்ற ஒரு பதத்தை உச்சரிக்க ஆற்றலில்லாதுபோன ஒரே காரணத்தால் அடிமைகளாயினரென்றும், நம்முடைய நடவடிக்கைகளில் "அன்று" என்று சொல்வதவசியமாயின் அதை அகமலர்ச்சியோடு சொல்லவேண்டுவது கொஞ்சமேனும் அவசியத்திற் குறைந்ததன்றென்றும், புளூட்டார்க் (Plutarch) சொல்லுகிறுர். ஏதேனும் ஒரு காரியவிஷயமாய் நம்முடன் சம்பந்தப்பட்டிருக்கும் ஒவ்வொருவரும் நம்மோடு கூட்டாளியாயிருப்பதில் ஆனந்தமிருக்கிறதென்றுணர்ந்து நம்மிடம் அதேவிஷயமாய் அடிக்கடி வந்துபோக ஆசைகொள்ளும்படி நாம் எப்பொழுதும் பிரயாசைப்படவேண்டும். தொழிலானது அபிப்பிராயத்தையும் இஷ்டத்தையும் அனேகர் உத்தேசிக்கிறதைவிட அதிகமாய்த் தழுவியிருக்கிறது. ஒவ்வொருவரும் அன்போடு உபசரிக்கப்பட விரும்புகிறுர்கள்; உள்ள நெகிழ்ச்சியும் அகமலர்ச்சியும் கூடிய நடையானது நூற்றுக்கரை வீதம் பணம் கொடுப்பதைப்பார்க்கிலும் ஒரு ஊதியத்தைப் பெரும்பாலும் அதிக உறுதியாய்ப் பிடிக்கும் வல்லமையுடையது.

ஆசையுண்டானுற் சாதாரணமாய் எவரும் சந்தோஷமுண்டு பண்ணலாம். "சந்தோஷிப்பிக்க விரும்புவதே அதைச் செய்து முடிப்பதிற் குறைந்தபட்சம் பாதிவேலையாகிறது." ஆனுலவ்விதம் செய்யவிருப்பமில்லாத எவரும் பிறரைச் சந்தோஷப்படுத்தமாட்டார். இப்பெரும்பேற்றை இளமையிற் சம்பாதிக்காவிடிற் பிற்காலத்திட்டுவது மிகவும் அருமையெனக் காண்போம். அனேகருக்கு அவர்களது உயர்ந்ததிறமையினும் உபசாரகுணத்தாலேயே வெளிப்படையான மேன்மை கிடைத்திருக்கிறது. ஆனுல் நலல மனமும் பட்சமான எண்ணங்களுங்கொண்டு சிறந்த அனேகர் தங்கள் முரட்டுத்தனத்தால் பலரை விரோதிகளாக்குகிறுர்கள். மேலும் பிறருக்குச் சந்தோஷங்கொடுக்கும் சக்தி நம்மிடத்திருப்பதே நம்மைக் களிப்பிக்கின்றது. இதன் உண்மையைப் பரீட்சித்தால் நாம் எண்ணியபடியே இருக்கக் காண்போம்.

சாக்கிரதையாகவும் அமைதியாகவும் இருக்கவேண்டும். அன்புள்ள இருதயத்தைப்போல அமைதியுள்ள மூளையும் அவசியம். ஆபத்தும் அவஸ்தையுமான காலங்களில் நம்மைப் பத்திரமாய் காப்பாற்

றுகிற ஓர்வும் அமைதியும் எந்த நடவடிக்கையிலும் நமக்கு விலை மதிக்கமுடியாத துணைவர்கள்.

நம்மிலும் சமர்த்திற் குறைந்தவர்களை நாம் காணும்போது அவர்களை அவமதிக்க நமக்கு யாதொரு பாத்தியதையுமில்லை. சுதந்தரமாய்ப் பெருநிதியைப் பெறுவதினும் அவ்வண்ணம் பெருஞ்சமர்த்தைப்பெறுவது எவ்வகையானும் அதிக மேம்பாடுடையதன்று. இரண்டிலும் சரியான பிரயோகத்தால் தான் கீர்த்தி உண்டாகிறது. மேலும் அனேகர் வெளிப்படையாய்த் தோன்றுவதைப் பார்க்கிலும் வாஸ்தவத்தில் அதிக சமர்த்துள்ளவர்களா யிருக்கிறார்கள். மனிதனைப்பார்க்கிலும் புத்தகங்களை மிகவும் இலகுவாய்ப் படிக்கலாம். குணத்தைப்படிப்பதில் கண்கள் பேருதவி செய்கின்றன. "கண்ணொன்றுகாட்டி நாவொன்றுசொல்லில் அனுபோகசாலிகள் முன்னதையே நம்புவாாகள்."

மிகுந்த தயவுள்ளவர்களாக நடிப்பவர்களிடத்து அதிக நம்பிக்கை வைக்கக்கூடாது. புருஷருக்குப் புருஷரிடத்தும், ஸ்தரீகளுக்கு ஸ்திரீகளிடத்தும் முதற்பார்வையில் அன்பு தோன்றுவதில்லை. அனேகமாய் அன்னியனொ ஒருவன் அளவற்ற நன்மைசெய்வதாக நமக்கு வாக்களித்தால் அவன் வாக்கை முற்றும் நம்புதல்கூடாது. அவன் பொய்யனல்லாவிடினும் தான் எண்ணுவதிலும் ஒருவேளை அதிகமாய்ச் சொல்லுவான்; அல்லது அவனுக்கே நம்மாலாகவேண்டிய காரியமேதேனு மிருக்கும். ஆகையால் நடிப்புமாத்திரத்தாலொருவனை நண்பனெனவும் அற்பகாரணத்தா லெவனையும் பகைவனெனவும் நம்பக்கூடாது.

நாம் அறிவாற் சிறந்தவரெனத் தற்புகழ்ச்சி செய்கிறோம்; ஆனால் மனிதர்கள் எப்பொழுதும் அறிவின்வழி செல்பவரென்று கொள்வது பெரிதும் தவறான எண்ணம். நாம் அற்புதமான விபட்சமுடைய சிருஷ்டிகளாயிருக்கிறோம்; எத்துணை அறிவின்வழி செல்கின்றோமோ அத்துணை ஒருவேளை இன்னும் அதிகமாய் இச்சைவழி செல்கின்றோம். ஆதலால் விவகரித்து மனிதர்களிடத்தில் ஒருண்மையை நிலைநாட்டுவதினும் அவர்கள் தயவைப் பெறுவதே நமக்கு மிகுந்த அனுகூலமாகிறது. மேலும் இக்குணம் தனித்தனி மனிதனிடமிருப்பதுபோலவே மனிதசமூகங்களிலும் காணப்படுகிறது.

விவகாரம் பேசுதல் எப்பொழுதும் சிறிது கெடுதிபண்ணத்தக்கது. அதனால் அடிக்கடி விரோதமும் விபரீதமுமுண்டாகின்றன. நாம் ஒரு விவகாரத்தில் வெற்றிபெறுவதனால் ஒரு சிநேகனை இழக்கிறோம்; அதனால் நமக்குவரும் நஷ்டமே பெரிது. நாம் வாதஞ் செய்ய அவசியம் நேரிட்டால் பிறருடைய சித்தாந்தங்களை நம்மாலியன்ற அளவு ஒத்துக்கொண்டு இன்னவிஷயம் கவனிக்கப்படவில்லை என்று எடுத்துக்காட்ட முயலவேண்டும். ஒருதர்க்கத்தில் எப்பொழுது தோல்வியடைந்தோமென்று அபூர்வமாய்ச் சிலருக்கே தெரிகிறது; அவ்வாறு தெரிந்தகாலையும் அது அவர்களுக்கு வெறுப்பையே விளைவிக்கின்றது. மேலும் தோல்வியடைந்தோ மென்றுணர்ந்தோரெல்லோரும் வெற்றியடைந்த கட்சியில் நியாய மிருப்பதாய் உணருகிறதில்லை. எவரையும் விவகாரத்தால் வசப்படுத்த முயலுவதிற் பயனில்லையென்று சொல்வது அத்துணைக் குற்றமாகாது. நம்முடைய விவாதவிஷயங்களை இயன்றமட்டும் சுருங்கச்சொல்லி விளங்கவைத்து எதிரியின் திண்ணமான கோட்பாடுகளில் சந்தேகம் சனிக்கும்படி செய்துவிட்டால் இம்மட்டே நாம் எதிர்பார்க்கக்கூடியது. அதுவே நமக்கு முதல் லாபமாகிறது.

தனிப்படுத்திப்பார்க்கிற் சம்பாஷணையும் ஒருவித வித்தையாம். பேச அதிக சரக்குள்ளவர்கள் சிறந்த வாசாலகரல்லர். ஆயினும் டேக்கார்ட (Descartes) அல்லது ஸர் ஐஸக் நியூட்டன் (Sir Isaac Newton) இவர்களைப்பார்க்கிலும் எந்தக்காலாள் தலைவனும் அதிக சரசியாயிருப்பானென்று செஸ்டர்பீல்டு பிரபு (Lord Chesterfield) சொன்னது அவ்வளவு உசிதமன்று.

நன்றாய்ப் பேசுவதிலுள்ள வருத்தம் நன்றாய்க் கவனிப்பதிலுமிருக்கிறதென்று சொல்லமுடியாது; ஆனாற் பின்னையது எத்துணையும் எளிதான காரியமன்று; ஏறக்குறைய முந்தியதைப்போல முக்கியமானதுதான். நாம் கேட்கும் விஷயங்களையெல்லாம் நுண்மையாய் ஆராய்வோன் போலாவது நியாயவான் போலாவதுகேட்கக்கூடாது; நமதபிப்பிராயத்தை அடக்கி நம்மொடு பேசுவோர் மனக்கருத்தைத் தழுவிநடக்க முயலவேண்டும். நாம்பட்சமுடையராயும் ஒத்துணருந் தன்மையுடையராயு மிருப்பின் அனேகர் நம்மிடம் பலகாலும் ஆலோசிக்க வருவார்கள்; பலருக்கும் மனவருத்தமான

காலங்களில் நாம் தேறுதல் கொடுத்து உதவி புரிந்திருக்கிறோமெ ன்று நமக்கும் ஒரு திருப்தி யுண்டு.

நம்முடைய இளமைப் பருவத்தில் எவரும் நம்மை அதிகமாய்க் கவனிப்பார்களென்று எண்ணக்கூடாது. அப்பொழுது நாம் மௌனமாயிருந்து அமைதியாய்க் கவனித்து நடக்கிறதைப்பார்த்து வர வேண்டியது நம் கடமை. விளையாடுவோரைப்பார்க்கிலும் பக்கத்தில் நின்று பார்ப்போர் அதன் சாரத்தை அதிகமாய்க் கிரகிப்பர் என்று ஒரு முதுமொழியுண்டு. பிறரால் நாம் கவனிக்கப்படாதிருக்கும் பொழுது நிகழ்கின்ற விஷயங்களைக் குறைந்தபட்சம் நாமும் அவர்களைப் போலவே கவனிக்கலாம். அதுவே அநேகமாய் மறைப்புமை இட்டது போலாம்.

அநேகருக்கு யோசனை செய்வது மிகவும் பிரியமில்லாத வேலையாயிருப்பதனுல் அவ்வருத்தத்தினின்று நீங்கும் பொருட்டு மனிதர் நம்மை நாம் மதிக்கிறபடியே நம்புகிறார்கள்.

நாமே நமக்குப் பகைவர்களை உண்டுபண்ணிக்கொள்ளக்கூடாது; அதைப்பார்க்கிலும் கெட்டகாரியம் நம்மாற் செய்யமுடியாது மூடனிடத்தில் அவனைப்போலவே பேசுதல் சரியன்று; அப்படிச் செய்வதனுல் நாமும் அவனைப்போலவே ஆகிறோம். குளிர்ந்த மறுமொழியானது கோபத்தை மாற்றிவிடுகிறதென்று ஞாபக மிருக்க வேண்டும்; ஆனுற் கோபமான மறுமொழிகூட இகழ்ச்சியைப்போல் அவ்வளவு மூடத்தன முள்ளதன்று. பத்துப்பேரில் ஒன்பதின்மர் வைதாலும் அடித்தாலும் பொறுத்துக்கொள்வார், ஆனுல் இகழ்ச்சியை மட்டும் பொருர். நாலுபேர் நகையாதிருக்கும் பொருட்டு அவர்கள் எதையும் மறப்பார்.

"மயக்கந்தீர்வதினும் மயக்கங்கொள்வதே அதிகசுகம்." டிராசிலஸ் (Trasilaus) என்ற ஆதன்ஸ் (Athens) நகரத்தான் பயித்தியங்கொண்டு பிரியஸ் (Piræus) துறைமுகத்திலுள்ள கப்பல்களெல்லாம் தன்னுடையனவென்று எண்ணிக்கொண்டிருந்தான். ஆனுல் அவனைக் கிறிட்டோ (Crito) வென்பவன் குணப்படுத்தியபொழுது தன் கப்பல்களெல்லாம் கொள்ளைபோய் விட்டனவென்று மிகவும் மனவருத்தப்பட்டான். செஸ்டர்பீல்டுபிரபு (Lord Chesterfield) கேலிக்காக ஒரு இஷ்டனை இழப்பது மூடத்தனமென்றும் அதுபோ



3391

லவே இருகட்சியிலுஞ்சேராத அன்னியனொருவனை வேடிக்கைக் காகப் பகைவனுக்குவது அதற்குச் சிறிதுங்குன்ருத தென்றும் சொல்லுகிருர்.

"அவர்கள் குலுங்கச்சிரித்ததனுல் என்னைப்பற்றிப் பேசினுர்க ளென்பது எனக்கு நிச்சயந்தான்" என்று ஸ்க்ரப்*(Scrub) சொன் னதுபோல், நம்மைத்தான் இகழ்ந்து நகைக்கிறதாக எவரையும் எளி தில் சந்தேகிக்கக்கூடாது. ஆனுல் நம்மை எவராவது வாஸ்தவத் தில் ஏளனம் செய்தால் அச்சமயத்தில் கோபங்கொள்ளாமலிருக்க முயலவேண்டும். நாமும் கூடச்சேர்ந்து சிரிக்கக்கூடுமானுல் அவர் கள் காரியம் தலைகீழாய்விடும்; நமக்கும் லாபமேயொழிய நஷ்ட மில்லை. தனக்கு இகழ்ச்சிவரினும் சந்தோஷப்படுகிற ஒருவனை எல்லாரும் விரும்புகிருர்கள். அது நிசந்தான், ஏனெனில் அவ னுக்கு நல்லகுணமும் நல்ல அறிவுமிருக்கிறதென்று காட்டுகிறது. நாமே நம்மை நிந்தித்தால் பிறர் நம்மை நிந்திக்கமாட்டார்.

நமதபிப்பிராயங்களில் நாம் தயிரியமாயிருக்கவேண்டும். சில தருணங்களில் நிந்தனையை எதிர்பார்க்கவேண்டும்; அதனுல் நமக்கு ஒன்றும் கெட்டுப்போகமாட்டாது. நாம் உள்ளபடி தோன்றுவதில் ஒரு குறைவுமில்லை. ஆனுல் இல்லாததை உள்ளதாக நடிப்பது மிகவும் குறைவு. ஏதோ ஒரு கற்பிதமான குறைபாட்டை நினைத்துச் சனங்கள் மனவருத்தமுற்றுக் கோபங்கொண்டு பலருடைய நட்பை இழக்கிருர்கள்.

நாம் கபடமில்லாத யோக்கியராயும் அடக்கமுடையராயுமிரு க்கவேண்டும். மற்றவர்கள் தங்களைப்பற்றி வேண்டியமட்டும் பேசிக் கொள்ளட்டும்; நாம் நம்மைப்பற்றியாவது நமக்காகவாவது நமக்கு விரோதமாயாவது அதிகமாய்ப் பேசக்கூடாது. தங்களுக்குப் பிரிய மிருப்பதனுல் அவர்கள் அவ்விதம் பேசுகிருர்கள்; நாம் கவனித்துக் கேட்டால் நம்மைப்பற்றியும் நல்லெண்ணங்கொள்வார்கள். ஒருவன் மூடன் அல்லது மடையனென்று நாம் கொள்ளுமெண்ணத்தை நம் முடைய கடமையாயிருந்தாலன்றி, எக்காலத்தும் நாம் அவனுக்கு வெளியிடக்கூடாது. நாம் அப்படிச்செய்தால் அவன் நம்மைப் பற்றிக் குற்றம் சொல்லத் தகுந்தகாரணமிருக்கிறது. நாம் கொ

* பிலுக்கர் தந்திர (*The Beaux Stratagem*) மென்ற நாடகத்தில் ஒரு நடன்.

ண்ட எண்ணம் பிசகாயிருக்கலாம்; அவனும் சிறிது நியாயத்தோடு நம்மைப்பற்றி அவ்விதமே எண்ணங்கொள்ளுவான்.

ஒரு தேசத்தாரை ஒருங்கே பழிக்கக்கூடாதென்று ஒருசமயத்தில் பர்க் (Burke) என்பவர் சொன்னார். அதேமாதிரியாக ஒரு வகுப்பாரை அல்லது தொழிலாளரை நிந்திப்பது மிகவும் அநீதமாகவும் புத்தியீனமாகவுமிருக்கிறது. பெரும்பான்மையும் மனிதர் மறப்பதும் மன்னிப்பதும் உண்டு. ஆனால் மனிதசமூகங்கள் ஒருகாலத்தும் அப்படிச் செய்வதில்லை. மேலும் மனிதர்கள் தனித்தனி ஒருவன்செய்த அவமதிப்பைப்பார்க்கிலும் கெடுதியை எளிதாய் மன்னிப்பார்கள். நாலுபேர் மத்தியில் நம்மைக் கழுதைபோல் விழிக்கச் செய்தானே என்பதிலும் மனம் கொதிக்கச்செய்கிற விஷயம் எதுவுமில்லை. சனங்களைக் கோபமூட்டுவதனாலும் பரிகாசஞ் செய்வதனாலும் நம்முடைய காரியம் பலிக்கமாட்டாது.

கீத்தி (Goethe) என்பவர் எக்கர்மான் (Eckermann) என்பவரோடுசெய்த சம்பாஷணைகளில் ஆங்கிலேயரைப்பற்றிப் புகழ்ந்து அவர்கள் ஒருசபையிற் பிரவேசித்து நடந்துகொள்வதைக் கவனிக்கும் ஒருவன் எவ்விடத்தும் அவர்களே எசமான்கள், உலகமெல்லாம் அவர்களுக்கே சொந்தமென்று எண்ணக்கூடிய தைரியமும் கம்பீரமும் அமைதியுமுள்ளவர்களென்று துதித்தார். அதற்கு எக்கர்மான் "செர்மானியஇளைஞரைப்பார்க்கிலும்ஆங்கிலேய வாலிபர் புத்தியிலாவது கல்வியிலாவது தயாளகுணத்திலாவது மேலானவர்களல்லரென்பது நிச்சய"மென்று பதில்விடுத்தார். உடனே "விவகாராம்ஸம் அஃதன்று. அவர்களுடைய மேன்மை அவ்விஷயங்களிலில்லை, மேலும் அஃது அவர்கள் பிறப்பிலும் அதிர்ஷ்டத்திலுமில்லை. அவர்கள் மேன்மை கடவுள் அவர்களுக்கு அமைத்த வமைப்பைப் பின்னமுறாது பற்றிக்கொள்ளும் தைரியம் பொருந்தியிருத்தலிலேயே நிலைபெறுகின்றது. அரை குறை என்பதே அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் பூரணமனிதர்கள். சிலவேளை அவர்கள் பூரணமூடர்களாயுமிருக்கிறார்கள் என்பதை நான் மனப்பூர்வமாய் ஒத்துக்கொள்ளுகிறேன், ஆனால் அந்தமட்டும் அதுகூடச் சிலாக்கியமாகவேயிருக்கிறது" என்று கீத்தி (Goethe) சொற்றனர்.

எந்த வேலையிலாவது கொண்டுமுடிக்குந் தொழிலிலாவது பொறுமை அவசியம். அனேகருக்கு நாம் அவர்கள் வேண்டியவொன்

றைக் கொடுப்பதினும் அவர்கள் சொல்லுங்கதைக்கு நாம் செவி கொடுப்பதே பிரியமாயிருக்கும். தடுத்துச்சொன்ன அனேகர் அவத்தைக் கிடமாயினர்.

நாம் கோபங்கொள்ளாதிருப்பது எல்லாவற்றிலுஞ் சிறந்தது. நமக்குக் கோபம் வந்தாலும் நாம் வாயை மூடிக்கொண்டு நம்முடைய கோபம் வெளிக்குத் தெரியாதிருக்க முயலவேண்டும். தவிரவும் கோபத்தை நீக்கி எதற்காகவும் கேடுசெய்யவேண்டுமென்ற எண்ணம் நம்மை அணுகாதிருக்கப் பார்க்கவேண்டும். ஏனெனில் "குளிர்ந்த வார்த்தை கோபத்தை ஓட்டும். சூடானவார்த்தை கோபத்தை மூட்டும்."

நம்மை விரும்பாவிடத்தில் நாம்போய்த் தலைநீட்டக் கூடாது. அஃதொழிய நமக்கிடம் எவ்வளவோ இருக்கிறது. "எனக்கு மூன்று ராச்சியங்களில்லையா? அவைகளை யெல்லாம் விட்டு நீ என் கண்ணிற்குறு பறக்கவேண்டும்" என்று ஈயைப்பார்த்து ஜேம்ஸ் (James) என்ற வாயன் மொழிந்தார்.

சிலர் தவறுபேசுவதிலும், நொந்தபுண்ணிற் கொம்பெடுத்திடிப்பதிலும், கலகமுண்டுபண்ணுவதிலும் இயற்கையிலேயே சாமர்த்தியவான்களாயிருக்கிறார்கள்.

மனிதர்களைப்பற்றிய அறிவைப்பார்க்கிலும் அதிக பிரயோசனமுள்ள சாத்திரம் எதுவுமில்லை. எவரை நம்பலாம் எவரை நம்பலாகாதென்பதோடு எத்துணை எவ்விஷயத்தில் நாம் அவர்களை நம்பக் கூடுமென்பதைப் புத்தியோடும் தீர்மானிக்க வல்லவராதற்கு அது மிகவும் முக்கியம். இது சாமானியத்திலாவதன்று. நம்முடனும் நம்கையின் கீழும் இருந்து வேலைசெய்வதற்குத் தகுந்தவர்களைத் தெரிந்தெடுப்பதற்கும், சதுரனைச் சதுரமான விடத்திலும் விருத்தனை விருத்தமானவிடத்திலும் வைத்து வேலைவாங்குவதற்கும் அச்சாத்திரவுணர்ச்சி சாலச்சிறந்தது.

நாம் ஒருவனைச் சந்தேகித்தால் அவனுக்கு வேலையிடக்கூடாது, வேலையிட்டால் சந்தேகிக்கக்கூடாது.

சந்தேகிகளினும் விசுவாசிகளே பெரும்பான்மையும் சரியாய் எண்ணுகிறார்கள்.

நம்பிக்கை முழுமையா யிருக்கவேண்டும் ; ஆனாற் கண்மூடித்தனமாயிருக்கக்கூடாது. மெர்லின் (Merlin) என்பவன் அதிவிவேகியாயினும் விவியன் (Vivien) என்பவள் தன்னை "முழுமையும் நம்பவேண்டும் அல்லது முழுமையும் நம்பவேண்டா" மென்று பரிந்து வேண்டிக்கொண்டதற்குப் புத்தியீனமாய் இணங்கி உயிரிழந்தான்.

எப்பொழுதும் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். நம்முடைய அந்தரங்கத்தை வெளியிடக்கூடாது. நம்முடைய அந்தரங்கத்தை நாமே காப்பாற்றாவிட்டால் நமக்காகப் பிறர் காப்பாற்றுவாரென்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. "ஒரு ஞானியின்வாய் அவன் இருதயத்திலிருக்கிறது; ஒரு மூடனுடைய இருதயம் அவன் வாயிலிருக்கிறது, ஏனெனில் அவன் அறிவதையும் எண்ணுவதையும் சொல்லுகிறான்."

நம்முடைய மூளைக்கு உழைப்பிடவேண்டும். நம்முடைய யுத்தியை அனுசரித்து நடக்கவேண்டும். நாம் அப்படிச்செய்வதனால் பிழையின்மை எய்தாவிடினும் நமது தவறுதல் சிறுபான்மைத்தாகும்.

பேச்சு வெள்ளிபோலிருக்கிறது அல்லது இருக்கவேண்டும்; ஆனால் மௌனமோ சொர்னம்போலுமிருக்கிறது.

பேசுதற்கு விஷயமெதுவு மில்லாதகாலத்தும் பேச்சின்மீதுள்ள ஆசைமட்டுங் காரணமாக அனேகர் பேசுகிறார்கள். பேசுவதில் நாவின் வேலையைப்பார்க்கிலும் மூளையின்வேலை யதிகமாயிருக்கவேண்டும். வெற்றுரை, அல்லது பேசவேண்டுமென்ற ஆசைமட்டுங் காரணமாகப்பேசுவது, நாம் முன்னுக்குவருவதை அனேகமாய்க் கெடுத்துவிடும். "அனேகர் பேச்சின்வெறியால் அங்குமிங்கும் தள்ளுண்டு முதலில் தாங்கள் உத்தேசித்தவற்றிற்கு முற்றும் வேறாயினவும்பின்பு ஏன் சொன்னோமென்று விசனப்படத்தக்கனவுமான விஷயங்களையாவது, நாவை அசைப்பதற்கன்றி பிறிதொரு நோக்கமுமில்லாமல் பலதவறான விஷயங்களையாவது பேசிவிடுகிறார்கள்.

இவ்விதக் குறும்போடுகூடின அபரிமிதமான பேச்சே அளவற்ற கேட்டிற்குந் தொல்லைக்குங் காரணமாகவிருக்கிறது. அது சுட்டிச் சொல்லப்பட்டவனிடத்துக் கோபத்தையுண்டாக்குகிறது;

ஏனையோரிடத்துக் கலகத்தையும் வேற்றுமையையும் விதைக்கிறது. சும்மா விட்டுவிட்டால் தானே அவிந்துபோகக் கூடிய தன்மையிற் புகைந்துகொண்டிருக்கும் அற்பமான மனவெரிச்சல்களையும் குற்றங்களையும் பெருஞ்சுவாலையாகக் கொளுத்திவிடுகிறது."

டெமராட்டஸ் (Demaratus) என்பவர் ஒருசபையில் பேசாதிருந்தபொழுது அவர் பேசாமைக்குக்காரணம் வார்த்தைகளின்மையோ அறிவின்மையோ வென்று கேட்டதற்கு "ஒரு மூடனால் மௌனம் சாதிக்க முடியாது" என்று விடை பகர்ந்ததாகப் புளூட்டார்க் (Plutarch) சொல்லுகிறார். "அவசரமாய்ப் பேசுகிறவனைப் பார்த்திருக்கிறாயா? அவனைப்பார்க்கிலும் ஒரு மூடனிடத்து அதிக நம்பிக்கை வைக்கலாம்" என்று சாலமன் (Solomon) சொன்னார்.

நம்முடைய மேன்மையை நாமே காட்டுவதற்கு ஒருபொழுதும் எத்தனிக்கக்கூடாது. நம்மிற் சிறியரொன உணரும்படி செய்வதினும் மனிதனை அதிகமாய்க் கோபமூட்டுவது எதுவுமில்லை.

நாம் சொல்லுவதே சரியென்று சாதிக்கக்கூடாது. நமக்கு எவ்வளவு நிச்சயமிருப்பினும் நாம் தவறி இருக்கலாம். ஞாபகசக்தியானது நம்மிடத்தில் அற்புதமான குறும்புகள்செய்து விளையாடுகிறது, செவியுங்கண்ணும் சிலவேளை ஏமாறிப்போகின்றன. நாம் அன்போடு ஆதரிக்கும் கொள்கைகள்கூடப் பலமான அஸ்திபாரமில்லாமலிருக்கலாம், மேலும் நமது கொள்கை சரியாகவே இருந்தாலும் அபரிமிதமான நிச்சயத்தைப் பாராட்டாமலிருப்பதனால் நமக்கு என்றும் நஷ்டமாகாது.

செய்கையிலும் அதிக நிச்சயத்தை விரும்பக்கூடாது. ஒரு சமயத்தையாவது தவறவிடக்கூடாது. கைக்கெட்டினது வாய்க்கெட்டாது போவதும் உலகவனுபவம்.

காத்திருக்கும் வழியறிவாருக்குக் கருதியவெல்லாம் கைகூடும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தருணம்வந்தபொழுது தப்பாமற் பிடித்துக்கொள்ளவேண்டும். "எதுவும் வருங்காலத்து வேண்டாதவருக்கு வேண்டுங்காலத்து வாராது."

ஒரு சமயத்தைத் தவறவிட்டால் மற்றொரு சமயம் வராமலே இருக்கலாம். "மனிதரது காரியங்களில் ஓரலைவருகிறது. பெருக்கோடு அதிற் கிளம்புகிறவர்கள் அதிர்ஷ்டமென்னும் கரைசேரு

கிறுர்கள். அப்படிச் செய்யத்தவறுகிறவர்கள் மணல் மேட்டிலும் மனவருத்தத்திலும் தங்கள் பிரயாணத்தை முடிக்கிறுர்கள். அவ் விதமான கடற்பெருக்கில் நாம் இப்பொழுது மிதக்கிறோம். உள்ள பொழுது அந்த நீரோட்டத்துடன் செல்லவேண்டும். அன்றேல் நாம் நம்முயற்சிகளை இழந்து விடுவோம்.”

எச்சரிப்பாயிருக்க வேண்டுவது தான், ஆனுல் மிதமிஞ்சிய எச்சரிப்பு உதவாது. தவறுசெய்து விடுவோமே என்று மிகவும் அதிகமாய்ப் பயப்படக்கூடாது. “ஒருகாலத்துந் தவறுசெய்யாத வன் ஒன்றுமே செய்யமாட்டான்.”

நம் உடை எப்பொழுதும் சுத்தமாயிருக்கவேண்டும். நாம் உடுக்கவேண்டுவது இன்றியமையாததாதலின் டம்பமில்லாவிடினும் சுத்தமாய் உடுக்கவேண்டும். பெரும்பணம் பெற்றதும் அல்லது அதிகநேரம் பிடிப்பதுமான உடைவேண்டாம், ஆனுல் உடை நல்ல துணியாகவே இருக்கவேண்டும். ஆடையினுற் சனங்கள் ஆட்களை எத்துணை மதிக்கின்றுரென்பது மிகவும் ஆச்சரியமாக விருக்கிறது. நாம் பலனைச் சந்திக்கும்பொழுது அவர்களில் அனே கனை முக்கியமாய்த் தோற்றத்தினுலே மதிக்கிறோம். அங்ஙனமே அனேகர் தோற்றத்தைக்கொண்டே நம்மையும் மதிக்கிறுர்கள். கண்ணுங் காதும் இருதயத்தாட்கோல். நம்மைப் பார்ப்பவர் சதர் அறிபவர் ஒருவரே. மேலும் நாம் நடையுடையில் அசாக்கிரதை மேலிட்டுச் சீரற்றிருந்தால், மற்ற விஷயங்களிலு மப்படியே இருப் போமென்று திட்டமாய்ச் சொல்லக்கூடாத போதிலும் அந்தவனு மானம் அனேகமாய்ச் சரியாயிருக்கும்.

பலரும் கூடியிருக்கு மிடத்தில் நடையுடை உயர்ந்த சரசிகளு டைய நடையுடைபாவனைகளைக் கவனித்துக் கற்கவேண்டும். “பா வனையே மனிதனில் விசேடித்த பாகம், அழகிய வடிவமே அழியாத சிபாரிசுக் கடிதம்” என்ற பழமொழியிற் சிறிது தானப்பெருக்க மிருப்பினும் அதிக உண்மையு மிருக்கிறது. “ஒவ்வொருவரும் பாவனையை ஒரு பாகமாகவுஞ் சிலர் முழுப்பாகமாகவும் மதிக்கிறுர் கள்.”

யோக்கியமும் கல்வியும் தோன்றியநட்பை உறுதிப்படுத்துந் தகைமையவாயினும் முதலில் நட்பைச் சம்பாதிக்க வல்லனவல்ல.

நடை யுடை பாவனைகளினுற் கண்களைக்கவர்ந்து உயர்ந்த அமிர்த வசனத்தினுற் செவிகளுக்கும் இன்பம் ஊட்டினுல் இருதய கமலங்கள் மலர்ச்சியோடு நம்மை ஏற்றுக்கொள்ளுமென்று நிச்சயமாய், (எனக்கேற்க அனேகமாய்ச்) சொல்லலாம்" கண்களும் காதுகளும் எல்லாருக்குமுண்டு; ஆனுல் நல்ல புத்தி சிலருக்கே உண்டு. உலகம் ஒரு நாடகசாலை. நாம் அனைவரும் அதில் நடர்கள். ஒரு நாடகத்தின் கியாதி நடிக்கும் வகையை எத்துணை பொறுத்திருக்கிறதென்று யாவரும் அறிவர்.

செஸ்டர்பீல்டு (Chesterfield) தமது மகனைப்பற்றிப் பேசுமிடத்து இவ்வாறு சொல்லுகிருர். "தெரிந்த விடத்தெல்லாம் அவனை நேசிப்பதாகச் சொல்லுகிருர்கள். அதைப்பற்றி எனக்குச் சந்தோஷமே. ஆயினும் அவனைத் தெரியுமுன்னரே அவனிடத்து ஆசையும் பின்பு நேசமும் கொள்ளவேண்டுமென்று எனக்கு விருப்பம். நீங்கள் அவற்றை அற்ப விஷயங்களென நினைத்தால் மனித இயற்கையைப்பற்றி உங்கட்கு ஒன்றுமே தெரியாது. எவனுலும் அவ்விஷயங்களிற் போதியகவனம் செலுத்த முடியாது. அவைகளே எப்பொழுதும் அன்பை உண்டுபண்ணுகின்றன. அவ்வன்புநீரிலுண்டாகுங் குமிழியே பெரும்பான்மையும் அறிவாம்"

கலைமகளைப்போலவே இலக்குமியும் மனிதர்களுக்குக் கருணை புரிகின்ருள். "ஒருவன் திருடினுலும் குற்றமில்லை, மற்ருெருவன் வேலியெட்டிப் பார்த்தாலும் குற்றமாம்." ஏன் அப்படியென்னில் ஒருவன் இதமாய்த்திருடுவான், மற்றவன் ஆந்தைபோல் விழிப்பான். மன்மதனுக்குங் கலைமகனுக்குங்கூட இலட்சுமீகர மில்லாவிடிற் காரிய சித்திபெறும் வசியசக்தி இல்லையென்று ஹோரஸ் (Horace) சொல்லுகிருர்.

---

## சீவகாருணிய விலக்கியம்.

பசியினுல்வருந் துன்பத்தை நீக்குதலுங் கொலையினுல் வருந் துன்பத்தை நீக்குதலுஞ் சீவகாருணியத்திற்கு முக்கிய விலக்கியமாயிருக்கவு மிவ்விடத்திற் பசிநீக்குதலைமாத்திரம் வலியுறுத்துகின்ருும். ஏனெனில், ஒரு சீவன் பசியினுற் கொல்லப்படுமென்பதை

யறிந்து காருணியத்தாற் பசியை நீக்கி யுயிர்பிழைக்கும்படி செய்பவர் வேறுவகையா லுயிர்க்கொலை நேரிட்டா லதற்கிரங்கி யந்தக் கொலையால்வருந் துன்பத்தை நிவிர்த்திசெய்யாம லிரார்கள். கொலையால்வருந் துன்பத்தை நிவிர்த்திசெய்யாதவர்கள் பசியால்வருந்துன்பத்தையும் நிவிர்த்திசெய்விக்கத்தக்க தயையுடையவர்க ளாகார்கள். பசியால் வருங்கொலையை ஆகாரத்தாலன்றி வேறுவகையால் நிவிர்த்தி செய்விக்கப்படாது. பகை முதலியவற்றால் வருங் கொலையை யனேகவுபாயத்தில் நிவிர்த்திசெய்விக்கக் கூடும். ஆதலாற் கொலையால்வருந் துன்பத்தைப் பசியால்வருந் துன்பத்திலமைத்து அடிக்கடி வலியுறுத்துகின்றதென்றறியவேண்டும். அன்றியும் தாகத்தால் வருந்துகின்றவரும் பிணியால் வருந்துகின்றவரும் இச்சையால் வருந்துகின்றவரும் எளிமையால் வருந்துகின்றவரும் பயத்தால் வருந்துகின்றவரும் பசிவருத்த முண்டாகும்போது அவ்வவ்வருத்தங்களையெல்லாம் மறந்து பசிவருத்தம் மேற்பட்டு ஆகாரந்தேட முயற்சிசெய்கின்றார்கள். அன்றி யரசன் ஆக்கினையால் கொலைக்குற்றம்பற்றிக் கொலைசெய்ய விதிக்கப்பட்ட குற்றவாளியும் பசிவந்தபோது தன்பயத்தையுந் துன்பத்தையும் மறந்து அந்தப்பசியை மாற்றிக்கொள்ள முயலுகிறான். வயித்தியரால் தாமிறந்துவிடுவது நிச்சயமென்று தெரிந்துகொண்ட வியாதியாளரும் மூப்பாளரும் பசிவந்தபோது தமது துன்பத்தைமறந்து பசிநீக்க முயலுகின்றார்கள். பசிக்குத் தயவினா லாகாரங்கொடுக்கத் துணிந்தவன் வேறுவகையாற் சீவர்கள் இம்சைப்பட்டழிவதற்குச் சம்மதிக்கவேமாட்டான். ஆதலானும் பசியால்வருந் துன்பத்தை நிவிர்த்திசெய்விக்கிற தருமத்தை யடிக்கடி வலியுறுத்துவதென் றறியவேண்டும்.

பசியினால்வருங்கெடுதி எல்லாச்சீவர்களுக்குந் தேகநாசஞ் செய்வது உண்மையானால் எல்லாச்சீவர்கள் பசியையுமறிந்து நிவிர்த்தி செய்விக்கவேண்டும். அப்படி நிவிர்த்தி செய்விக்கத் தொடங்கிக் கடவுளாற் சிருட்டிக்கப்பட்ட தேவர் மனிதர் நரகர் மிருகம் பறவை ஊர்வன தாபரமென்கிற இவ்வெழுவகைப்பட்ட அளவிறந்த பேதங்களுடைய சீவர்களது பசியையறிந்து நீக்குவது அசாத்தியமாகுமேயென்னில், தேவர்கள் மனித சுதந்தரத்தினு மேற்பட்ட சுதந்தரமுடையவர்களாய்த் தங்களுக்கு நேரிட்ட பசியைத் தங்கள் முய

ற்சியினாலே மாற்றிக்கொள்ளத்தக்க வல்லபமுடையவர்க ளாதலா லவர்கள் பசியைக்குறித்து மற்றவர் யோசிப்பது அவசியமன் றென்றும், தேவர்களுக்குப் பசிநேர்ந்தால் துன்ப முண்டாகுமே யென்று இரங்குவதுமாத்திர மவசியமென்றும், நரகர் நாம் பசி யாற்றுவிக்கத்தக்க இடங்களில் இல்லாமல் வேறிடங்களிலிருக் கின்றபடியாலும் நரகர் பசிக்குத்தண்டனை பரிவாரங்களால் பசி யாற்றுவித்தலாலும் அந்நரகர் பசியைக்குறித்து யோசிப்பது அவ சியமன்றென்றும், அந்நரகரும் பசிநேரிடில் வருந்துவார்களே யெ ன்று இரங்குவது மாத்திர மவசியமென்றும், ஊழ்வகையினாற் சிறிதுஞ் சுதந்தரமில்லாத மரம் புல் முதலிய தாபரங்களில் மனிதர் தங்கள் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் முயற்சியால் விளைவிக் கின்ற தாபரவர்க்கங்களுக்குப் பசிகுறித்து நீர்விடுவது அவசியமென் றும், மற்றைத் தாபரவர்க்கங்களெல்லாம் அருள் நியதியின்படி ஆகா ரங்கொடுப்பிக்க உயிர்த்திருக்கின்றன வாதலால் அவைகளுக்கெல் லாம் பசியறிந்து ஆகாரங்கொடுப்பது நமதுசுதந்தரமன்று கடவுள் சுதந்தரமென்றும், அவை குறித்து யோசிப்பது அவசியமன்றென் றும், ஆகாரமில்லாவிடில் வருந்துமே யென்று இரங்குதல் மாத்திர மவசியமென்றும், நிலத்திலும் நீரிலும் ஊருகின்ற வுயிர்களுக்கும் பறவைகளுக்கும் மிருகங்களுக்கு மவ்வவற்றின் ஊழ்வகைக்குத் தக்கபடி யருள் நியதி யாகாரங்கொடுப்பிக்க வுண்டு பசியாறுகின்றன வென்றும், அவ்வவைகளுக்குத் தக்கவாகார மறிந்துகொடுப்பது நமது சுதந்தரமன்றுகடவுள் சுதந்தரமென்றும், அவைகளில் மனிதர் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் சுதந்தரத்தாற் சம்பாதித்துக் கொள்ளுகின்ற பசு எருது எருமைக்கடா ஆடு குதிரை முத லிய சில மிருகங்களுக்கு ஆகாரங்கொடுத்துப் பசியாற்றுத லவசிய மென்றும், மனிதர்களில் ஆண்மக்கள் பெண்மக்களென் றிருவகைப் பட்ட வெல்லாமனிதர்களுக்கும் பசியால்வரும் நஷ்டங்களுந் துன் பங்களும் பசிநிவிர்த்தியால் வரும் லாபங்களு மின்பங்களும் பொது வி லொருதன்மையா யிருத்தலாலும் பசியால்வரும் நஷ்டங்களையுந் துன்பங்களையு மனமுதலான அந்தக்கரண விருத்தியினாலும் கண் முதலான இந்திரியங்களாலும் மிகவு மறிந்துகொள்கின்ற வான்ம வறிவு ஒத்திருத்தலாலும், மனிதர்களுக்கு ஊழ்வகையினா லருள் நியதியின்படி கொடுப்பிக்கின்ற ஆகாரமட்டிற் சீவித்துத் தேகத்தை

வைத்திருக்கக் கூடாமையாலுந், தங்கள் முயற்சியாலும் அறிவாலுஞ் சுதந்தரத்தாலுஞ் சம்பாதிக்கின்ற வாகாமிய வாகாரத்தாலும் பசிநீக்கித் தேகத்தை வைத்திருக்கவேண்டுமாதலாலும், ஆகாமியத்தால் சம்பாதிக்கின்ற சீவசுதந்தரம் மனிதர்களுக்கு அருளால் மிகவுங் கொடுக்கப்பட்டபடியாலும், ஊழ்வகையா லாகாரம் நேரிடாமற் பசித்து வருந்தும்படியாகவு மந்தப்பசியை நீக்குநிமித்த மொருவனை யொருவ ரெதிர்பார்க்கும்படியாகவு மவர்தயவினு லாகாரங்கொடுத்து அப்பசியை நீக்கி யவனை நன்முயற்சியிற் செலுத்தவும் ஆகாரங் கொடுத்தவர் சித்திமுத்திகளை யடையவும் அருள் நியதியாக விதிக்கப்பட்டபடியாலும், மனிததேகம் மற்றைச் சீவதேகம்போல இலேசிலே எடுக்கக்கூடாததாதலாலும், மனிததேகத்தி லான்மா விளக்கமு மருள்விளக்கமும் மிகவும் விளங்குதலாலும், இந்த மனிததேகம்போனல் மீளவு மிந்தத்தேகம் வருமென்கிற நிச்சயமில்லாமையாலும், அந்த மனிததேகம் முத்தியின்பம் பெறுதற்கே யெடுத்த தேகமாதலாலும், இந்த மனிததேகமாத்திரமே முதற்சிருட்டி தொடங்கிக் கடவுள் சம்மதத்தாற் சிருட்டிக்கப்பட்ட வுயர்ந்த வறிவை யுடைய தேகமாதலாலும், மனிதர்கள் மாத்திரம் பசியாற்றுவிக்கின்ற சீவகாருணிய விதியைப் பொதுவி லவசிய முறுதியாகப்பிடிக்க வேண்டுமென்றும், கடவுள் விதித்திருக்கின்றபடியால் பசியை ஆகாரத்தினுல் நிவிர்த்தி செய்விக்கின்ற சீவகாருணியவொழுக்கம் மனிதர்களிடத்தே பெரும்பான்மை நடத்தவேண்டுமென் றறியவேண்டும்.

பசியினுல்வருந் துன்பத்தை நிவிர்த்தி செய்விப்பதில் வருமின்பம் பரவின்பமாகும். இம்மையில் போகசித்திகளாலும் யோகசித்திகளாலும் ஞானசித்திகளாலும் வருகின்ற இன்பங்களும் முடிவில் அநுபவிக்கப்படும் மோட்சவின்பமாகுமென் றறியவேண்டும்.

உண்பதற்கு ஆகாரமில்லாமற் சோர்வடைந்த சீவர்களுக்குச் சீவகாருணியத்தால் ஆகாரங்கொடுக்க வுண்டு பசிநீங்கிய தருணத்திலந்தச் சீவர்களுக்கு அகத்தினிடத்தும் முகத்தினிடத்துந் தழைந்து பொங்கித் ததும்புகின்ற வின்பமும் அது கண்டபோது கொடுத்தவர்களுக்கு அகத்திலும் முகத்திலு மவ்வாறுண்டாகின்ற வின்பமும் ஆன்மசகிதமாகிய கடவுள் காணத்திற் பூரணமாகத் தோன்று

இன்றவை யாகலாற் பரவின்பமென் றறியவேண்டும். வஸ்திரம் இடம் நிலம் பெண் பொருள் முதலானவைக ளில்லாமற் துன்பப்படுகின்றவர்க ளத்துன்பங்களை மனவெழுச்சியாற் சகித்துக்கொண்டு உயிர்தரித்துத் தங்களாற் செய்யக்கூடிய முயற்சியைச் செய்யக்கூடும். பசியினால் துன்பம் நேரிட்டபோது மனவெழுச்சியாலத்துன்பத்தைச் சகித்துக்கொள்ளக்கூடாது. சகிக்கத் தொடங்கிலுயிரிழந்து விடுவார்கள். பசிநேரிட்டபோது பெற்றவர்கள் பிள்ளைகளைவிற்றும் பிள்ளைகள் பெற்றவர்களைவிற்றும் மனைவியைப் புருடன் விற்றும் புருடனை மனைவி விற்றும் அந்தப்பசியினால் வருந் துன்பத்தை மாற்றிக்கொள்ளத் துணிவார்களென்றால் அன்னியமாகிய வீடு மாடு நிலம் உடைமை முதலியவைகளை விற்றுப் பசியை நீக்கிக்கொள்வார்க ளென்பது சொல்ல வேண்டுவதில்லை. உலக முழுதும் ஆளுகின்ற சக்கிரவர்த்தியாகிய அரசனும் பசி நேரிட்டபோது தனது அதிகார வுயர்ச்சி முழுதும் விட்டுத் தாழ்ந்த வார்த்தைகளாற் "பசிநேரிட்டது என்ன செய்வ" தென்று அருகிலிருக்கின்ற அமைச்சர்களிடத்துக் குறைசொல்லுகிறான். பகைவரா லெறியப்பட்டு மார்பிலுருவிய பாணத்தையுங் கையாற் பிடித்துக்கொண்டு எதிரிட்ட பகைவரையெல்லா மஞ்சாது ஒரு நிமிடத்தில் வெல்லத்தக்க சுத்தவீரரும் பசிநேரிட்டபோது சௌரியத்தை யிழந்து பசிக்கஞ்சிப் பக்கத்தி னின்றவனைப்பார்த்து "இளைப்புவருமே சண்டையெப்படிச்செய்வது" என்று முறையிடுகின்றார்கள். இவ்வுலகபோகங்களோடு இந்திரபோக முதலிய போகங்களையுந் துரும்பாக வெறுத்து முற்றுந் துறந்து அறிவையறிந் தநுபவம்விளங்கிய ஞானிகளும் இந்திரியங்களை யடக்கி மனோலயஞ்செய்து உண்மை நிட்டையிலிருக்கின்ற யோகிகளும் இறந்தோரையு மெழுப்பத்தக்க வளவிறந்த மகத்துவங்கள் விளங்கிய சித்தர்களும் முனிவர்களுந் தவசிகளும் பசிநேரிட்டபோது தங்கள் தங்களநுபவ லட்சியங்களைவிட்டு அடுத்த வூரை நோக்கிப் பலிக்குவருகின்றார்கள். பலிநேராதபோது நிலைகலங்குகின்றார்கள். சொற்பனத்தி லோரிழிவுவரினு மதுகுறித்து உயிர்விடத்தக்க மானிகளும் பசிநேரிட்டபோது சொல்லத்தகாதவரிடத்துஞ் சொல்லி மானங்குலைகின்றார்கள். சாதிசமய வாசாரங்களி லழுத்தமுடைய ஆசாரியர்களும் பசிவந்தபோது ஆசாரத்தை மறந்து ஆகாரத்திற்கு எதிர்பார்க்கின்றார்கள். கல்விகேள்

விகளில் நிரம்பி யறிதற்கரிய நுட்பங்களை யறிந்து செய்தற்கரிய செய்கைகளைச் செய்துமுடிக்க வல்லவர்களும் பசிநேரிட்டபோது அறிவுங் கருத்து மழிந்து தடுமாறுகின்றார்கள். இராப்பகல் தோன்றாது புணர்ச்சியின்பத்திற் பொங்குகின்ற காமிகளும் பசிநேரிட்டபோது புணர்ச்சியை மறந்து காமத்தைக் கசந்து கலங்குகின்றார்கள். நாமே பெரியர் நமக்குமேற் பெரிய ரில்லையென்று இறுமாப்படைகின்ற அகங்காரிகளும் பசிநேரிட்டபோது அகங்காரங் குலைந்து ஆகாரங் கொடுப்பவரைப் பெரியவராகப் புகழ்கின்றார்கள். ஒருவகைக்கர்ரியங்களி லனேகவகைகளாக வுபசரிக்கச் செய்கின்ற டம்பர்களும் பசிநேரிட்டபோது டம்பத்தை யிழந்து மயங்குகின்றார்கள். இவரிவர் இப்படி இப்படியானா லொருவகையாகாரமு மில்லாத ஏழைகள் பசிநேரிட்டபோது என்னபாடு படார்கள். அந்தக் காலத்தி லந்த ஏழைகளுக்கு ஆகாரங் கிடைத்தால் எப்படிப்பட்ட சந்தோஷமுண்டாகும். அந்தச் சந்தோஷத்தைத் தோற்றுவித்தவர்களுக்கு எப்படிப்பட்ட லாபங் கிடைக்கும். இப்படிப்பட்டதென்று சொல்லுதற்கும் அருமையென் றறியவேண்டும்.

சீவர்களுக்குப் பசியதிகரித்தகாலத்தில் சீவ வறிவு விளக்கமில்லாமல் மயங்குகின்றன. அவை மயங்கவே யறிவுக்கறிவாகிய கடவுள் விளக்கம் மறைபடுகின்றது. அது மறையவே புருடதத்துவஞ் சோர்ந்து விடுகின்றது. அது சோரவே பிரகிருதி தத்துவ மழுங்குகின்றது. அது மழுங்கவே குணங்களெல்லாம் பேதப்படுகின்றன, மனம் தடுமாறிச்சிதறுகின்றது, புத்திகெடுகின்றது, சித்தங்கலங்குகின்றது, அகங்கார மழிகின்றது, பிராணன் சுழல்கின்றது, பூதங்களெல்லாம் புழுங்குகின்றன, வாதபித்தசிலேட்டுமங்கள் நிலைமாறுகின்றன, கண் பஞ்சடைந்து குழிந்துபோகின்றது, காது கும்மென்று செவிடுபடுகின்றது, நா வுலர்ந்து வறளுகின்றது, நாசி குழைந்து அழல்கின்றது, தோல் மெலிந்து ஸ்மரணைகெடுகின்றது, கை கால் சோர்ந்து துவளுகின்றன, வாக்குத் தொனிமாறிக் குழறுகின்றது, பற்கள் தளருகின்றன, மலசலவழி வெதும்புகின்றது, மேனி கருகுகின்றது, ரோமம் வெறிக்கின்றது, நரம்புகள் குழைந்து நைகின்றன, நாடிகள் கட்டுவிட்டுக் குழைகின்றன, எலும்புகள் கருகிப் பூட்டுகள் நெக்குவிடுகின்றன, இருதயம் வேகின்றது, மூளை சுருங்குகின்றது, சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது, ஈரல் கரைகின்றது, இரத்தமுஞ் சலமுஞ் சுவறுகின்றன,

மாமிசங்குழைந்து தன்மைகெடுகின்றது, வயிறு பகீலென் றெறிகின்றது, தாபசோபங்கள் மேன்மேலு முண்டாகின்றன, உயிரிழந்து விடுவதற்கு மிகவுஞ் சமீபித்த வடையாளங்களும் அநுபவங்களுந் தோன்றுகின்றன. இவ்வாறு. சீவர்களுக்கெல்லாம் பொதுவாகவே இருக்கின்றன. இவ்வளவு அவத்தைகளும் ஆகாரங்கிடைத்தபோது உண்டு பசிநீங்க நீங்குகின்றன. அப்போது தத்துவங்களெல்லாந் தழைத் துள்ளங்குளிர்ந் தறிவுவிளங்க அகத்திலு முகத்திலுஞ் சீவகளையுங்கடவுட்களையுந் துளும்பி ஒப்பில்லாத திருப்தியின்ப முண்டாகின்றது. இப்படிப்பட்ட வின்பத்தை யுண்டுபண்ணுகின்ற புண்ணியத்துக்கு எந்தப் புண்ணியத்தை யிணையென்று சொல்லலாம். இந்தப் புண்ணியத்தைச் செய்கின்ற புண்ணியர்களை எந்தத் தெய்வத்துக்குச் சரியென்று சொல்லலாம். எல்லாத்தெய்வங்களுக்கும் மேலாகிய கடவுளம்சமென்றே சத்தியமாக வறியவேண்டும். இதனாற் கரணவேதனை சனனவேதனை மரணவேதனை என்கின்ற மூன்று வேதனைகளுங்கூடி முடிந்தவேதனையே பசிவேதனை யென்றும், அகம் புறம் நடு கீழ் மேல் பக்கம் என்கிற எவ்விடத்தும் நிறைந்து எக்காலத்தும் வேறுபடாத மோக்ஷ வின்பமே ஆகாரத்திலுண்டாகுந் திருப்தி யின்பமென்றும் அறியவேண்டும்.

பசியில்லாவிடில் சீவர்கள் ஆகாரங்குறித்து ஒருவரை யொருவர் எதிர்பார்க்க மாட்டார்கள். எதிர்பாராத பட்சத்தி லுபகாரச் செய்கை தோன்றாது. அது தோன்றாதபோது சீவகாருணியம் விளங்காது. அது விளங்காதபோது கடவுளருள் கிடைக்கமாட்டாது. ஆதலாற் பசியுங் கடவுளாற் கொடுக்கப்பட்ட வொரு வுபகாரக்கருவி யென்றே யறியவேண்டும். பசியினால் துன்பப் படுகின்றவர்கள் ஆகாரத்தைக் கண்டகாலத்தி லடைகின்ற சந்தோஷமும் தாய் பிதா பெண்டு பிள்ளை காணி பூமி பொன் மணி முதலானவைகளைக் கண்ட காலத்திலு மடையார்களாயின் ஆகாரமுண்டகாலத்தி லுண்டாகுஞ் சந்தோஷ மெப்படிப்பட்டதாக விருக்கும். ஆதலால் இந்த ஆகாரத்தின் சொரூப ரூபசுபாவங்களுங் கடவுளருளின் ஏகதேச சொரூப ரூபசுபாவங்களாகவே அறியவேண்டும். பசியென்ற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுட்பற்றி யெரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் சீவகாருணியம். பசியென்கிற விஷக்காற்றானது ஏழைகளறிவாகிய விளக்கை யவிக்கின்ற தருணத்தி லாகாரங்

கொடுத் தவியாம லேற்றுகின்றதே சீவகாருணியம். கடவுளியற்கை விளக்கத்திற் கிடமாகிய சீவதேகங்களென்கிற ஆலயங்கள் பசியினாற் பாழாகுந் தருணத்தில் ஆகாரங்கொடுத்து அவ்வாலயங்களை விளக்கஞ் செய்விப்பதே சீவகாருணியம். கடவுளின்பத்தைப் பெறுகின்ற நிமித்தம் தேகங்களிலிருந்து குடித்தனஞ் செய்கின்ற சீவரது தத்துவக்குடும்ப முழுதும் பசியினால் நிலைதடுமாறி யழியுந் தருணத்தி லாகாரங்கொடுத்து அக்குடும்ப முழுதும் நிலைபெறச் செய்வதே சீவகாருணியம். பசியென்கிற புலியானது ஏழையுயிர்களைப் பாய்ந்து கொல்லத்தொடங்குந் தருணத்தில் அப்புலியைக்கொன்று அவ்வுயிரை இரட்சிப்பதே சீவகாருணியம். பசி யென்கிற விஷந் தலைக்கேறிச் சீவர் மயங்குந்தருணத்தி லாகாரத்தா லவ்விஷத்தை இறக்கி மயக்கந் தெளியச் செய்வதே சீவகாருணியம். பசி யென்கிற கொடுமையாகிய தேள் வயிற்றிற் புகுந்து கொட்டுகின்றபோது கடுப்பேறிக் கலங்குகின்ற வேழைகளுக்கு ஆகாரத்தா லக்கடுப்பை மாற்றிக் கலக்கத்தைத் தீர்ப்பதே சீவகாருணியம். நேற்று இராப்பகல் முழுதும் நம்மை அரைப்பங்கு கொன்றுதின்ற பசியென்கிற பாபி யின்றும் வருமே யிதற்கு என்னசெய்வோமென் றேக்கங் கொள்கின்ற வேழைச் சீவர்களது ஏக்கத்தை நீக்குவதுதான் சீவகாருணியம். வெயிலேறிப்போகின்றதே,இனிப் பசியென்கிற வேதனை வந்து சம்பவிக்குமே, இந்த விதிவசத்திற் கென்னசெய்வதென்று தேனில் விழுந்த ஈயைப் போலத் திகைக்கின்ற ஏழைச்சீவர்களுடைய திகைப்பை நீக்குவதுதான் சீவகாருணியம். இருட்டிப்போகின்றதே, யினி யாகாரங் குறித்து எங்கே போவோம், யாரைக்கேட்போம், மென்னசெய்வோமென்று விசாரத்தி லழுந்திய வேழைச் சீவர்களது விசாரத்தை மாற்றுவதே சீவகாருணியம். நடந்து நடந்து காலுஞ் சோர்ந்தது, கேட்டுக் கேட்டு வாயுஞ் சோர்ந்தது, நினைத்து நினைத்து மனமுஞ் சோர்ந்தது, இனி இப்பாவிவயிற்றுக் கென்னசெய்வோ மென்று கண்ணீர் வடிக்கின்ற வேழைகளுக்கு ஆகாரங்கொடுத்துக் கண்ணீரை மாற்றுவதே சீவகாருணியம். பகற்போதும் போய்விட்டது, பசியும் வருத்துகின்றது, வேறிடங்களிற்போக வெட்கந் தடுக்கின்றது, வாய்திறந்து கேட்க மானம் வலிக்கின்றது, வயிறு எரிகின்றது, உயிரை விடுவதற்கு முபாயந் தெரியவில்லை, யிவ்வுடம்பை யேன் எடுத்தோமென்று மனமு முகமுஞ் சோர்ந்து சொல்வதற்கு நாவெ

ழாமல் உற்பாத சொப்பனங்கண்ட வூமையைப்போல் மனமறுகு கின்ற மானிகளாகிய சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்து மானத்தைக் காப்பதுவே சீவகாருணியம். நாம் முன்பிறப்பில் பசித்தவர்கள் பசிக்குறிப்பறிந்து பசியை நீக்கியிருந்தா லிப்பிறப்பில் நமது பசிக்கு றிப்பறிந்து பசியை நீக்குவதற்குப் பிறிதொருவர் நேர்வார். அப்போது அப்படி நாம் செய்ததில்லை, இப்போது நமக்கிப்படிச் செய்வாருமில்லை யென்று விவகரித்துக்கொண்டு தூக்கம் பிடியாமல் துக்கப்படுகின்ற வேழைச்சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்துத் துக்கத்தை நீக்கித் தூக் கம் பிடிக்க வைப்பதே சீவகாருணியம். தேகமுழுதும் நரம்புகள் தோன்றப் பசியினு லிளைத்து உயிரொடுங்கி மூச்சை மூடிய காலத்து அயலாரைக் கேட்கத் துணியாமற் கடவுளை நினைத்துநினைத்து நெருப்பிற்படுத்து நித்திரை செய்யத் தொடங்குவாரைப்போ லடி வயிற்றிற் கொடிய பசிநெருப்பை வைத்துப் படுக்கத் தொடங்கு கின்ற விவேகிகளுக்கு ஆகாரங்கொடுத்து அந்தப் பசிநெருப்பை யாற்றுவதே சீவகாருணியம். நேற்றுப் பட்டினி கிடந்ததுபோ லின் றும் பட்டினி கிடப்பது எப்படி, நாம் வாலியவசத்தா லின்றும் பட் டினி கிடக்கத் துணிவோமாயினும் பட்டினி சகியாத நமது ஏழை மனைவி வயிற்றுக்கு யாதுசெய்வோம், இவள் பசியைக் குறிப்பது பெரிதன்று, வார்த்திப திசையால் மிகவுஞ் சோர்ந்த நமது தாய்தந் தைக ளின்றும் பட்டினி கிடந்தா லிறந்துவிடுவார்களே இதற்கெ ன்ன செய்வோம், பசியினு லழுதழுது களைத்த நமது புத்திரர்களது சோர்ந்த முகத்தை எப்படிப் பார்போமென்று எண்ணி யெண்ணிக் கொல்லன் உலையிலூத மூண்ட நெருப்பைப்போலப் பசிநெருப்பும் பயநெருப்பும் விசாரநெருப்புமுள்ளே மூண்டபடி யிருக்கக் கன்னப் புடையிற் கைகளை வைத்துக்கொண்டு கண்களில் நீர்கலங்க வரு கின்ற வேழைகளுக்கு ஆகாரங் கொடுத்து வருத்தத்தை மாற்றுவ தே சீவகாருணியம். கண் கை கால் முதலிய வுறுப்புகளிற் குறை யில்லாதவர்களாகி ஆகாரஞ் சம்பாதிக்கத்தக்க சக்தியுள்ளவர்களும் பசியால் வருந்தி இதோ படுத்திருக்கின்றார்கள். குருடும் செவிடும் ஊமையும் முடமுமாக விருக்கின்ற நமக்கு ஆகாரம் எந்த வழியாற் கிடைக்கும், பசி யெப்படி நீங்கும், என்று தனித்தனி நினைத்து நினை த்துத் துக்கப்படுகின்ற வேழைகளுக்கு ஆகாரங் கொடுத்துத் துக் கத்தை நீக்குவதே சீவகாருணியம். பசியினுல் வருந்துகின்றவர்க

ளெந்தத் தேசத்தாராயினும் எந்தச்சமயத்தாராயினும் எந்தச்சாதி யாராயினும் அவர்கள் தேசவொழுக்கம் சமயவொழுக்கம் சாதியொ ழுக்கம் செய்கையொழுக்க முதலானவைகளைப் பேதித்து விசாரி யாமல் எல்லாச்சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாய் விளங்குவதை யறிந்து பொதுவாகப்பார்த்து அவரவ ரொழுக்கத் திற்குத் தக்கபடி அவர்கள்பசியை நிவிர்த்திசெய்விப்பதே சீவகாரு ணியம். சன்மார்க்க வொழுக்கத்திற்கு ஒத்த சத்துவவாகாரத்தால் பசிநிவிர்த்தி செய்துகொள்ளத்தக்க மிருகம் பறவை ஊர்வன தாப ரம் என்கின்ற வுயிர்களுக்குப் பசிவந்தபோது பசிநிவிர்த்தி செய்விப் பதே சீவகாருணியம்.

பசியை நிவிர்த்திசெய்துகொள்ளத்தக்க புவனபோக சுதந் தரங்களைப் பெறுதற்குரிய அறிவிருந்தும் பூர்வ கர்மத்தாலு மசாக் கிரதையாலு மச்சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் பசியினல் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்து அந்தப்பசிவருத்தத் தை நீக்கித் திருப்தியின்பத்தை யுண்டுபண்ணுவதற்குக் காரணமாகிய சீவகாருணிய மென்கின்ற திறவுகோலைக்கொண்டுதான் மோட்ச மாகிய மேல்வீட்டுக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து எக் காலத்து மழியாத வின்பத்தை யநுபவித்து வாழவேண்டும். ஆக வில் சீவகாருணிய மென்கின்ற மோட்சவீட்டுத் திறவுகோலைக் கால முள்ளபோதே சம்பாதித்துக்கொண்ட சமுசாரிகள் சரியை கிரி யை யோகம் ஞானம் என்கிற சாதன சகாயங்களை வேண்டாமல் எக்காலத்தும் அடையாத வின்பவீட்டை யடைந்து அவ்வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து நித்தியமுத்தர்களாய் வாழ்வார்கள்.

3391

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 27 | குறிப்பாய்சில | குறிப்பாய்ச்சில |
| 6 | 18 | யாற்றிநீரு | யாற்றினீரு |
| 10 | 7 | தூர்புத்தி | தூர்ப்புத்தி |
| ,, | 13 | தொடங்கிபல தேவர்க்கு | தொடங்கிப்பலதேவர்க்கு |
| 17 | 11 | அவட்கு சேகரித்து | அவட்குச் சேகரித்து |
| 33 | 4 | முத்துபோல் | முத்துப்போல் |
| 34 | 9 | தேடிகுயில் | தேடிக்குயில் |
| 36 | 19 | சலித்துகொட்டாவி | சலித்துக்கொட்டாவி |
| ,, | 33 | யாகுதென்று | யாகுமென்று |
| 37 | 1 | இரங்கினாப்போல் | இரங்கினாற்போல் |
| 38 | 2 | வருத்திவிக்கவும் | வருவிக்கவும் |
| ,, | 7 | ரழியாத | வழியாத |
| 39 | 22 | வளரபின்னும் | வளரப்பின்னும் |
| 40 | 5 | சந்தனமழியகண் | சந்தனமழியக்கண் |
| ,, | 13 | உத்தியோகித்து திரவிய | உத்தியோகித்துத்திரவிய |
| ,, | 14 | தேடிகாணாமல் | தேடிக்காணாமல் |
| ,, | 15 | வருந்திகிரீட | வருந்திக்கிரீட |
| 42 | 3 | வரத்தைகேள் | வரத்தைக்கேள் |
| 43 | 8 | பார்த்துகடவுள் | பார்த்துக்கடவுள் |
| ,, | 29 | பேரிட்டழைத்துபட்டண | பேரிட்டழைத்துப்பட்டண |
| 44 | note | அங்கத்திற் | அங்கத்தின் |
| 57 | 19 | அலக்கழி | அலைக்கழி |
| ,, | 20 | யினிதாமதிக்காது | யினித்தாமதியாது |
| ,, | 21 | மௌனசாலுவ &c. | மௌனச்சாலுவ &c |
| ,, | 29 | நிற்கசாலுவ &c. | நிற்கச்சாலுவ &c |
| ,, | 16 | கண்டன்றிபாரணை | கண்டன்றிப்பாரணை |
| 69 | 13 | இனிதாமதி | இனித்தாமதி |
| 70 | 18 | இறக்கமுறும் | இரக்கமுறும் |
| ,, | 20 | இனிபுருட &c | இனிப்புருட |
| ,, | 28 | இதனினின்றும் | இதனின்றும் |
| ,, | 15 | னென்றுப்பின்னும் | னென்றுபின்னும் |
| ,, | 20 | பொருந்தி | பொருத்தி |
| ,, | 23 | எழுப்பாமலிருந்தாய்ப்பகற் | எழுப்பாமலிருந்தாய்பகற் |
| 73 | 12 | வரும்பூதெய்தி | விறும் &c |
| ,, | 18 | உற்றதெல் &c | உற்றவெல் &c |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 73 | 12 | போலபகை | போலப்பகை |
| ,, | 25 | எப்படிகை | எப்படிக்கை |
| 77 | 11 | சமாச்சார | சமாசார |
| 78 | 7 | போலபிரம | போலப்பிரம |
| ,, | 15 | அபயஸ்தம் | அபயாஸ்தம் |
| 80 | 23 | பெருமைபொருதி | பெருமை பொருந்தி |
| 82 | 3 | கொடுத்து | கொடுத்துச் |
| 83 | 5 | சந்துர்ஷ்டி | சந்துஷ்டி |
| ,, | 12 | தாமதமாயென்று | தாமதாவென்று |
| ,, | 16 | அலர நடுங்கி | அலறநடுங்கிப் |
| ,, | 24 | மாச்சுதே | மாயிற்றே |
| 84 | 3,4 | கன்றிபொல்லாங்கு | கன்றிப்பொல் &c. |
| ,, | 2[illegible] | பதரா | பதரு |
| ,, | 26 | வீமார்ச்சுனன் | வீமார்ச்சுனர்கள் |
| [illegible] | 17 | வைத்து | வைத்துத் |
| ,, | 22 | டணைத்துபக்க &c. | டணைத்துப் &c. |
| ,, | 24 | பொருமை | பொறுமை |
| 86 | 9 | பூர்த்தியாய்சொல் | பூர்த்தியாய்ச் &c. |
| ,, | 15 | யறிய | யறியச் |
| ,, | 16 | மில்லைப் | மில்லை |
| 87 | 2 | இயா | யா |
| ,, | 10 | கையமத்தி | கையமைத்துக் |
| ,, | 24 | வைத்துபந்து | வைத்துப்பந்து |
| ,, | 10,11 | பெற்றுதனது;னெருங்கிதந் தையர் | பெற்றுத்தனது; னெருங் கித் &c. |
| ,, | 14 | ஆண்மிக்கை | ஆண்டகை |
| ,, | 22 | பேசிசொல் | பேசிச்சொல் |
| 89 | 29 | வாழ்த்திபொன் | வாழ்த்திப்பொன் |
| 90 | 19 | படுவதிலாப | படுவதிவிலாப |
| ,, | 28 | விட்டது | விட்டன |
| ,, | 7 | படிக்கு கண் | படிக்குக்கண் |
| ,, | 19 | வந்தித்து தான் | வந்தித்துத் &c. |